இந்துமதம்

என்ன சொல்கிறது?

பாகம் - 4

# இறை நோக்கிய பயணம்...!

'கலாபூஷணம்' திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

உ

# இந்துமதம் என்ன சொல்கிறது?

## பாகம் - 4

## *இறை நோக்கிய பயணம்...*


'கலாபூஷணம்'

திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

B.A. (Cey.), Dip. in Edu.

இந்து சமயபாட முன்னாள் இணைப்பாளர்,

ஆசிரிய ஆலோசகர், மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி, இலங்கை.



ஞானம் பதிப்பகம்

நூல்: இந்து மதம் என்ன சொல்கிறது? பாகம் - 4, இறை நோக்கிய பயணம்....
ஆசிரியர்: 'கலாபூஷணம்' திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்
பதிப்பு: முதலாம் பதிப்பு - 2017
பதிப்பகம்: ஞானம் பதிப்பகம்
(வெளியீடு - 44)

**Book: Indhumatham Enna Solgirathu? Prt - 4 Irai Nokiya Payanam....**
**Author: 'Kalabooshanam' Mrs. Gnanam Gnanasekara Iyar**
**Edition: First Edition - 2017**
**Published By: Gnanam Pathippakam**
**3B, 46th Lane, Colombo 06, Sri Lanka**
**Tel: 0094 11 2586013. Fax: 0094 2362862. Email: editor@gnanam.info**
**Web: www.gnanam. info**

Price: SL Rs. 300/= US $ 5

ISBN: 978-955-8354-71-1

உ

**சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்த**

***யாழ். நல்லை ஆதீன***

***ஸ்தாபகரும் முதல்வரும்***


***எனது மாமனாருமாகிய***

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

**முதலாவது குருமஹா சந்நிதானம்**

(1918 – 1981)

**அவர்களுக்குச் சமர்ப்பணம்**



நாதமணி ஓசை கேட்கும் நல்லையிலே தமிழ்
வேத ஒலி பரவ ஆதீனம் அமைத்த நல்லாசான்
பாதபங் கயம் பணிந்து பரிந்து நன் மனத்தால்
கீதமழை பொழிய எம்சிந் தையிலிருத்துவோம்!

# என்னுரை

வெண்பா

**சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்**
**பத்தி யுறுவார் பயனுறுவார் - அத்திமுக**
**முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்**
**மன்னவனை முன்போற்று வார்**

*- வித்துவசிரோமணி கணேசையர்*

**ஊனாகி உயிராகி யதனுள் நின்ற**
**உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்**
**நானேதும் அறியாமே யென்னுள் வந்து**
**நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்**
**தேனாருங் கொன்றையனே நின்றியூராய்**
**திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்**
**ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்**
**அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.**

திருத்தாண்டகம் - அப்பர்

வாழ்க்கை என்பது பயணம்தான். இப்பயணத்தினை முறைப்படி நகர்த்துவதற்கு ஒரு பற்றுக்கோடாக அமைவதுதான் சமயநெறி. மக்கள் தத்தமது வாழ்வியல் பயணத்தில் நல்லன ஏற்படினும், அல்லாதன இடம்பெறினும், 'யாவும் இறைவன் செயல், அவனன்றி ஓர் அணுவும் அசையாது' எனக் கூறி மனச்சாந்தி அடைகின்றனர், இதனையே மணிவாசகப் பெருமான், 'நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ, இதற்கு நாயகமே' எனப் பாடியுள்ளார்.

எனவே அரிதான மானிடப் பிறவியான வாழ்க்கைப் பயணத் தினை நெறிமுறைப்படி வாழுமிடத்துத்தான் ஆன்ம ஈடேற்றத்தினை எய்தமுடியும். இறைதாளினை எய்துவதற்கு ஒவ்வொருவரும் மனம், மொழி, செயல் இவற்றினால் கிடைக்கப்பெறும்

சக்தியை ஒன்றுதிரட்டி ஆன்மீக சக்தியாக உருவாக்கவேண்டும். அதுவே தெய்வீக அன்பாக மாறிவிடுகிறது. சமய நெறியானது கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் அடங்கிவிடாது. ஒவ் வொருவரது அநுபவம்தான் முக்கியமானது. தூய உணர்வு நிரம்பப்பெற்றவர்கள்தான் கடவுளின் அருளினைப் பெறமுடியும். இறைவனை அடைவதற்கு எளிமையான வழி நெஞ்சுருகி அழுவதுதான் அழுதால் இறைவனின் பாதங்களை எய்தலாம். யாமெல்லாம் பிறந்தவுடன் அழுகின்றோம். அங்ஙனம் யாம் அழாதுவிட்டால் எல்லோரும் அழுவார்கள். பிறந்த பொழுதே யாம் அழுத அழுகைதான் வாழ்வியலை உண்டாக்கியது.

**"யானே பொய் யென் நெஞ்சும்**
**பொய் யென் னன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால்**
**உன்னைப் பெறலாமே.**

(மணிவாசகர் வாக்கு)

எனவே, சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று கருதாது வாழ்க்கைப் பயணத்தில் இயைந்து நெறிப்படுத்துவது சமய நெறிதான்.

இறை நோக்கிய பயணம்..... எனும் இந்நூலில் இறை தாளினை எய்துவதற்கான சில படிமுறைக் கருத்துக்களை எனது சிற்றறிவுக்கெட்டியவரை தந்துள்ளேன். இவற்றில் ஒரு சில துளியாவது ஒவ்வொருவரது வாழ்க்கைப் பயணத்தில் பயன்பெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன், யாவரும் வளமாக வாழ்ந்து துய்த்து இறைநோக்கிய பயணத்தில்... முழுமைத்துவம் பெற வாழ்த்தி வணங்குகின்றேன்.

சுபம்

**– திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்**
**கொழும்பு – 6,**
**இலங்கை.**

✷✷✷✷

# இறை நோக்கிய பயணத்தில்....


| | |
|---|---|
| 01. இந்து நெறி சன்மார்க்க நெறி | 01 |
| 02. ஆட்டுவிக்கும் ஆசைகளை வேரறுத்தல் | 07 |
| 03. இறைநாம மகத்துவம் | 22 |
| 04. உள்ளத் தூய்மையுடனான அன்பு | 33 |
| 05. இறைவழிபாட்டினை ஏற்றுவோம் | 50 |
| 06. அன்னை பராசக்தி வழிபாடு | 70 |
| 07. நல்லொழுக்கம் | 82 |
| 08. மனிதனின் இரண்டு பக்கங்கள்....! | 89 |
| 09. மகத்தான மானுடனாய் மாற.... | 100 |
| 10. தியானம் | 114 |
| 11. விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானம் | 127 |

# 1

# இந்துநெறி சன்மார்க்க நெறி

## 'நன்மார்க்கம் சன்மார்க்கமே'

**தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்**
**பரிசிக்க கீர்த்திக்கப் பாதுகம் சூட**
**குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்குத்**
**தருமுத்தி சார்பூட்டும் சன்மார்க்கம் தானே.**

**இ**றைவனைத் தரிசித்து மகிழ்வுடன் ஏற்றியும் பூவும் நீரும் இட்டு, பூசை வழிபாட்டினை ஆற்றவும், தியானம் செய்வதுடன் இறைவனின் திருப்பாதங்களைப் பணிந்து வணங்குவதுடன், இறைவனின் புகழை போற்றிப் பாடவும், அவரது திருவடிகளை எமதுதலைமேல் சூடிக்கொள்ளவும், சிவனடியார்களைப் பணிந்து வணங்கவும், குருவிடம் பக்தி கொண்டு அவர்களுக்கு பணிவிடை செய்து வாழ்வதனையே கடமையாகக் கொண்டு பூவுலகில் உள்ள மனிதர்களுக்கு பேரின்ப வாழ்வினை பெறும்வழி அமைத்து தரவல்ல, துணையாகவுள்ளது சன்மார்க்க நெறி ஒன்று மட்டுமே ஆகும்.

**இ**ந்துநெறியானது சமரச மனப்பாங்குடன் உலகியலில் வாழ்ந்து 'அன்பே சிவம்' என இறைவனை வழிபாடு செய்து 'எல்லா உயிர்களையும் தம்முயிர் எனப் போற்றி', சேவையினை ஆற்றினால், 'வளமாக வாழலாம்' எனக் கூறுகின்றது. **'சமயம் வாழ்வுடன்'** இரண்டறக் கலந்துள்ளமையால் இந்து சமய நெறியினை சன்மார்க்கம் என்றே வழங்கப்பெறும்.

**சத் + மார்க்கம் = சன்மார்க்கம்** - உண்மை நெறி, உண்மையான முதல்வனை அகமும் புறமும் இணையும் நெறி. இச்சன்மார்க்கம் வாழ்வியல் நெறி. இது எல்லாச் சமயநெறிகளையும் தன்னகத்தே கொண்டு சமயங் கடந்து விரிந்தோங்குகிறது. நட்சத்திர மண்டலங்கள் யாவும் ஆகாயத்திலேதான் அடங்கியுளது. ஆனால் ஆகாயம், அவை யாவற்றிலும் விரிந்து காணப்பெறும். அதுபோல சமயங்கள் யாவும் சன்மார்க்கத்தினுள் அடங்கிவிடும். சன்மார்க்கம் சமயாதீதப் பழம்பொருளைக் கலந்து நிற்கும். ஒவ்வொருவரும் தத்தமது மனப்பக்குவத்திற்கமைய சன்மார்க்கத்தில் பயிற்சி பெறுவர். இதில் செய்யப்பெறும் சாதனங்கள் யாவும் அன்பினால் மட்டுமே செய்யப்பெறும். அன்பின்றி வாழ முடியாது, அதற்கு வழியும் இல்லை. வாழ்வினை முன்னேற்றும் சக்தி அன்புதான். சன்மார்க்கத்தில் ஒளி காட்டுவது அன்பு ஒன்றுதான். எனவே அன்பைக் கொண்டு அன்பு வடிவிலான இறைவனைத் தேடித் தேடி அவனின் திருவடியினை அடைதலே சன்மார்க்க வழியாகும்.

சன்மார்க்க வழிநிற்பவர்களுக்கு அவர்களது முகம் இறைவன் உறையும் திருக்கோயில். சன்மார்க்க வழி செல்லும் அடியார்களின் குறிக்கோள் தெய்வத்தைக் காண்பதாகும். புலன்களை ஒடுக்கி இறைவனே மேலானவன் எனக் கருதி, புறசெயல்களை துறந்து தீவிரமான அன்புடன் கலந்த மனவுறுதியுடன் இருக்குமிடத்து, இறைவனிடமிருந்து ஆனந்தத்தையும், ஞானத்தையும் பெறலாம் என்பதே சன்மார்க்க நெறியாகும்.

அன்பு தீவிரமடையுமிடத்துத்தான் அருள் கிடைக்கும். அருளின் முதிர்வு எய்யுமிடத்து அறிவு தெளிவுபெறும். இந்த ஞானத்தினால் இறை பாதங்களை எய்தமுடியும். சன்மார்க்கத்தின் முதலாவது படிநிலை இறைநம்பிக்கை கொண்டு தனது ஆற்றாமையை எண்ணியெண்ணி மனமுருகி இறைவனிடம் முறையிட வேண்டும். தாளினை அன்புடன் தொழவேண்டும். நெஞ்சுருகி இறைநாம பாராயணம் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்வதற்காகவே எமது நெறியில் பல உருவ தெய்வங்களை வழிபடுகின்றோம். இவை யாவும் எமக்கு அருள் புரியவல்ல நிலையாகும். வாயினால்

பாராணயம் செய்து, மனம் வாக்கினால் அர்ச்சிக்குமிடத்துத்தான் தெய்வானுபவம் பெறலாம். மணம் என்பதனை எத்தகைய முறையில் சொற்களால் வர்ணித்தாலும் விளங்காது ஆனால் பூவொன்றினை முகர்ந்தவுடன் மணம் என்றால் என்ன என்று விளங்கும். அதாவது **தூலத்தினைக்** கொண்டு **சூக்குமத்தினை** விளக்குவது அறிவு ஆகும். இலக்கணங்கள் உவமைஅணி மூலம்தான் சூத்திரங்களை விளக்குகின்றன. அதேபோன்றே தெய்வ தத்துவங்களை அனுபூதிமான்களும் மகான்களும் கலைவடிவமான தெய்வங்கள் மூலம் விளக்கி எமது வழிபாட்டினை எளிமையாக்கினர். அன்பு என்பதனை சொற்களால் விளக்க முடியாது. குழந்தை வடிவம் என்று எண்ணுமிடத்து அன்பினைச் சொரிந்து குழந்தையுடன் இரண்டறக் கலந்து களிப்படைகின்றோம். எனவே எமது சன்மார்க்க நெறியும் அநுபவ நெறியாக வேண்டும் என்பதற்காகவே உருவவழிபாட்டினை இயற்றுகின்றோம். இந்துநெறி சன்மார்க்க நெறி. இது வாழ்வியலை வாழ்வதற்கு வழிவகைகளை அளிக்கும் நெறியாகும். இதனாலேயே சன்மார்க்க நெறி என இந்துமதம் வழங்கப் பெற்றுள்ளது.

சன்மார்க்க நெறியில் முக்கியமானது இறைவனை உருவத்தில் வைத்து வழிபாடு ஆராதனைகள் விழாக்கள் செய்வதாகும். இறைவன் எங்கும் எதிலும் நிறைந்துள்ளான். நிர்க்குணமானவன், என்றால் எல்லா மக்களின் சிந்தனை சக்திக்கும் அது விளங்காது. எவருக்கும் உருவமொன்று எதிரில் இருக்குமிடத்து மனம் அதில் ஈடுபட்டு நிலைக்கும். மனம் ஒன்றில் நிலையாக நின்று தமது சித்தத்தினை தெளிந்து அந்தக்கரணங்கள் அடங்கி அகப்புறமாக தரிசித்த மகான்களால் மட்டுமே, அருவ வடிவமாக இறைவனை வழிபட இயலும். ஆனால் சாதாரண அறிவுடைய பாமரமக்களுக்கு உருவவழிபாடு தேவை. மக்களின் மனதில் எவ்வடிவம் ஆழமாக பதிவாகின்றதோ அதில் தீவிர பக்தி உண்டாகி இறைநம்பிக்கையும் ஆழமாக பதியும். எவ்வடிவில் இறைவனை வழிபட்டாலும் இறையருள் கிட்டும்.

சன்மார்க்க நெறியினை அவரவர் பக்குவத்திற்கு ஏற்றபடி உளப்பான்மைக்கு ஏற்ப யாவற்றையும் பயலுவர். சன்மார்க்க நெறியில் ஒளிகாட்டுவது அன்பு தான்.

**'எப்பரி சாயினும் ஏத்துமின்: ஏத்தினால்**
**அப்பரி சீசன் அருள்புரிவானே'**

சைவ சாதனங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் சித்திநிலை பெற்ற அடியார்கள் தமது காட்சிப் புலமையினால் வடித்த தத்துவ வடிவங்களே எமது சன்மார்க்க நெறியில் வழிபடும் தெய்வங்களாம். சன்மார்க்க நெறியின் இன்னுமொரு சிறப்பு அம்சம் திருவுருவ வழிபாட்டில் ஆராதனைக்குரிய மங்கலப் பொருட்களுடன் **அக்கினிமூலம்** வழிபாடு செய்தலாகும். சன்மார்க்க நெறியில் ஒருவன் பிறந்தது தொடக்கம் தனது காலம் முடியும் வரையும் அக்கினியே சாட்சியாகி அதிலே சங்கமிக்கின்றான். எனவே வாழ்வுநெறி, அநுபவம் சார்ந்தநெறி என சன்மார்க்க நெறிகொள்ளப்படுகிறது.

இன்றைய இளைய தலைமுறையினரிடம் தார்மீக அல்லது அறநியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பினை ஒவ்வொரு பெற்றாரும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஆனால், உரிய முறையில் இவை கடத்தப்படாமையால் இளைய தலைமுறையினர் தகாத செயல்களை ஆற்றுவதிலும், நடத்தைகள் யாவற்றிலும், பல்வேறு சீரற்ற முறையிலும் நடந்து வருகின்றனர். மனப்பாங்கில் விகற்பு நிலையினைத்தான் அதாவது பெரியோரை நிந்தித்தல், பரிகாசம் செய்தல், பிறரின் மனதினை காயமேற்படுத்தக் கூடிய சொற்பிரயோகங்களை உபயோகித்தல் யாவும் மலிந்துள்ளன. உயரிய தார்மீக சிந்தனைகள், செய்திறன்கள், சாதாரண ஆடம்பரமற்ற வாழ்வியல் என்பனவற்றினை உதறித்தள்ளிவிட்டு தாழ்ந்த எண்ணங்களுடன் பகட்டான வாழ்வினைத்தான் விரும்புகின்றனர். எமது பாரம்பரிய கலாசார விழுமியங்களுடன் வாழ அவர்களை சமய தார்மீக ரீதியான செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்ய ஊக்குவித்தல் வேண்டும். இது ஒவ்வொரு இல்லங்களிலிருந்துதான் ஆரம்பிக்க

வேண்டும் அது பெற்றோர்களது தார்மீகப் பொறுப்பாகும். குடும்பம் பிள்ளைகள் இவர்களுக்கிடையே இடைவெளி வரக்கூடாது. அன்பு பாசத்தினால் பிணைக்கப்படல் வேண்டும். குடும்பமொரு கலைக்கூடமாக, சன்மார்க்க நெறிக்களமாக மாறினாலொழிய இளைய தலைமுறையினரை யாம் காப்பாற்ற முடியாமல் போய்விடும். காலம் என்பது நிற்காது ஓடிக்கொண்டே இருக்கும்.

சர்வதேச ரீதியில் இன்று வன்முறையான செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. எவ்வுயிரும் தத்தமது உயிரினைக் காப்பாற்ற எத்தனையோ வழிகளைத் தேடி தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன. ஆனால் ஆறறிவுபடைத்த மனிதன் மட்டும் தம்மைத் தாமே வருத்திக் கொள்கின்றான். இன்று மனித உயிர்களைப் போல் மலிவானது எதுவும் இல்லை என்று ஆகிவிட்டது. இவற்றிற்கு அடிப்படைக் காரணமாகயுளது, மனிதனின், அன்பு எனும் ஆணிவேரினை மனிதமற்ற வன்முறைக் கறையான்கள் இன்னும் எத்தனையோ அரிக்கின்றன.

இல்லங்களுக்குள் அன்பின் பரிமாற்றம், நேரமில்லாமலும், தேவையும் இல்லாமல் போய்விட்டது. ஒளிப்படக்காட்சியில் மனம் லயித்து மனிதம் காட்டுக்குள் போவது போன்று போகின்றது. கணினிமயப்படுத்தலினால் ஒருவருக்கொருவர் கருவிமூலம் பரிமாற்றம் அதாவது சடப்பொருள் வாயிலாக தமது விருப்புகளை பூர்த்தி செய்கின்றனர். தொடர்புள்ள ஒருவர் மீது ஒருவர் காட்டுவது அன்பாகிறது. அந்த அன்பினை தொடர்பில்லாதவரிடத்து காட்டுவது அறமாகியது. அன்பும் அறனும் வாய்த்தால்தான் இல்லறம் வலுவடையும். இன்றைய சமகாலத் தலைமுறையினரை ஒவ்வொரு பெற்றோரும் அன்பினால் கட்டிப் பிணைத்துக் கொள்ளவேண்டும். அதனை எமது சன்மார்க்க நெறி மூலம்தான் செய்யமுடியும்.

மக்களை ஒன்றாக இணைக்கும் ஒரு சாதனம்தான் சமயநெறி. நல்ல வழியில் மக்கள் வாழ்வினை வாழ வேண்டும் என்பதற்காகவே பாவம் - புண்ணியம், நரகம் - சொர்க்கம் போன்றவை யாவற்றிலும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

**"வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்"**

**"சாத்திரங்கள் சம்பிரதாயங்கள் மாறலாம்.**

**வேத வாக்குகள் என்றும் மாறாதவை.**

**வேதத்தை விட்ட அறம் இல்லை.**

**வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உள:**

எமது சன்மார்க்க நெறி வைதீகம் சார்ந்த நெறி.

இந்து நெறியில் கலைகள், கலாசார பண்புகள் வளர்வதற்காக ஏற்படுத்தப்பட்டவைதான் கோயில்கள், வழிபாடுகள், உற்சவங்கள், சடங்குகள் ஆகும். ஒவ்வொருவரின் மனதின் இறுக்கத்தினை போக்கி, அவனது மனதில் நம்பிக்கை, உறுதியை அளிப்பதே கடவுள் வழிபாடு. ஒவ்வொருவரும் தத்தமது சமய நெறிமூலம் வாழ்வியலை துய்ப்பதே முறையாகும் என்பதனை விவேகானந்தர் ஓர் உதாரணம் மூலம் கூறியுள்ளார்.

ஒரு மரம் வளர்ந்து மண்ணிலே நிற்கிறது. மண்ணில் உள்ள சத்துக்களை உறிஞ்சுகிறது. காற்றின் மூலம் கரியமிலவாயுவை எடுத்து சூரிய ஒளியை பயன்படுத்தி உணவு தயாரிக்கிறது. இவையாவற்றையும் பெற்று வளரும் மரம் உரமாகவோ, கரியமிலவாயுவாகவோ, மாறிவிடுவதில்லை. மரமாகவேதான் இருக்கிறது. அதே போன்றே ஒவ்வொருவரும் தத்தமது மதநெறியில் நின்று ஏனைய பயன்மிக்க கருத்துக்களை உள்வாங்க வேண்டும். அதுதான் நியதி. இயற்கையும் இதுவே. எனவே, எமது சன்மார்க்க நெறியில் பொதிந்துள்ள அம்சங்களை கலாசாரப் பண்பாட்டுடன் கலந்து எமது இளம்தலைமுறையினரிடம் கையளிப்பதே எம் ஒவ்வொருவரது முக்கிய குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அப்படி செயற்படுமிடத்துத்தான் ஒவ்வொருவரும் தனக்கும் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் ஏன் உலகத்திற்கும் கூட பயன்மிக்க தான சேவையினை ஆற்ற முடியும். வாழ்வின் பயனினைப் பெறலாம்.

# 2 ஆட்டுவிக்கும் ஆசைகளை வேரறுத்தல்

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.'**

**மே**ற்சுட்டிய குறளின்படி வாழ்க்கையை அதனை உரிய நியதிப்படி வாழ்ந்து துய்ப்பவன் வானுலகத்தில் வாழும் தேவர்களுள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுவான். எனவே வாழ்க்கை என்பது வாழ்வதற்காக என்பதே ஆகும். அரிதான மானிடப் பிறவிதனைப் பெற்றோர் பூவுலகில் பிறந்து வாழ்வியலை எங்ஙனம் ஆற்ற வேண்டுமென்பதை காத்தல் கடவுளரான விஷ்ணு பகவான் அவதாரம் எடுத்துக் காட்டியுள்ளார். கிருஷ்ண பரமாத்மாவாக, இராமனாக இவ்வுலகில் அவர் நடமாடி, வாழ்வின் தர்மநியதிகளை எடுத்துக் காட்டியுள்ளார். இந்து நெறியானது ஒவ்வொருவரும் பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய நான்கு படிநிலைகளை உரிய வகையில் ஒழுகுதலுடன், இந்நிலைகளில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களுடன் வாழ வேண்டுமென வைதீகமான வேதம் கூறியுளது. எனவே இந்து நெறி, வாழ விரும்புபவர்களை, வாழ வேண்டியவர்களை பயனுள்ளதான வாழ்க்கையை துய்த்து வாழ வழிவகுக்கிறது.

எனவே இப்படியான அர்த்தமுடைய வாழ்க்கை எதன் அடிப்படையில் உளது என்ற வினாவை எழுப்பினால் பெறப்படும் விடை யாது? அதுதான் எமது பிறவிப் பிணியினின்று உழன்று

கொண்டிருக்கும் பிறவிப் பெருங்கடலை நீந்தி ஆன்ம ஈடேற்றம் பெறுவதேயாகும். அதனை எங்ஙனம் தீர்க்கலாம் என்பதற்காகச் சரியான நெறியில் தார்மீகச் செயல்களை ஆற்றுவதன் மூலம் புதியதான நெறியற்ற வினைகளை செய்யாது தவிர்க்கலாம். எனவே நாம் செயல்களை ஆற்ற வேண்டுமேயானால் ஒரு பிடிப்பு, ஆர்வம் யாவும் வேண்டும் அதுதான் ஆசை என்பது நிதர்சனமாகும்.

சாதாரண மானுடராகிய ஒவ்வொருவரது வாழ்க்கையையும் தத்தமது விருப்புக்களிலும் ஆசை என்ற கருவியிலும் நம்பிக்கையிலும்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. சராசரி அறிவுடைய எம்மையெல்லாம் கவர்ந்தது மட்டுமன்றி ஆசையானது மனம், மொழி, மெய் இவை மூன்றினாலும் பம்பரம்போல் சுற்றி ஆட்டுவிக்கின்றது. இந்த ஆசை வரம்புமீறிப் பேராசையாக மாறுமிடத்து தவறுகள் இன்னல்கள் யாவும் ஏற்படக் கருவியாகிறது. மனம், மொழி, மெய் மூன்றையுமே ஆசை என்பது திரியாகி கயிறாக மாற்றி வாழ்க்கையில் ஏற்படுகின்ற இயல்பு நிலையினை குழப்பி நிம்மதியையும் குலைக்கின்றது. சாதாரண மானிடரித்தும் தேவைகளைப் பெருக்கும்போது அவையாவும் கிடைக்க வேண்டும் என்ற ஆசையினால் மனம் வியாபித்துக் கொண்டு போகுமேயொழிய கிடைக்கப் பெற்றவையைக் கொண்டு திருப்தியடைந்து, போதும் என்ற எண்ணம் ஆத்மா பிரியும் பொழுது கூட வருவதில்லை. காரணம் நிலையற்ற பௌதீகவியல் காரணிகளின் மீதுள்ள ஆசைகள் யாவும் மாயத்தோற்றமே என்ற அறிவு உதயமாகுமிடத்து அறியாமை என்ற திரை நீங்கி எவற்றிலும் பற்று இல்லாமல் போய்விடும். லௌகிய ஆசை பக்தியாக மாறி இறைவன்பால் திரும்பும் எதனையும் உணர்விற்கு முக்கியத்துவம் அளிக்காது சாத்விகமாக பகுத்தறிவுபூர்வமாக அணுகுமிடத்து ஆசையை கட்டுப்படுத்தும் திறனும், மனதில் உறுதியும் ஏற்படும். ஆசைகளை வரையறைக்குக் கொண்டு வந்தால் துன்பம் குறையும். இடர் ஏற்பட மாட்டாது. தார்மீகநியதியுடன் வாழலாம்.

வரையறைக்கு அப்பாலுள்ள ஆசை நிமித்தத்தினால் செயல்கள் ஆற்ற வேண்டுமென மனம் எண்ணினால் பல தவறுகள் செய்ய நேரிடும். பாவச் செயல்களும் செய்யத் தூண்டப்படும். தவிர, வாழ்க்கையில் தவறுகள், தகாத செயல்கள் ஆகிய இரண்டுமே இல்லாமல் போய்விட்டால் எங்ஙனம் மானிடர்க்கு அநுபவம் கிடைக்கப் பெறும்? மானுடர்க்குரிய உபதேசமாக திகழும் பகவக்கீதையில், கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு முதலில் 'அறியாமையினால் தவறு செய்பவன்தான் மனிதன் செய்த தவற்றினை திருத்திக் கொள்வதற்காகவே கர்மயோகத்தை' உபதேசித்தார். அடுத்துத்தான் பக்தி யோகத்தை உபதேசித்தார். எனவேதான் இயற்கையாகவே தகாத செயற்பாட்டின் மூலம் மனிதன் தன்னை மானுட நேயமாக்கி கொள்வான் என்பதற்காக ஆசை என்பது கருவியாகவுளது.

மானிடராகிய எமக்கெல்லாமுள்ள ஆசைகளை ஆன்றோர் மூன்று பிரிவிற்குள் வகுத்துள்ளார்.

1. மண்ணாசை - இந்த ஆசையுள்ளவன் எதையும் செய்ய அஞ்சமாட்டான் பஞ்ச மாபாதகங்களையும் செய்வான்.
2. பொன்னாசை - நான் எனது என்ற ஆணவத் தடிப்பானவன் ஒருவனுக்கும் பணியமாட்டான்.
3. பெண்ணாசை - காம செயல்கட்கு உளவாதல்.

ஒவ்வொரு சராசரி மானுடனும் ஏதாவதொரு விதத்தில் ஏதாவதொரு ஆசைக்கு உள்ளாகித்தானுள்ளான். இதில் மண்ணாசையும் பொன்னாசையும் மற்ற ஜீவராசிகளுக்கு இல்லை. ஆனால் பெண்ணாசை மட்டும் அவற்றுக்கும் உண்டு.

மண்ணாசைக்கு சிறந்த உதாரணமாக துரியோதனன் திகழ்ந்தான். பஞ்சபாண்டவர்கட்கு ஒரு சிறு துண்டு நிலம்தானும் அஸ்தினாபுரத்தில் கொடுக்காது, தான் மட்டுமே ஆள வேண்டுமெனப் பேராசை கொண்டான். இதனால் சக உதிரங்களை இழந்து தானும் மாண்டான். துரியோதனன் மீதுள்ள பாசம் திருதராஷ்டினனுக்கு மோகமாக மாற அவனை அவரால் சரியான வழியில் நெறிப்படுத்த முடியவில்லை. இதனால் கிடைத்தது என்ன? வாழ்வியலுக்குரிய

யாவற்றையும் இழக்க வேண்டிநேர்ந்தது. அவனால் வாழ்வியலைத் துய்க்க முடியவில்லை. இந்து நெறி கூறும் தத்துவம் யாதெனில் நாம் எல்லாவற்றையும் நினைக்கலாம். ஆனால் அவற்றினை நடத்தி முடிப்பது யாவற்றிற்கும் அப்பாலுள்ள இறைசக்திதான். நாம் வாழும் கலியுகத்தில் மண்ணாசை மூலம் குடும்ப இரத்த உறவுகள் கூட பிரிக்கப்படுகின்றமையைக் காண்கின்றோம். மண்ணாசை கொண்டோரை நிலமடந்தை நகைப்பாள். பூமியானது காலங்காலமாக கடல்கோளால் உள்வாங்கப்பட்டு வந்துள்ளதை புவியியல் ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். மண்ணாசை என்பது பாதகமான செயல் என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்டவே, இராவணனை சங்காரம் செய்த இராமன் அயோத்தியுடன் இலங்கையை இணைக்கவில்லை. இவை எல்லாம் எமது சமயநெறியிலுள்ள பொக்கிஷங்கள்.

அடுத்தது பொன்னாசை - இவ் ஆசையினால் மனம் - மொழி - செயல் எனும் மூன்றினாலும் தகாத முறையில் செல்வத்தை பெறத் தூண்டப்பெறும். தான் செல்வம் மிகுதியானவன் என்பதனை உலகிற்கு எடுத்துக்காட்ட அதனைப் பெருக்க பல தகாத நெறிகட்கு உட்பட்டு பொய், களவு, போன்றவை முன்னிற்கும். தவிரவும் செல்வம் மீதப்பட்டாலும் அதனை எங்ஙனம் பாதுகாக்க வேண்டும் என்ற நினைப்பு அவனது நிம்மதியான தூக்கத்தைக்கூடக் குலைக்கும் எப்போதும் தான் குற்றம் புரிந்தவனாகவும் அவனது மனச்சாட்சி உறுத்திக் கொண்டிருக்கும். செல்வம் அளவுக்கு அதிகமாகக் கிடைத்தாலும் அதனால் கிடைப்பது திருப்தியாக இருக்கமாட்டாது. நித்திரையின்மை, மன உலைவிற்கு ஆளாகி பிணிகட்கும் உள்ளாகவேண்டிவரும்.

செல்வத்தை வழங்குபவன் குபேரன். தெற்குத்திசை இவனுக்குரியது. சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தம்வசம் உள்ளவன். ஏழுமலையானே குபேரனிடம் செல்வத்தை வேண்டி நின்றான் குபேரனுக்கு மூன்று கால்கள். மூன்றாவது கால் குறிப்பது, அதீத செல்வம் பெருக்குபவன் கால் இடறுவான். ஆசையானது பேராசையாகக் கூடாது என்பதுதான் இதன் தத்துவம்.

வள்ளுவர் செல்வத்தைக் கூறுமிடத்து அழிவில்லாத செல்வ மானது பிள்ளைச் செல்வம் என்கிறார்.

**'தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையால் வரும்'**

- **திருக்குறள்: 63**

இங்கே வள்ளுவரின் கருத்தானது நிலையான செல்வம் தம் பொருள் என்று போற்றுவதற்குரியவர் தம் மக்களே ஆவர்.

குபேரனின் பற்கள் 16 தான். மனிதர்கட்கு 32 பற்கள் இருப்பதால் உணவை முழுமையாக அரைத்து சுவைத்து சாப்பிட முடிகிறது. ஆசை மிகுதியால் செல்வம் பெருக்கியவன் உணவினைக் கூட சுவைத்துச் சாப்பிட முடியாது. குபேரனது தோற்றமோ குள்ள வடிவம். அதிலும் பெரிய வயிற்றினைக் கொண்டவன். உடலை அசைத்து உழைக்க மாட்டான். இதனால் வயிற்றுப்பகுதி பெரிதாகி எல்லாவிதமான பிணியும் ஏற்படும். அத்துடன் குபேரனது தலையில் ஒருமுடி கூட இல்லாது வழுக்கையாக இருக்கும். காரணம் செல்வத்தை பெருக்கியவுடன் அதனை எங்ஙனம் பாதுகாப்பது என்ற கவலையால் அவனது தூக்கம், மன அமைதி யாவும் அகன்று அவன் தனது சமநிலைத் தன்மையடைய மாட்டாது யோசனை அதிகமாகி அவனது தலைமுடியாவும் உதிர்வடையும். எனவே செல்வத்தை அளிப்பவனான குபேரனது உருவத்தினை நாம் நினைவில் கூர்ந்து இயற்கையுடன் இணைந்த சமநிலைத் தன்மையுடன் வாழப் பழகுதல் வேண்டும்.

**ஆசையினால் செல்வத்தை பெருக்குவதை சுழித்து**
**சுடும் ஆற்றில் பெருக்கானது செல்வம் –**

**– கந்த – 36**

**அகடுறயார் மாட்டு நில்லாது செல்வஞ்**
**சகடக்கால் போல வரும் – நாலடியார்**
**செல்வம் மின்போலுமென்பார்.**

**தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து**
**வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே,**

- **அருணகிரிநாதர்**

செல்வம் நிலையற்றது, அது திங்களைப் போல் வளரும். தேயும், தோன்றும், மறையும், வரும், போகும். அதனால் மனிதர்களாகிய நாம் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான தான தருமங்களைச் செய்யவேண்டும்.

எனினும் வாழ்வதற்கும் உரிய கடமைகளைச் செய்வதற்கும் செல்வம் வேண்டும். செல்வம் சிறிது இல்லாதவனும் வாழ்க்கையை வாழ முடியாது. தன்னைக் காத்துக் கொள்ளவும் பிறருக்கும் உதவமுடியாதுவிடின் வாழ்க்கையால் பயனில்லை. அதனால், வள்ளுவர்,

**'பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை ஆனால்,**
**அருள் உள்ளார்க்கு அவ்வுலகு இல்லை'**

என பாடியுள்ளார்.

இதனை ஔவையார்,

**'பாடில்லான் வாழ்வும்.....'** என்கின்றார்.

எத்தகைய செல்வம் எம்மிடம் இருந்தாலும் உயிரினை விலைக்கு வாங்க முடியாது. செல்வம் இருவகை. அருட்செல்வம், பொருட் செல்வம். அருட்செல்வம் நிலையானது, இன்பமானது. ஆனால் பொருட்செல்வம் ஈட்டவும், காக்கவும், இழக்கவும், பெருங் கவலையைத் தரும். பொருட்செல்வமானது உடலுடன் பற்றி நின்று விலகிவிடும். ஆனால் அருட்செல்வம் உயிரைப் பற்றி நின்று உயிருடன் ஆன்மஈடேற்றம் வரை சென்று உதவும்.

தேனீக்கள் மலர்களில் தேன் எடுத்து ஒரு கொப்பில் கூடு கட்டி தேனைச் சேர்க்கின்றன. வலிய மக்கள் தேனீக்களை கலைத்து கூட்டை உடைத்து தேனைக் கொள்வர். தேனீக்கள் சிறிது சிறிதாக தாம் சேகரித்த தேன் கூட்டினை கைவிட்டு எங்கோ செல்லும். அது போலவே யாம்பெற்ற செல்வத்தை வலியவர் எடுத்துக் கொள்வர். அருட் செல்வம் பெற்றோர் தமது பொருட்செல்வத்திற்கு தடங்கல் வந்தாலும் கவலைப்படமாட்டார். அவர்கள் தமக்கு கிடைத்த செல்வத்தினால் தான தர்மம் செய்து கொண்டே இருப்பர். எமது ஈகையினால்தான் பாவம் ஒழியும்.

இவைகள் செல்வத்தினால் பெறப்படும் இடர்கள் எனலாம். செல்வத்தை யாம் அன்போடும் அருளோடும்தான் பெறவேண்டும். நேரிய முயற்சி என்ற மூலத்தினால் தான் செல்வத்தைப் பெருக்க முடியும்.

பெண்ணாசையினால் மனம் மொழி செயல் எனும் மூன்றினாலும் தகாதவற்றை செய்யத் தூண்டப் பெறும். இந்திரன் அகலிகை என்ற பெண்மேற்கொண்ட ஆசையினால் முனிவரின் சாபத்தையும் பெற்றான். இது ஆத்மா சம்பந்தமானது. இவ் ஆசையினால் எத்தனையோ சாம்ராச்சியங்கள் அழிந்தன. இராவணன் பல பெண்களைத் தனது இராச்சியத்தில் வைத்திருந்தாலும் சீதையின் மீது ஏற்பட்ட ஆசையினால் பெண் ஆசை கொண்டானென்ற வரலாறாகியது. சிவபிரானுக்கே சாமகான இசையெழுப்பி வரம் பெற்றவன், கலைஞன் எனினும் பெண்ணாசையினால் இராமனால் சங்கரிக்கப்பட்டான்.

விருப்பமில்லாத பெண்ணின் மீதும் பிறர் மனைவியின் மீதும் கொள்ளும் ஆசை எனும் மோகம் பெரும் குற்றமாகும். இதனை ஞானியர் கடிந்துள்ளனர். பெண் மோகத்தினால் எத்தனையோ மகத்தான அரசுகள் சரிந்து வீழ்ந்துள்ளன. கற்புப் பொருந்திய மகளிர் மீது கொண்ட ஆசை எனும் காமம் மனிதனையே அழித்துவிடும். இது வரலாறாகும்.

**'வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்**
**கோல முடிமன்னர் குறைந்ததுவும் – சால**
**மதியுடைய நூற்றொருவர் மாண்டதுவும் ஐயோ**
**சதிவிரகத் தால்வந்த தாழ்வு'**

இராமாயணத்தில் கிட்கிந்தை அரசனான குரங்கினைத் தலைவன் வாலி இறந்ததும், வலிமையுள்ள பல அரக்கர்கள் அழிந்ததும் வெற்றி முடிகளை அரசர்கள் இழந்ததும் இதனால் அவர்களது வம்சாவழி குறைந்ததும் அறிவு கொண்ட துரியோதனன் முதலிய நூற்றுவர் இறந்ததும் கற்புடைய மகளிர் மீது கொண்ட ஆசை என்ற காமத்தாலேயே ஆகும். துறவறம் பூண்டு வனம்

செல்லாமல் இல்லறத்திலேயே வாழ்ந்து பெண்ணாசையை துறந்தார் திருநீலகண்டர். இதனையே பட்டினத்தடிகள் "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லோன்" என பாடினார்.

'பெண்ணாசை நிமித்தம் பிறன்மனை நயத்தல் பெருந்தீது' என்பதனை வெகு அழகாக நாலடியார் சொல்கிறது.

**'புக்கஇடத் தச்சம் போதரும் போதச்சந்**
**துய்க்கும் இடத்தச்சம் தோன்றாமல் காப்பச்சம்**
**எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ**
**உட்கான் பிறனில் புகல்.'**

அடுத்த மனையாள் வீட்டுக்குள் நுழையும் போதும், அங்கிருந்து வெளியேறும் போதும் நடுக்கம். அடுத்தவன் மனைவியை அனுபவிக்கும் போது அச்சம். ஒவ்வொரு கணத்திலும் யார் பார்த்திடுவாரோ என்று மனம் அஞ்சி நடுங்கியபடி இருக்கும்.

இந்திரன் விண்ணவர்க்கு அரசன். எனினும், கௌதம முனிவரின் மனைவி அகலிகைமீது ஆசை கொண்டு அறிவிழந்தான். கௌதமர் அதிகாலை நீராடச் செல்வது வழக்கம். நடுச்சாமத்தில் சேவலைப் போல் தோன்றி இந்திரன் வஞ்சனையில் ஈடுபட்டான். சேவலைப் போல் ஒலி எழுப்பினான். முனிவர் சேவலின் ஒலி கேட்டு நடுச்சாமத்தில் நீராடச் செல்லப் புறப்பட்டுவிட்டார். அச்சமயத்தில் இந்திரன் கௌதமர் முனிவர் போன்ற வேடத்துடன் அகலிகையுடன் இன்பத்தை நுகர்ந்து புறப்பட்ட வேளை முனிவரிடம் அகப்பட்டு, சாபத்துக்கு உள்ளாகிறான். இந்திரன் அகலிகையினால் பெற்ற இன்பத்தைவிட முனிவரால் கிடைக்கப்பெற்ற சாபம் பெரியது. அடுத்தவன் மனைவியை விரும்புவது அறிவில்லாதவன் செயல். அது அறத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட செயல், பாவம். இங்ஙனம் நடக்கிறவன் அறநெறியினின்று விலகி செல்வம், கௌரவம் யாவற்றையும் இழப்பான். அரசனானாலும் ஆண்டியானாலும் பெண்ணாசைக்கு உட்பட்டே உள்ளார்கள்.

**‘அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரிறன் பேதையார் இல்லை’**

- **திருக்குறள்: 142**

என்கிறது திருக்குறள்.

தார்மீக நெறி தீதற்ற முறை அற்றவர் எல்லோரையும் விட பிறர் மனைவியை விரும்பி அவளது வீட்டு வாயிலில் நிற்பவரைப் போன்ற அறிவிலிகள் யாருமே இல்லை.

யாவர்க்கும் பகை புறவுலகில் மட்டுமல்ல ஒவ்வொருவரது அகத்திலும் உள்ளது. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் மார்ச்சரியம், இதில் காமத்தை அடக்குதல் பேராண்மை. பிறன் மனை நோக்காமை சிறந்த அறம். சான்றோருக்கு இது இயல்பான ஒழுக்கம்.

**‘பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறம் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.’**

- **திருக்குறள்: 148**

பேராண்மை என்பதும், மனவலிமை, உறுதி என்பதும் அடுத்தவரின் மனையாளின் மீது மனதை அளிக்காது இருப்பது. பெண்ணாசை என்பது மலைச்சுனையில் ஒருவன் நீராடும் போது அதன் வேகத்தை, அதன் ஆழத்தை அறியமாட்டான். இதில் நீராடினால் அவனுக்கு பரிசாக கிடைப்பது மரணம்தான். அதுபோன்றதே பெண்ணாசை. எனவே, பெண்ணாசை ஏற்படும் இடத்து ‘ஏ, மனம் எனும் குரங்கே நீ அடங்கு’ என மனதைக் கடிந்து கொள்பவன்தான் மனவலிமை கொண்ட பேராண்மை உடையவன் ஆவான்.

சராசரி மானுடர் எவரிடத்திலும் இந்த ஆசைகளில் ஒன்றாவது மேலோங்கி இருக்கும். ஆனால், விதிவிலக்காக துரியோதனன் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்றினாலும் உழன்றான். இது வரலாறு. பெண்ணாசைகொண்டு செயற்படுபவரின் அதர்மச் செயல் பிறவிதோறும் தொடரும். எனவே ஆசையை பக்தியாக்கி நிலையான இறைசக்தி மீது செலுத்துமிடத்து அது

தர்மநெறியினை கடைப்பிடிக்க உதவுகிறது. பற்றற்ற முறையில் ஆசையை வளர்த்தல், வருவது வரட்டும் யாவும் இறைசெயல் என மனத்திருப்தியுடன் கிடைத்ததைக் கொண்டு வாழ்க்கையை வளமாக வாழவேண்டுமென இந்துநெறி கூறியுளது. ஆசை, வாழ்க்கையில் இருக்குமிடத்துத்தான் வாழ்க்கையில் பிடிப்பு, பற்று, கவர்ச்சி யாவும் பெறப்படும். மீன் சேற்றுத் தண்ணீரில் வாழ்ந்தாலும் சேறு அதன் உடம்பில் ஒட்டாது. சேற்றிலிருந்து மீனை வெளியே எடுத்ததும் அது செயலற்றுவிடும். சேறு போன்றதுதான் லௌவீகவுலகு. எனவே யாம் ஒட்டியும் ஒட்டாமலும் வாழப் பழகவேண்டும்.

குற்றவாளியென தீர்ப்பு வழங்கி சிறைத்தண்டனை பெறும் அத்தனை பேரும் ஆசை மிதமிஞ்சி ஏதோவொரு குற்றத்தை செய்துள்ளனர். ஆனாலும் சிறைக்கூடத்திலிருந்து இறை நாமத்தினை கூவி அழைக்கின்றனர். தாம் அதீத ஆசை நிமித்தம் செய்ய தவறினை எண்ணி பதகளித்து தத்தமது குலதெய்வங்கட்கு நேர்த்தி வைக்கின்றனர். மனச்சஞ்சலத்துடன் நிதம் நிதம் வாழ்கின்றனர்.

அறநூல்கள் வாழ்க்கையை எங்ஙனம் நியதிப்படி வாழவேண்டுமென கூறியவற்றையே இந்துமத தர்ம நெறியும் காட்டுகிறது. எமது வாழ்க்கையில் ஏற்பட்ட இடர்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் யாது? என்பதனை அறிவுபூர்வமாக தெளிவுடன் ஆராய்ந்து அதனின்றும் விடுபடும் வழிகளை நெறிப்படுத்தி வாழவேண்டும். ஆசையைக் கட்டுப்படுத்தக்கூடிய வைராக்கியத்தினை நாம் வளர்க்க வேண்டும். வாழ்வினை நியதிப்படி வாழவேண்டுமென்பதற்காக இவ்வுலகில் அவ்வவ்போது ஞானியர் தோன்றி வாழ்வியலுக்குரிய தத்துவங்களை அளித்துள்ளனர். அவற்றினைப் படிப்பதன் மூலம் ஆசையினை வரையறைக்கு உட்படுத்தலாம்.

திருமூலர் ஆசைகளை இல்லாதொழிப்பதற்குரிய அறிவினை பாடல் மூலம் கூறியுள்ளார். யாம் ஒவ்வொருவரும் பெறவேண்டிய அறிவுப்பரம்பலை எளிமையாக விளக்குகிறார்.

**‘உற்றறிவு ஐந்தும் உணர்ந்தறிவு ஆறேழும்**
**கற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்**
**பற்றிய பத்தும் பலவகை நாழிகை**
**அற்று அழியாது அழிகின்ற வாறே.’** - **திருமூலர்: 741**

ஐம்புலன்கள் வழியாகவும் தானே உணர்ந்து பெற்றுக் கொள்ளும் அறிவானது ஐந்தாகும்.

ஆறாவது அறிவான பகுத்தறிவு ஐம்புலன் அறிவின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிவதாகும்.

பெரியோர்கள் அறிஞர்கள் கூறியவற்றிலிருந்து அறிவது ஏழாவது அறிவாகும்.

எட்டாவது அறிவானது சுயமாக கற்றுணர்ந்து அதனின்றும் அறிவினை பெறுவதாகும்.

ஒன்பதாவது அறிவு பட்டறிவு. இது கல்வி கேள்விச் செல்வத்தினால் சிறந்தவர்களுடன் கலந்துரையாடிப் பெறப்படுவ தாகும்.

இந்த ஒன்பது திறன்களை பெறவைத்த பரம்பொருளினை எப்போதும் நினைத்து அவரது கழல்களைப் பற்றி நிற்கின்ற நிலை பத்தாவது அறிவாகும்.

இந்த அறிவு நிலைகளை அறிந்து அதன் வழி நடக்காமல் உயிர்கள் யாவும் இன்னல்களை அனுபவிப்பதற்கு காரணம் அறியாமையும், ஆசையுமாகும்.

எமது ஆசை என்பதுதான் அறியாமை ஏற்படுத்துவதற்கான அடித்தளம். எமது அறியாமையைப் போக்க வேண்டுமேயானால் அதற்கு சில படிமுறைகள் உண்டு. முதலாவது நிலை புலன்களை அகமாகக் கொணர்தல். அடுத்தபடி புலன்களால் எமக்கு நடந்தவற்றினைப் பேசி எண்ணாமல் இருத்தல். கோபம், வெறுப்பு இவற்றினை மனதில் வைக்காது எதுவும் நடக்காதது போல் மனம் அமைதியாக இருத்தல். ஒவ்வொருவரும் தமது நெறியிலும் சிரத்தையுடன் நம்பிக்கையாக இருத்தல். அடுத்தபடி இறைவனிடம் நிலைநிறுத்துவதற்கான பயிற்சி. எங்ஙனம்

இறைவனின் திருத்தாளினை அடைதல் என்பதாகும்.

மனிதர்களாகிய நாமெல்லாம் வாழ்க்கைச் சாகரத்தில் அமிழ்த்தப் பட்டு ஓடிக்கொண்டிருக்கிறோம். இது மாடு செக்கு இழுப்பதைப் போன்றதாகும். செக்கு இழுக்கும் மாடுகளின் கழுத்தில் இருக்கும் நுகத்தடியிலிருந்து ஒரு குச்சி நீட்டிக் கொண்டிருக்கும். அதே தடியில் ஒரு பிடி வைக்கோலும் கட்டப்பட்டிருக்கும். மாடுகள் தன்முன் தெரிகின்ற வைக்கோலைத் தின்பதற்காக கழுத்தை நீட்டி நீட்டி நகருகிறது. மாடுகளால் அந்த வைக்கோலை பிடித்துச் சாப்பிட முடியாமல் நடக்கிறது. வைக்கோல் கிடைப்பதில்லை. ஆனால் செக்கிலிடப்பட்டிருக்கும் எள்ளினை ஆட்டி எண்ணெய்யை ஆக்கிவிடுகிறது. நாமும் செல்வம் சொத்து மனைவி, மக்கள் இவற்றின் அடிமையாகப் பிறந்து ஒரு பிடி வைக்கோலைப் போல் வெறும் கானல் நீரினைப் பின்பற்றி ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆழமாக நோக்குமிடத்து ஆசை இன்பம் என்பது எத்தகைய இன்னல்களுக்கு உட்பட்டது என்பது விளங்கும்

எமக்கெல்லாம் தொடர்ந்து வருகின்ற பிறவி எனும் துன்பத்தைத் தருகின்ற வித்து ஆசை - அதாவது அவாவாகும்.

**'அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**
**தவாஅப் பிறப்புஈனும் வித்து'**

- **திருக்குறள்: 369**

ஆசை என்பது எப்பவும் எக்காலத்திலும் நிறைவினைத் தரமாட்டாது. யாமெல்லாம் ஆசை என்பதினை விட்டொழித்தால் இன்பமான அமைதியான வாழ்வினைப் பெறலாம்.

**'ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.'**

- **திருக்குறள்: 370**

ஆசையின்மைக்கு சமமான சிறந்த பொருள் இவ்வுலகில் இல்லை. ஆசையின்றி இருந்தால் வாய்மை தானாகவே எம்மை வந்து சேரும். ஆசைதான் எம்மையெல்லாம் உளச்சோர்வாக்கி மனவலிமையைக் கெடுத்து வஞ்சிக்கிறது. எனவே, ஆசைக்கு

அஞ்சி வாழ்வதுதான் அறம். துன்பங்களுக்குள் கொடியதுதான் ஆசை. நாம் ஆசை என்ற மாயை வலையில் அகப்பட்டுவிட்டால் அதனின்றும் மீட்டுயர்வது கடினம். எனவே, அறியாமையைப் போக்க ஆசையை விட்டெறிதல் அவசியம்.

**'திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து**
**பருகி யூறலைத் பற்றிப் பதமறிந்து**
**உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே'.**

**- அப்பர்**

ஒருவர் ஆழமான கிணற்றின் விளிம்பில் நிற்குமிடத்து அவதானமாக இருந்தால் ஆழமான கிணற்றினுள் விழுந்து விடமாட்டான். அதேபோன்று அளவுடன் வாழ்க்கையில் ஆசையை வளர்த்தல் அவசியமாகிறது. தித்திக்கும் தேன்கூட அளவு மீறினால் தெவிட்டும். ஆனால் இறைவன் மீது செலுத்தப்பெறும் ஆசை பக்தியாகி பின்பு தியாகவுணர்வும் ஏற்பட பயன்மிக்கதான வாழ்வாக மலரும் தாயின் மடியின் மீதுதான் உண்மையான பேரானந்தத்தினைப் பெற முடியும். அதேபோன்று இந்துநெறி படிப்படியாக வாழ்வதற்குரிய தர்ம நியதிகளை கூறியுள்ளது. மதம்பிடித்த யானை தனது மதத்தினைக் கொண்டு மரங்களை அடியுடன் பிடுங்கி துவம்சமாக்க, அதன் மதத்தினை அடக்க பாகன் அங்குசத்தினால் அதன் தலையில் குத்துவான். யானையின் மதம் முறிவடைந்தவுடன் அது சாந்தமாகும். அதேபோன்று ஆசைகள் வரம்புமீறி பேராசையாக வளருமிடத்து விவேகத்தின் துணையுடன் தடுத்தோமேயானால் வாழ்வு பயனுள்ளதாக அமையும். ஆசை மேலோங்க எண்ணங்களும் விரிவடைந்து தகாத செயல்களை மனம் மொழி மெய்யினால் செய்யத் தூண்டப் பெறும். எனவே மனம் மொழி மெய்யினால் அறிவு பூர்வமாக தார்மீக நெறியினை கடைப்பிடிக்குமிடத்து அவன் தனக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாகவும் மனிதம் கொண்டனவனாகவும் ஏற்றப் பெறுவான். அடக்கியாளும் ஆசையினை மனஉறுதியுடனும், விவேகத்தின் துணையுடனும் கட்டுப்படுத்துமிடத்து மாசில்லாத

மனமும் அமைதியும் சாந்தமும் அடையப்பெறும். வாழ்வும் பயன்மிக்கதாக அமையும்.

ஆசையை விட்டால் மனதில் இறைவன் அமர்ந்து ஆனந்தம் அளிப்பான்.

**'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடு டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்த மாமே.'**

**- திருமூலர்**

ஆசையை முற்றாக விட்டால்தான் ஆனந்தம் பெறப்படும். ஆசையை துறந்த மனம் மழைநீரில் நனைந்த உடம்புபோன்று இதமாக இருக்கும். மனதில் புத்துணர்வு ஏற்பட அட்டமா சித்திகள் கைவரப் பெறும். ஆசை என்பது காட்டாறு போன்றது. கரையை மீறிம்போது திசைகூட மாறிப்போகும். பிறவிப் பெருங்கடனின்றும் நீங்க வேண்டுமாயின் ஆசையை விட வேண்டும். ஆசையின் உந்துதலினாலேதான் திரிகரண சுத்தியின்றி தடுமாறுகின்றோம்.

இறைநாமத்தினை பாராயணம் செய்யுமிடத்து எம்மிடம் ஆசை விலகி திரிகரண சுத்தி மேம்படும் என்பதனை திருமூலர் பாடியுள்ளார்.

**'நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை**
**ஏமமோ ராயிரத் துள்ளே இசைவீர்கள்**
**ஓமமோ ராயிரம் ஓதவல் வாரவர்**
**காமமோ ராயிரம் கண்டொழிந் தாரே.'**

ஆயிரம் திருநாமங்களால் இறைவனைப் போற்றி வழிபடுங்கள். ஆதலால் ஓராயிரம் சுகங்களைப் பெறலாம்.

உயிர்கள் யாவும் மூன்று வகையான குற்றங்களினால் துன்பப்பட்டு வருந்துகின்றன. காமம் (பேராசை), வெகுளி (கோபம்), மயக்கம் (அறியாமை) இவற்றில் மூழ்கி மயங்கிக் கிடக்கின்றன. உயிர்கள் பிறவித் துன்பத்திலிருந்து நீங்க முடியாதுள்ளது. எனவே இம்மூன்று குற்றங்களை தவிர்க்குமிடத்து எமது வாழ்வில்

ஆனந்தத்தையும் மனஅமைதியையும் பெறமுடியும். எமது வாழ்வு என்ற காலத்தை எம்மால் நிர்ண்ணயிக்க முடியாது. எனவே, யாம் வாழும் காலத்தினை பயனுடையதாகவும், அர்த்தமுடையதாகவும் ஏற்படுத்துதல் முக்கியம்.

**மூன்றுஉள குற்றம் முழுதும் நலிவன**
**மான்றுஇருள் தூங்கி மயங்கிக் கிடந்த**
**மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்**
**மூன்றினுள் பட்டு முடிகின்ற வாறே.**

சிரசின்மீது மனதை நிறுத்தி ஞான சாதனை செய்யுமிடத்து ஆயிரம் ஆயிரம் ஆசைகளும் விலகிப் போகும். மண்ணில் கலங்கிய நீர் போன்றவர்கள்தான் மானுடர்களாகிய நாம். கலங்கிய நீரில் சேறு கலந்திருப்பதுபோல் எமது மனம் லௌகிய ஆசையினால் கலங்கி இருக்குமிடத்து. மனம் திரிகரண சுத்தியுடன் வாழப் பழகிக் கொண்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்று கூறுகிறது இந்து சமய நெறி.

# 3 இறைநாம மகத்துவம்

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலும் வைகலும்**
**எண்ணிய நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை'**

**இ**ங்ஙனமாக கூறி வாழ்த்தினாலும், மானிடப் பிறவிதனை பெற்ற யாவருமே, என்றோ ஒருநாள் இவ்வுலகினை விட்டு நீங்கத்தான் போகின்றோம். மானிடர்க்கு இவ்வுலகில் இருக்கும் வரைதான் சிறப்பு. அவர்களது பெயர் சிறப்புகள் யாவும் பேசப் பெறும். பிறப்பும் இறப்பும் இலாதவர் இறைவன் ஒருவரே. "பிறவாயாக்கை பெரியோன்" என்பது இளங்கோ அடிகளார் வாக்கு. "பிறப்பிலி இறப்பிலிபிறங்க லரசன்றன்மகளார்" என்பது வில்லிபுத்தூரார் வாக்கு.

ஆனால் இறைநாமமோ என்றும் அழியாமல் நிலைத்து நிற்கின்றது. யாமெல்லாம் ஏன் இறை நாமங்களை உச்சரிக்கின்றோம். நினைத்த செயல்கள் யாவும் செவ்வனே நடந்தேற இறை நாமத்தினை அர்ச்சிக்கின்றோம். இவையெல்லாம் ஏன்? எதற்காக என்று நாமே வினாவினை எழுப்பிப் பார்க்கலாம்.

இறை நாமமோ என்றுமே நிலையாக மகத்துவத்துடன் இருப்பதற்கு இது யாரால் உண்டு பண்ணப்பட்டது? சப்தரூபமாக - நாத ரூபமாக இருப்பவர் இறைசக்தி மட்டுந்தான். இறைவனின் சப்தம் பிரணவரூபமான ஓங்காரம்.

ஓங்காரம்தான் முதன் முதலில் உண்டான ஒலி நாதமாகும். நாதத்தின் மூலமாகத்தான் யாவும் பிறந்தன.

இதனை அருணகிரிநாதர்.

'நாத விந்து கலாதி நமோ நம' எனப் போற்றுவர்.

ஓம் என்பது அ, உ, ம என மூன்று எழுத்து சேர்ந்ததாகும் என்றாலும் ஓம் எனும் பிரணவத்திற்கு அகரம், உகாரம், மகரம் இறுதியில் அரை மாத்திரையாகும். அரை மாத்திரை என்பது இறுதியில் முடிப்பது.

அகரத்தில் பூ என்பது இருக்கு வேதமும், பிரம்மாவும், எட்டு வசுக்களும், அகரம் சிவப்பு நிறமுடையது. அக்கினியும், காயத்ரீயும், கங்கையும், காலை நேர ஓமமும் இதில் அடங்கியுள்ளன.

இரண்டாவதாகிய 'உ'காரத்தில் 'புவ' என்பது விஷ்ணுவும், சந்தஸ் (ஒலி) வகையும், யசுர் வேதமும், யமுனா நதியும், தட்சிணாக்கினியும், மத்தியான ஓமமும் அடங்கியுள்ளன. உகாரம் சூரிய பிரகாசமாகும்.

மூன்றாவதாகிய 'ம' காரத்தில் 'சுவ' என்பதும், சாமவேதமும், ஆதித்தியனும், மகேஸ்வரனும், சரஸ்வதியும், மாலைநேரம் செய்யும் மூன்றாவதான ஓமமும், அதர்வண வேதமும் அடங்கி யுள்ளன. மகாரம் மின்னல் போல் ஒளிர்வது.

கடைசியில் உள்ள பாதி மாத்திரை சந்திரலோகத்தைச் செல்வது விராட் புருஷனும், சப்யம் எனும் அக்னியும், அதுத்ரு எனும் நதியும், ஓமங்களை வால் பாகமாகக் கொண்டுள்ளதுமாகும். இது வெண்ணிறமுடையது.

உண்டானதும், உண்டாகின்றதுமான அனைத்தும் 'ஓம்' காரந்தான். சகல பூத உலகமும் ருத்திரன் ஆவார். அந்த ருத்திரருக்கு 'ஓம்' காரம் பிராணன். எனவே முதல் எழுத்து அகரம் படைத்தலையும் (பிரமா) உகரம் காத்தல் கர்த்தாவான (விஷ்ணு) சிவபிரான் மகரத்தினாலும் குறிக்கப்படுகின்றதால் அ நாதத்தின் தோற்றம், உ என்பது நிற்றல், ம் என்பது ஓசை ஒடுங்குதல் ஆகும்.

ஓம் என்பது சிவனது பிரணவம். சக்தியின் பிரணவம் ஹரீம் பிரளயத்தின் பின்னர் ஓம் எனும் சிவநிலை ஹரீம் என்ற

அத்திபாரத்திலிருந்துதான் அண்ட சராசரங்கள் அனைத்தும் மேலெடுக்கப்பட்டுள்ளன. இதனாலேயே மந்திரங்கள் 'ஓம்' என்ற ஒலியுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. திருமூலர் 'ஓம்' எனும் ஓங்காரந்தான் யாவுமே என விளக்கியுள்ளார்.

**'ஓ மெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி**
**ஓ மெனும் ஓங்காரத்துள்ளே உரு அரு**
**ஓ மெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்**
**ஓ மெனும் ஓங்காரம் ஓண்முக்தி சித்தியே.'**

ஓங்காரத்தினுள்தான் உருவங்கள் யாவும் அடங்கியுள்ளன. இந்த உலகியலில் எவ்வளவோ பேதங்கள் யாவும் இந்த ஓங்காரத்தினுள் அடங்கியுள்ளன. இந்த ஓங்காரமே ஒளி மிகுந்த சித்திகளை மட்டுமன்றி பேரின்பமயமான முக்திகளையும் தரவல்லது. மேலும் இந்த ஓங்காரத்தினுள்தான் இவை அடக்கம். இந்த உலகிலுள்ள அசையும், அசையாத பொருள்கள் யாவும் இந்த ஓங்காரத்தின் மூலம் வெளிவந்துள்ளன.

சரம் - அசையும், அசரம் - அசையாத பாசப் பிணைப்பினால் கட்டுண்ட உயிர்களும் ஓங்காரத்தில்தான் உள்ளன.

ஓம் எனும் ஓங்காரத்தின் 'அ' எனும் ஒலி நமது தொண்டை யின் அடிப்பாகத்திலுள்ள குரல் நாண்களினின்று தோன்றுகிறது. உ எனும் உகாரம் உதடுகளைக் குவித்துச் சொல்லப்படுகிறது.

உதடுகள் சேரும் பொழுது 'ம்' எனும் ஒலியில் அது முடிவடைகிறது. இம்மூன்று எழுத்துக்களும் விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களையும், காயத்ரீ மந்திரமான பூ, புவஹ, சுவஹ என்ற மூன்று உலகங்களையும், பூவுலகு, (அக்கினி கடவுள்) இடையுலகு, (இந்திரன்) விண்ணுலகு, (வருணன்) என்ற மூன்று உலகங்களையும் குறிக்கின்றன. ஓம் எனும் மந்திரத்தை உச்சரிக்கையில் ஓம், பிரணவம் அதாவது இறைவனின் மகிமையைக் குறிக்கும். வேத மந்திரங்களின் சாரம் அனைத்தும் 'ஓம்' என்ற எழுத்தில் அடங்கியுள்ளன. இறைவன் 'ஓம் அத; என்ற ஒலிகளை எழுப்பிய பிறகே சிருஷ்டியை தொடங்கினான்.

எனவே எதனை தொடங்குவதற்கு முன்பும், 'ஓம்' என்று கூறுவது மங்கலமானதாகக் கருதப்படுகிறது. எனவே சர்வவியாபியான சிவபிரான் ஓங்காரம்தான். மும்மூர்த்தியாகிய சிவரூபத்தின் பிஜாஷரம் ஓம் காரமாகின்ற நாத ஸ்வரூபமாக இவ்வுலகினை இயக்குகிறது. நாம் எதனை எழுதத் தொடங்கும் பொழுதும் ஓங்காரத்தின் சுருங்கிய வடிவமான 'உ' என்ற எழுத்தினை குறிப்பிட்டே தொடங்குகின்றோம். ஓம் என்ற வடிவமாகிய வட்டமும் வரிவடிவமாகிய கோடும் சேர்ந்தது. இதில் வட்டவடிவம் திருவருட் சக்தியையும், வரிவடிவம் சிவத்தையும் குறிக்கும். இது பிள்ளையார் சுழி எனவும் வழங்கப் பெறும்,

**'ஏழினில் ஏழாய் இகழ்ந்து எழுத்து ஏழ் அதாய்**
**ஏழினில் ஒன்றாய் அழிந்து அமைந்து ஒன்றாகி**
**ஏழினில் சன்மார்க்கம் எங்கள் பரம்சோதி**
**ஏழி இசை நாடகத்தே இசைத்தானே'**

ஏழு பிறப்புக்களும் எம்முள்ளேயுள்ள ஏழு எழுத்துக்களுடன் தொடர்புபட்டிருக்கும். அ, இ, உ, எ, ஓ, நம், ஓம் எனும் ஏழு எழுத்துக்களும் ஒடுங்கி அகரத்தில் இருக்கும்.

இறைநாமத்தின் மகிமையினை திருமூலர்,

**'ஆர்த்த சுடர் அன்ன ஆயிர நாமமும்**
**போந்தும் இருந்தும் புகழு கின்றேனே'**

இறைவன் மெய்ந்நெறி அருளினான். அந்நெறியானது நாம ரூபத்தினை வற்புறுத்துகிறது. கவரிமான் இயல்பாகவே கஸ்தூ ரிமணம் வீசுவது போன்று, எனது மனம், புத்தி, சித்தம் யாவிலும் சுடர்போன்ற நாமத்தினை புகழுகின்றேன்.

இதனை மாணிக்கவாசர்,

எல்லோரும் இறைவனை அவரவர் இயன்றவாறு போற்றுங்கள், புகழுங்கள், ஏற்றுங்கள் எங்கும் எவற்றிலும் அருள் ஆற்றுவான்.

**'ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமி லாற்காயிரம்**
**திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'**

சப்தஸ்வரூபமான இவ்வுலகில் மனிதன் மேன்மை

யடைவதற்கு ஒரேயொரு காரணம் பேசுகின்ற சக்தி. அந்த பேசும் சக்தியே பாஷை. அழியும் மனிதன் உருவத்துடன் கூடியவன். அழியாதமொழி உருவமற்றது. அருவம் உருவத்துடன் இணைந்து நிற்கிறது. சிவபிரான் எமது வழிபாட்டிற்காக அருள்பாலிப்பதற்காக எழுந்தருளி இருப்பது சிவலிங்கமாகும். இது உருவம், அருவம் இணைந்த அருவுருவத்திருமேனியாகும்.

வாழ்க்கையில் பேச்சு அதாவது வாக்குத்தான் முக்கியம். வாக்கின் இருப்பிடம் நா வாகும். இறைவனே நாவிற்கு ஆதாரமாகவும், ஆதரவாகவும், உதவிக் கரமாகவும் உள்ளார். அதனாலேதான் பேசும்பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வாக்கு முக்கியமானது. ஒருவன் செல்வத்தினாலோ கல்வியினாலோ வாழ்க்கையில் வெற்றி பெறமுடியாது. நாவின் நலத்தினால் தான் உயர்வு பெற முடியும். நா நலமாக இருந்தால், எல்லா நலன்களும் தேடி வரும். நாம் பேசாத வார்த்தை எமக்கு அடிமை. மாறாக பேசிய வார்த்தைகளுக்கு நாம் அடிமை. காரணம் நாம் நாவினால் பேசும் சொற்கள் யாவும் விளைவுடையவை. விளைவினை அறிந்து பேசப் பழகுதல் வேண்டும். காரணம் வேதங்கள், வேதாங்கங்கள், புராணங்கள், கலைகள், மந்திரங்கள், சுலோகங்கள் யாவும் வாக்கு மூலம். இவை யாவும் வாக்கு மூலமாகத்தான் வெளிப்படுகின்றன; உபதேசிக்கப்படுகின்றன. குருசீட முறையில் பரப்பப்படுகின்றன. வாய்மையே கடவுள், சத்யமே உயர் தெய்வம் உண்மையை மட்டும் பேசுபவன் தெய்வீகத் தன்மை பெறுகிறான். படைத்தற் கர்த்தா பிரம்மாவின் சக்தி வாகேஸ்வரி என அழைக்கப்படுகிறாள். திருவள்ளுவர் நாவின் சிறப்பினை பதிவு செய்துள்ளார்.

**'யாகாவார் ஆயினும் நாகாக்க: காவாக்கால்**
**சோகப்பர் சொல் இழுக்கப்பட்டு.'**

ஒவ்வொருவரும் எவற்றையும் அடக்காது விட்டாலும், தீய சொற்களை பயிலாது விடல் வேண்டும், பேசும் பொழுது சொற் குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம்.

மேலும்

**'தீயினால் சுட்டபுண் உள் ஆறும்: ஆறாதே**

**நாவினால் சுட்ட வடு'**

தீயினால் சுடப்பட்ட புண் உள்ளே ஆறும். ஆனால் நாவினால் சுட்டவடு ஒருபோதும் ஆறாது.

பெயரின்றி எப்பொருளும் மனதில் தோன்றமாட்டாது. பெயரின்றி நாம் ஒன்றையும் நினைக்கமுடியாது. பெயரும் பொருளும் பிரிக்க முடியாதது. ஒவ்வொரு பெயரின் பின்னால் உருவம் காணப்படுகிறது. மாம்பழம் என்று சொன்னால் அந்தப் பெயரினை அடுத்து அக்கனியின் உருவம் நினைவில் தோன்றுகிறது. பார்வதி பரமேசுவரரைப் போல சொல்லையும், பொருளையும் பிரிக்க முடியாது. எது திரும்பத் திரும்ப தெளிந்த அறிவுடன் பலன்களைப் பெறுவதற்காக சொல்லப் படுகின்றதோ அது நாமமாகும். பொருள் அறிவும் அதன் பலன்களை அறிந்துகொள்வதற்கும் நாமம் உபயோகமாகிறது.

'நாம' சப்தம் வணக்கத்தையும் குறிக்கிறது. வணக்கம் என்ற சொல்தான் மகிமை பொருந்தியது. உயர்ந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே எமக்கு குழந்தை பிறந்தவுடன் செய்யப்படும் முதற் சடங்கானது. பெயர் வைப்பதாகும். நாம் செய்யப் பெறும் சடங்குகளில் முதன்மை கொண்டது இதுவாகும். இதனை, 'நாம கரணம்' என வழங்குவர். அதுவும் பிறந்த குழந்தைக்கு இறை நாமம் தொடர்பான பெயரினை வைப்பது தான். நியதியாகவுளது. இங்ஙனமே எமது மூதாதையர் வாழ்ந்துள்ளனர். இங்ஙனம் நாமம் சூட்டும் பொழுது எப்பொழுதும், எந்த சந்தர்ப்பத்திலும் இறைநாமங்களை உச்சரித்து ஒலி எழுப்புவதனால் சாத்வீகமான சூழல் உருவாகி, உளத்தினையும் வளம் பெற வைத்து சாந்தமடையச் செய்கின்றது.

எமது மூதாதையர்களின் நாமங்களை நாம் நோக்கினோமானால் அவையாவும் இறை நாமத்துடன் சம்பந்தப்பட்டே இருக்கும். அதனாலேதான் இந்துசமய பண்பாட்டு அம்சமாகக் கருதப்பட்டு

வருவது, குழந்தைகட்கு பரம்பரை ரீதியில் ஏற்பட்டு வந்த பெயர்களையே வைப்பது மரபாகும். இதற்குள் ஒரு அம்சமாகத் திகழ்வது அவரவர் தத்தமது பரம்பரையினர் ஆற்றிவந்த தானதர்மங்கள், அவர்களது நடத்தைகள், மனப்பாங்குகள் கிடைக்கப்பெறும் என்ற அசையாத நம்பிக்கைதான். இதுவொரு யதார்த்தமான நியதியாகும். உதாரணமாக ஒரு பேரன் பல கல்விச்சாலைகள் அமைத்ததுடன், பலவகையான தான தர்மங்களையும், சமூகப் பணிகளையும் ஆற்றியிருப்பார். இப்படியான பேரனின் பெயரினை பிள்ளைக்கு வைக்குமிடத்து, அப்பிள்ளையின் செயற்பாட்டினால் பரம்பரையினரின் பெருமைகள் சமூகத்தவரிடம் அளிக்கப் பெறும். ஆண் குழந்தைகளாயின் சிவபிரான், விஷ்ணு, விநாயகர், முருகப்பெருமான் இன்னும் கிராமியக் கடவுள்களின் பெயர்களையே வைப்பர். தெய்வங்களின் பெயர்களைக் கொண்டு பிள்ளைகளை அழைக்குமிடத்து, தெய்வங்களின் அருட்கடாட்சமும், சௌபாக்கியமும், வாழ்வியலில் கீர்த்தியையும் பெற வைப்பதுடன், வாழ்வியலினை தர்ம நெறியினின்றும், வழுவாது நியதியுடன் வாழ்வதற்கு இறைவன் அருள் புரிவார். பிரகலாதன் விஷ்ணு நாமத்தினை மட்டுமே பாராயணம் செய்துள்ளான். வேத இதிகாச புராண காலத்திலிருந்தே குழந்தை பிறந்ததும் நாமம் சூட்டும் வைபவம் பெரும் சடங்காக எடுத்தமைக்கான சான்றுகள் உள்ளன.

தசரதன் தனது மகன் ஸ்ரீராமனுக்கு தனது பேரனின் (தசரதன் - அஜன் - ரகு - திலீபன் சக்கரவர்த்தி) பெயரான ரகுராமன் என்ற நாமத்தினையே சூட்டினார். ரகு என்பவன் 100 அசுவதேயாகம் ஆற்றிய திலீபன் சக்கரவர்த்தியின் பெயரையும், புகழையும் நிலைநாட்டியவன். ரகு சிறந்த வீரன் நீதி பொருந்தியதுடன் சிறந்த பண்பாளன். எனவே அவனைப் போலவே தனது ராமன் வரவேண்டுமெனவும், ராமனால் திலீபனின் அரசாட்சி சிறப்பினையும் உலகம் அறியப் பெறவேண்டுமென்ற அவாவினால் தனது பேரனாரின் நாமத்தைச் சூட்டினார். ஸ்ரீராமன் சாதாரண மானுடப் பண்பாளனாக வாழ்ந்தது மட்டுமன்றி ரகுபோன்று மகா வீரனாக

திகழ்ந்தமையினால் ஸ்ரீராமன் என்ற நாமத்தை விட ரகுராமன் என்ற நாமம் நிலைபெற்றுள்ளது. மகாத்மா காந்தி அடிகள் தனது இறுதி மூச்சு நிற்குமிடத்துக் கூட அவரது மனம், மொழி இரண்டினாலும் நாம பாராயணமாக இருந்தது, 'ரகுபதிராகவ ராஜாராம்' என நாம பாராயணம் செய்து கொண்டே அவரது ஆத்மா அடங்கியது.

நாம் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்த சிந்தனையுடன் எல்லாம்வல்ல இறை தாளினை எய்துவதற்கு எளிதான வழி கலியுகத்தில் மட்டுமே உண்டு. ஏனைய யுகங்களில் தவம், யாகம் முதலியவற்றால் மட்டுமே இறைசக்தியை உணர முடியும். ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கலியுகத்தில் கடவுளை உள்ளமுருகி திரிகரண சுத்தியுடன் அவனது நாமங்களை பாராயணம் செய்தாலே போதும் எமக்கு அமைதி, அறிவு, சௌபாக்கியம் ஆன்ம ஈடேற்றம் கிட்டும். இந்நெறியினை பின்பற்றியே சைவ அடியார்களும், ஆழ்வார்களும் வாழ்ந்து காட்டியுள்ளனர். சமய குரவர் இறைவன் இறைவியை மட்டுமே பாடியுள்ளனர். ஆனால் அவர்கட்கு பிற்பட்ட அடியார்கள் பல தெய்வங்களை மட்டுமன்றி கிராமிய தெய்வங்களை போற்றி பாடல்களை பாடியுள்ளனர். அதுமட்டுமன்றி இறை நாமத்தை போற்றிப் பாடி பல அரிய செயற்கரிய செயல்களையும் ஆற்றியுள்ளனர். இதனால்தான் பக்தி இலக்கியமானது இறைவனை அன்பு என்ற பாசத்தினால் பிணைத்ததாகும்.

இறைவன் எள் அகத்து எண்ணெய் போல் எல்லா உயிர்களிடத்தும் மறைந்துள்ளார். அத்துடன் பாலின் கண் நெய் போல எல்லா சீவராசிகளின் உடலுடன் ஒன்றியுள்ளார். பழத்தின் ரசம் போலவும், கடல்நீரில் உப்பு எங்கும் செறிவாயுள்ளது போலவும், வெப்ப நீரில் சூடானது வியாபிப்பது போலவும் இறைவன் நிறைந்துள்ளான். இறைவன் பரோபகாரி, யாமெல்லாம் கேட்காமலே காலமறிந்து அருளினை பொழிந்த வண்ணமாகி இருக்கின்றார். இதனை மணிவாசகர் திருவாசகம் மூலம் சிறப்புற கூறியுள்ளார்.

**“வேண்டத் தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவாய் நீ**
**வேண்டும் அயல் மாலுக்கு அரியோன் நீ**
**வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீ யாது அருள் செய்தாய்**
**யானும் அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்**
**அதுவும் உன்தன் விருப்பு அன்றே”.**

ஒரு தாய்ப் பசு தனது கன்றினை ஒருமுகமாக தேடுவது போன்று இறைவன் பேரொளியைக் காண வேண்டும் என்ற நினைப்பு எப்பவும் இருக்க வேண்டுமேயானால் இறைநாம பாராயணம் செய்வதை நிறுத்தக்கூடாது. இங்ஙனமாக நாம் இயங்குமிடத்து உருவமும் நிழலும் எங்ஙனம் இணைந்து இருப்பது போன்று இறைசக்தி எம்முடன் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். எமது உடலாகிய மரத்தில் பல பாவப் பறவைகள் அமர்ந்துள்ளன. இறைவனின் திருநாமத்தையும், மகிமையையும், அவரது அருள் திறன்களையும் கைகளைத் தட்டிப் பாடுமிடத்து, ஓசையினால் பறவைகள் பறந்து விடுவது போன்று எமது பாவங்களின் வலிமைகளும் குறைந்துவிடுகின்றன. மகாபாரத யுத்தத்தின் முடிவில் பீஷ்மர் அம்புப்படுக்கையில் உத்தராயணத்தை நோக்கி தமது பூத உடலை நீக்கி, பரமனுடன் ஐக்கியமாக வேண்டி, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே சாட்சியாக நின்று ஆயிரம் நாமங்களைக் கொண்டு கேசவனைப் போற்றி, ஆன்ம ஈடேற்றம் எய்துகின்றார். ஞானம் ஒளிமயமானது. அஞ்ஞானம் இருள் மயமானது. புத்தராயாணம் என்பது ஒளிநெறி தச்சணானயம் என்பது இருள்நெறி. இதனாலேதான் விஷ்ணுபகவானின், ‘ஆயிர நாம மகிமை’ மிகவும் புனிதமானது. ஆயிரம் இறைநாமங்கள் அதாவது ‘சகஸ்ரநாமம்’ என்றால் ‘விஷ்ணு சகஸ்ரநாமமே’ ஆகும். அம்புபடுக்கையின் பொழுது பீஷ்மருக்கும் தருமருக்கும் இடையே ஏற்பட்ட உரையாடலில் உதயமானதே சகஸ்ரநாமம். எனவே எமது இளம் தலைமுறையினரான சந்ததியினரிடம் இறைநாமத்தின் மகிமையினை நாம் புரிய வைத்து அவர்களையும்

நெறிப்படுத்துதல் எமது ஒவ்வொருவரின் தர்மமாகும்.

இறைவனும் அவரது திருநாமமும் வேறு வேறு அல்ல. கிருஷ்ண பரமாத்மாவின் எடைக்கு ஈடாக சத்தியபாமா தராசில் பொன், மணி, மாணிக்கம் இவையாவும் வைத்தும் ஈடாகவில்லை. ருக்மணியோ கிருஷ்ணருடைய நாமத்தை மட்டுமே தராசுத் தட்டில் எழுதியும் துளசியையும் வைத்தால் எடை சரியாகிவிட்டது.

அப்பரை சமணர்கள் எத்தகைய துன்பவியலுக்கு ஆளாக்கிய போதும் அவர் செய்தது இறைநாம பாராயணம் செய்தமையே. இதனால் சமணர்களால் அவருக்கு எத்தகைய தீங்கும் ஏற்படவில்லை.

வேதங்களில் இரண்டாம் வேதமான யசுர் வேதம் வழிபாட்டு முறையில் புதியதொரு திருப்பத்தை தோற்றுவித்துள்ளது. தெய்வங்களுக்குப் பல நாமங்கள் கூறும் முறை காணப்படுகின்றது. சுக்கிலயசுர் வேதத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் வரும் 'சதருத்திரியம்' இதற்கு எடுத்துக்காட்டாகும். இதில் உருத்திரனுக்கு நூறு பெயர்கள் கூறி உருக்கமாக வேண்டுதல் செய்யப்படுகிறது. கோபம் கொள்ளாது உயிர்களை காத்தருள வேண்டுமென உருத்திரன் வேண்டப்படுகிறான். உருத்திரன் யசுர் வேதத்திலே சிறப்புமிக்க சிவனாக போற்றப்படுகின்றான். இதிகாச புராண காலத்திலும் சிவனுக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பெயர்களில் சங்கரன், சிவன், சிவதரன், நீலக்கிரீவன், பசுபதி என்பன குறிப்பிடத்தக்கன. பயங்கரமான உருத்திரனுக்கு மங்கல வழக்காக வைத்த பெயரே சிவன் (மங்கலமானவன்) சிவபிரானின் ஆணையால் அழித்தல் கிருத்தியத்தை செய்யும் மூர்த்தி என்பது சைவர் கொள்கின்றனர். உருத்திரனை சிவனாகவே உபசரித்து கூறுவது சைவமரபாகும். சதருத்திரியம் - இது ஸ்ரீ ருத்திரம் ஆகும். ஆலயங்களில் தெய்வங்கட்கு நாமங்கள் சொல்லி அர்ச்சிக்கும் மரபினை ஆரம்பித்தமை யசுர் வேதமாகும். இறைவனுக்கு 108 நாமங்கள் பாராயணமாக சொல்லுதல் (அஷ்டோத்தர நாமம்) 1008 நாமங்கள் பாராயணம் சொல்லி அர்ச்சித்தல் அருச்சனை என வழங்கப் பெறும்.

சிவனுக்குரிய நாமங்களை அர்ச்சிக்கும் பொழுது, மஹேஸ்வரன் என்ற பெயரினை ஓம் மஹேஸ்வராய நம: என ஓம் எனத் தொடங்கி, நம: எனத் திருநாமம் கூறுவது மரபாகும்.

இதே போன்றே விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்களைக் கொண்ட விஷ்ணு சகஸ்ர நாமத்தில் விஷ்ணுவின் கீர்த்திப் பிரவாகங்கள் பொதிந்துள்ளன. ஓம் விஷ்ணுவே நம: என ஆரம்பிக்கின்றன. இதே போன்றே ஏனைய தெய்வங்களின் நாமங்களை கொண்டே அவ்வவ் திருவுருவங்களுக்கு அர்ச்சனை செய்யப்பெறும்.

பகவக்கீதையினை அருச்சுனுக்கு உபதேசித்த கிருஷ்ண பரமாத்மா பீஷ்மர் அம்புப் படுக்கையிலிருந்து தன்னை நாம பாராயணம் செய்து அர்ச்சிக்குமிடத்து, அவர் அருகில் இருந்து கேட்டு மகிழ்வுற்றார் எனக் கூறியுளது மகாபாரதம். எனவே இறைவன் ஒருவர் மட்டுமே எமக்கு எதை எப்ப வழங்க வேண்டுமென அறியப்பெற்றவர். எனவே இறைநாம பாராயணம் மட்டுமே இறைவனை மகிழ்விப்பதாகும். எனவே யாமெல்லாம் எமது குழந்தைகட்கு தெய்வ சம்பந்தமான நாமத்தினை சூட்டுமிடத்து அவர்கள் யாபேரும் தர்மநியதியுடனான பண்பாட்டு அம்சங்களுடன் திகழ்வர். எல்லாச் செல்வங்களோ, கீர்த்தியோ எவரிடத்தும் இருந்தாலும் ஒவ்வொருவரும் தமக்கு இன்னல்கள் ஏற்படும் வேளையில் அழைப்பது இறைநாமத்தினையே.

**“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே இராம என்று இரண்டு எழுதினால்.”**

**– கம்பராமாயணம்**

“இறைவனிடம் அன்பு மேலிடுகின்ற பொழுது இறைவனை உளம்நெகிழ்ந்து பாடுகின்றார்கள். பாடுகின்ற பநுவலோர்கள் தேடுகின்ற செல்வமே” என்கின்றார் தாயுமானவர்.

ஜஜஜஜ

# 4 உள்ளத் தூய்மையுடனான அன்பு

**தூ**ய்மை பொருந்திய அன்பினை சொற் பதங்களால் விளக்க முடியாது. அதனால் திருமூலர், "உள்ளம் பெருங்கோயில்" என்கிறார். உள்ளம் ஒன்றையொன்று நேசிக்கும் பொழுது அங்கு பேச்சிற்கு இடமேயில்லை. மௌனந்தான் அன்பின் அர்த்தமாகும். அன்பினை அன்பிற்காகவே வழங்கப்படல் வேண்டும். பக்தி என்பதும் அன்பு என்பதும் ஒரே பொருளை குறிப்பன. பக்தி - வடசொல், அன்பு - தென்சொல்.

"ஆரெனும் அன்பு செயின் அங்கே
தலைப்படுங்காண் ஆரேனும் காணாஅரன்"

என்பது திருக்களிற்றுப்படியார் திருவாக்கு.

ஒவ்வொருவரது அன்பிலும் அவரவர்களுடைய குணப்பண்புகளும், மனப்பாங்குகளும் உணர்வுகளும் கலந்துள்ளன. எனவே அவரவர்களின் குணப்பண்புகளுடன் சேர்ந்துதான் அன்பினைப் பெறல் வேண்டும் என்பதனை நாம் நினைவுகூருதல் வேண்டும். அன்பின் ஆழத்தினை, அதன் தரத்தினை காட்டுவதற்கு உரிய பண்பான சொற்கள் உள்ளன. இன்ப உணர்வுகளினால் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பானது தேய்பிறை போன்றது. நிலைத்து இருக்கமாட்டாது. **மனம், மொழி, மெய்** மூன்றும் இணைந்து ஆன்மீகமான முறையில் அளிக்கப் பெறும் அன்பு மற்றவர்கட்கு அளிக்கத்தான் தெரியும். ஏற்கத் தெரியாது. உண்மையான அன்பானது அன்பிற்குரிய பொருளை

விரும்பாது தூய்மையான அன்பு சொற்பதங்களால் விளக்காது தன்னிடத்தில் என்ன இருக்கின்றதோ அவற்றையெல்லாம் வழங்கத்தான் தெரியும். ஏற்கத் தெரியாது. ஆனால் அன்பினை இறைவனிடம் செலுத்துமிடத்து மனம் சாத்வீகமடையும். திருமூலர், 'அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே' என்று கூறியுள்ளார். அன்புள்ளவர்களினால்தான் இவ்வுலகம் இயங்குகிறது. அன்பின் ஊற்றே அறமாய் விரிகிறது. அன்பின்றி அறமில்லை. அருளில்லை இன்பமில்லை.

**திருமூலர்,**

**'ஆர் அறிவார் எங்கள் அண்ணன் பெருமையை**
**யார் அறிவார் அந்த அகலமும் நீளமும்.'**

இறைவனின் பெருமையை யாரால் அறியமுடியும். அவனது அருள் விரிவையும் யாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருள் நிலையும் யாரால் அறியமுடியும். அகலம் என்றால் அவனது அருள் விரிவு. நீளம் என்றால் ஏழுநிலை தாண்டி உயர்ந்த எட்டாவது பரம்பொருள் நிலையாகும்.

எனப் போற்றிய இறைவனிடம் செலுத்தும் அன்பினை இறைவன் இருவகையான ரூபத்தில் அருள் புரிவார். ஒன்று மார்ச்சலம். மர்க்கடமென்பது தாய் குரங்கை விட குட்டிதான் தாயை இறுகப்பற்றி தன்னைப் பாதுகாக்கும். அதேபோன்று, மணிவாசகர் இறைவனை இறுகப்பற்றிக் கொண்டேன் என்பதனை திருவாசகப் பாடல்களில் அனைத்திலும் பதிவு செய்துள்ளார். அப்பரடிகள் தனக்கு சமணர்கள் ஏற்பட்ட இடைஞ்சல்கட்கு சிவபிரானின் தாளினை இறுகப் பற்றியமையின் காரணத்தால் அவரது அருளினைப் பெற்றார். இறைபுகழினைப் பேசியும் மகிழ்தலும்தான் பெரும்பேறு ஆகும். அன்பு என்பது உறவுக்களுக்கெல்லாம் ஆரம்பம் முடிவு என இரண்டும் உண்டு. மனிதன் பிறக்கும் முன்பும் இந்த அன்பு இருந்தது. பிறந்த பிறகும் இருக்கும். அதனால் அன்பென்பது காலங்களைக் கடந்தது.

அன்பினை செலுத்தாதவர்களிடம் நாம் நிந்திக்க முடியாது. ஆனால் இறைமீது நிந்தனை செய்யுமிடத்து கிடைப்பது

பக்தியாகும். இறைவன் மட்டும் எமது இடர்களையெல்லாம் எவ்விதமான அபிப்பிராயத்தினை வழங்காது கேட்கும் தன்மையை மட்டும் கொண்டுள்ளார். இறைவழிபாட்டின் பொழுது எங்ஙனம் தூய அன்பினை ஏற்றுதல் வேண்டுமென்பதற்கான படிநிலைகளை திருமூலர் கூறியுள்ளார்.

**'அறங் கேட்டும், அந்தணர் வாய்மொழி கேட்டும்**
**மறங் கேட்டும், வானவர் மந்திரங் கேட்டும்**
**புறங் கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்**
**திறங் கேட்டும் பெற்ற சிவகதி தானே.'**

கற்றல், கேட்டல், சிந்தித்தால் இம்மூன்றும் மனத்தைப் பண்படுத்தி இறையருளினைப் பெற துணை செய்யும். அறம் இன்னது மறம் இன்னது என்பதனை பகுத்தறிவுக் கண்நோக்கி இறைவனின் அருள் வல்லமையைக் கேட்டறிந்து செந்நெறி அந்தணர் வாய் மொழிகேட்டு ஒழுகுவதுடன் மந்திரோபதேசங் கேட்டு சிவசாதனங்களின் மூலமும், இறைவழிபாட்டினை அன்பினால் வழிபடுவதன் மூலம் இறை திருவடிகளை சேரலாம்.

எமக்கெல்லாம் எந்த காலத்தில் எவையெவை கிடைக்க வேண்டுமோ அவர் காலமறிந்து அருள்புரிவார் என்பதனை பின்வரும் பாடல் கூறுகிறது.

**'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்தெய்தும் ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்.'**

நாம் சிலவற்றில் எதிர்பார்க்காமல் வெற்றி கிடைக்கும் அதுபோன்று எமக்கு இன்னல் வருமென்றுமிடத்து அது இல்லாமலே போகும்.

**'எனவே அன்பெனும் கடவுள் ஆளப்பிறந்தவன்**
**அடியார்களெல்லாம் இன்பமுறப் பிறந்தவர்கள்'**

நாம் அன்புடன் கூடிய தர்மத்தை ஆற்றாவிட்டால் பாலை நிலத்தில் மரமானது தண்ணீர் வற்றி, உலர்ந்த மரம் தளிர்ப்பது

போன்றதாகும். உள்ளன்பு இல்லாதவர்க்கு எந்த உறுப்புகளாலும் எதுவிதமான பலன்களும் ஏற்படமாட்டாது. தூய அன்பினை வள்ளுவர் கூறுமிடத்து அழுக்கு மாசு இல்லாத அன்பின் வழி வாழ்பவர்களின் உடம்புகளே உயிர் நிலைத்து வாழும் உடல்களாகும். மாறாக அன்பிலாதவர்களின் உடலானது எலும்பினைத் தோலினால் போர்த்து மூடி வைத்துள்ள வெற்று உடம்புகளேயாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில், கலித்தொகையில் அன்பு தொடர்பாக,

**"அன்பு எனப்படுவது தன்கிளை செறா அமை"** என்றும்,

முதுமொழிக்காஞ்சியல்

**"அன்புணர்வு இல்லார்க்கு வாழ்வும் சாவே"**

என்றும் கூறப் பெற்றுள்ளது.

அன்பு நெகிழும் தன்மையுடையது மட்டுமன்றி நெகிழ்விக்கவும் செய்யும். தூய அன்பில்லாத மானிடர் திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாது திகைத்து நிற்கும் நிலையினை அடைவர் என்பதனை,

**"ஆர்வம் உடையவர் காண்பார் அரன் தன்னை"**
**"ஈரம் உடையவர் காண்பார் இறையடி"**

என்ற திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

அன்பின் ஆர்வத்தால் சிவதரிசனம் காண்பர். உள்ளன்பினால் இறைதிருவடியை அடைவர். இறைவனை ஞானத்தாலும் அடையலாம். இது எல்லோராலும் முடியாது. ஆனால் யாவராலும் அன்பினை உருக்கி இறைவனை நாடலாம்.

இறைவனின் எல்லையில்லாத அன்பு பிரபஞ்சமாய் விரிந்துள்ளது யாமெல்லாம் அன்பின் மகிமையையும் இறைவனையும் அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**"நீறில்லாத நெற்றி பாழ்"** என்பது போல்
**"அன்பில்லாத நெஞ்சமும் பாழ்தான்**
**எம்பெருமானை"**

என்று அன்புடன் இறைஞ்சி நட்புறவு பேணிலால் அவனது அருளினைப் பெறலாம் என அப்பர்,

**"வாயே வாழ்த்து, நெஞ்சே நினை, கைகால் தொழுமின்"**

என்றார்.

உள்ளத் தூய்மை அன்பு ஆனது மூன்று தன்மை கொண்டது. தூய அன்பிற்கு கொடுக்கல் வாங்கல் என்ற வியாபார புத்தி இல்லை. இரண்டாவது அன்பிற்கு பயம் கிடையாது. மூன்றாவது அன்பு, அன்பிற்காகவே செலுத்தப்படுகிறது; அன்பு என்ற கருவி இல்லையென்றால் இப்பிரபஞ்சமே நிலைத்து இருக்காது. அன்பையும் கர்மயோகி போன்று பிரதிபலன் கருதாது ஆற்றுதல் வேண்டும் கிருஷ்ணபகவான் பகவக்கீதையில் கூறியுள்ளார். "கடமையை உரிய தருணத்தில் உணர்த்துவதே அன்புதான்." அன்பினால் தூண்டப்பட்டு செய்யும் செயல்களினால் பலன் கிடக்காதுவிட்டாலும் உரிய தர்மங்களை நியதிப்படி ஆற்றுகின்றோம் என எண்ணுமிடத்து உள்ளம் திருப்தியடைகிறது" 'சத்தியமானது உயரியபண்பாகும்.' நன்மையை வைத்துக் கொண்டு சத்தியத்தின் மதிப்பீட்டினை கணிப்பீடு செய்ய முடியாது. அன்புடன் கூடிய பக்தியையும் தூய சிந்தையையும் ஆழமாகச் செய்ய வேண்டும். அன்புடன் கூடிய சத்தியம் என்ற தர்மத்தினை வாழ்வாகக் கொண்டமையால் அரிச்சந்திரன் சத்தியவானானான்.

அன்பினால் இறைவன் மீது எங்ஙனம் வழிபாட்டினை ஆற்ற வேண்டும் என்பதனை கூறும் திருமந்திரப் பாடல்,

**'உயர்ந்து பணிந்து முகந்து தழுவி**
**வியந்து மரனடிக் கைமுறை செய்யின்**
**பயந்து பிறவி பயனது வாகும்**
**பயந்தும் பரிக்கிலர் பான்மையனாமே.'**

ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை கடவுள் நம்பிக்கையை நியதிப்படி வளர்த்தல் வேண்டும். இயற்கையை வெல்வதற்கு இயற்கைக்கு கட்டுப்பட்டு வாழ்கின்றோம். உறுதியான அன்பினால்தான் உலகிற்கும் கடவுளுக்கும் பணி ஆற்ற

முடியும். நாம் உலகிற்கு எத்தகைய சேவை ஆற்றாமல் விட்டாலும் இறைவனின் தாராளமான பணிக்கு அவர் கையில் கருவியாகவாவது இருக்க எத்தனிக்க வேண்டும். அன்பு, அறிவு இவை இரண்டிற்குமிடையில் எதைப் பின்பற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அன்பினைத்தான் கடைப்பிடித்தல் வேண்டும். அதுதான் நியதியாகும்.

நாம் உலகியலுள் வாழுமிடத்து எங்ஙனம் உள்ளத்தூய்மையான அன்பினை ஆற்றுதல் வேண்டும் என்பதனை, “அன்புடைமை” என்ற அதிகாரத்தில் பத்து குறட்பா மூலம் பதிவு செய்துள்ளார். அன்பிற்கு அடைத்து வைக்கும் தாழ் ஏதேனும் இல்லை. அன்புடையோர் தமது உடம்பினை பிறருக்காகவே ஈர்ப்பவர்களாதலால் அவர்களது வாழ்வு உயிரும் உடலும் ஒன்றியிருக்கும் உறவாகும். அன்புடைமை பொருந்தியவர்களால் மட்டும்தான் பூவுலகில் மகிழ்வுடன் வாழ முடியும். உண்மை அறியாதோர் சிலர் அன்பு அறத்திற்கே துணை என்பர். ஆனால் அறத்திற்கு மாறானவற்றைப் போக்குவதற்கும் அந்த அன்பே துணையாகும். எலும்பு அற்ற உடல் கொண்ட புழுக்கள் முதலியவற்றை வெயில் வருத்துவது போன்று அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் வருத்துவார். வர்ணபகவானை அறக்கடவுளராக வழிபடுவது மரபு. இவரது வலது கண் சூரியன் இடது கண் சந்திரன். நாம் வாழ்வியலில் முக்கியமாக இல்லறவியலில் ஆற்றும் தர்மங்களை உரிய காலத்தில் கிரமமாக ஆற்றுவதனை அறக்கடவுளரே தீர்ப்பளிப்பார்.

ஔவையார் உள்ளன்புடன் தினமும் தவறாது விநாயகர் வழிபாட்டினை ஆற்றுவார். இதன் பலன், சேரமான் பெருமான் நாயனாரும், சுந்தரரும் குதிரை மீதேறி கயிலைக்குச் செல்வதற்கு முன்னே “விநாயகர் அகவல்” பாடிய ஔவையாரை விநாயகர் தனது தும்பிக்கையினால் தூக்கி அவர்கள் இருவரும் கைலையை அடையுமுன்பே அவரைச் சேர்த்துள்ளார்.

எந்தச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் எமக்குரிய பணியினை ஆற்றாது தள்ளிப் போடாது ஆற்றுதலே தர்மமாகும். எமக்குரிய

பண்பாட்டியல் மூலந்தான் நாம் ஏற்றம் பெறுதல் வேண்டும். ஒரு சில சந்தர்ப்பங்களில் பெரியோர் எம்மை ஏற்றலாம் ஆனால் உலகம் எம்மை இகழலாம். மிடிமை வரலாறு, பிணியும் ஏற்படலாம். இவை ஏற்பட்டாலும் தக்க பணியினை அன்புடன் தொடர்ந்தும் ஆற்றுதல் வேண்டும்.

மானிடர் யாபேரிலும் இயல்பாகவே ஏதாவதொரு தெய்வீக சக்தி மறைந்திருக்கும். இம்மறைவிற்கு காரணம் அறியாமையும் உணர்வுகள் யாவும் பாசவலையினுள் மூழ்கி அடிமையாக இருப்பதேயாகும். இவையாவும் இயல்பாகவுள்ள தெய்வீகப் பண்பினை மறைக்குமேயொழிய அழிக்க முடியாது. ஞானியர் என்போர் இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு இவை இரண்டையும் பற்றின்றி இருப்பதற்கான ஞானம் கொண்டோர். ஒவ்வொரு சமயநெறியிலும் வாழ்ந்த மகான்கள் தூய அன்பு நெறியினை தமது உயிர்போல் பேணி வாழ்ந்துள்ளனர். அன்புடன் கலந்த அருள் வார்த்தைகள் அருளி எல்லோரையும் அரவணைத்துள்ளனர். அவர்களது ஒவ்வொரு செயற்பாட்டிலும் அன்புதான் ஆணித்தரமாக இருந்தது. "அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்" என்பது வள்ளுவரது வாக்காகும்.

கண்ணப்பர் திருக்காளத்தியில் காளத்தியப்பரை கண்டவுடன் தன்னை மறந்து, உடலை, உணவை, உறக்கத்தை துறந்து அன்புப் பிழம்பாய் திரிந்தவர். அதனால் ஆறுநாட்களில் ஆண்டவனுடன் கலக்கும் பேற்றினைப் பெற்றவர். சேக்கிழார் கண்ணப்பரை **"முன் செய் தவத்தின் ஈட்டம்"** என்கின்றார். மணிவாசகர் கண்ணப்பரின் அன்பினை,

**'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என் அப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி,'**

மேலும் மணிவாசகர்

**"இறைவனே நீ எனக்குத் தனித்துணை"** எனக் கூற,

கண்ணப்பனோ,

**"இறைவனே உம்முடன் துணையாயுள்ளார்**
**ஒருவரும் இன்றிக் கெட்டேன்"** என வாடுகின்றார்.

அன்பு என்பது கருத்துப் பொருள். காட்சிப் பெருளல்ல. அன்பிற்கு உருவம் கண்ணப்பர். கண்ணப்பர் போன்று இறைவனை நெஞ்சுருகப்பாடி அழுது அழுது இறையடி சேர்ந்தவர் மணிவாசகர். எனவேதான் தாயுமானவர், "மணிவாசகர் இறைவனின் அருளமுதினை விழுங்க வான் கருணை கொண்ட இறைவன் இவரை விழுங்குகின்றார்" அதனாலே மணிவாசகர் இறைவனின் அன்பினை,

**"தீர்த்த அன்பாய அன்பர்க்கு**
**அவரினும் அன்ப போற்றி"** என்கின்றார்.

மேலும், அவன் கருணை வான்தேன் கலந்தது என்றும், அவன் கருணைக்கு எல்லையில்லை எனவும் பாடியுள்ளார். எனவே வான் போன்ற கருணை வள்ளலான இறைவனை அன்புடன் கூடிய வழிபாடு ஆற்றுதல் வேண்டும்.

**"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு."**

சிவபிரானை மணிவாசகர் எங்ஙனம் நெஞ்சார உருகி நெகிழ்ந்து பாடிய திருவாசகம் இப்பாடல். மணிவாசகர் அருளிய திருவாசகம் அருட்பத்து முதற்பாடல் ஆகும். குருந்த மரத்தடியில் அவர் சிவபெருமானைத் தரிசித்துப் பாடியது.

**"சோதியே சுடரே சூழலொளி விளக்கே**
**சுரிகுழல் பணைமுலை மடந்தை**
**பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றால்**
**பங்கயத்(து) அயனுமால் அறியா**
**நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்**
**நிறைமலர்க் குருந்த மேவிய சீர்**
**ஆதியே அடியேன் ஆதரித்(து)அழைத்தால்**
**அதெந்துவே என்றருளாலே"**

பேரொளியுடையனே உமையை இடப்பாகத்தே கொண்டவனே பிரமா விஷ்ணு கூட அறிந்துகொள்ள முடியாத பெருமையுடைவனே! திருப்பெருந்துறை கோயிலினுள்ளே குருந்த மரத்தடியில் எனக்கு காட்சியருளிய ஆதிமூர்த்தியே! நான்

அன்புடன் வழிபாடு செய்யுமிடத்து “என்ன வேண்டும்” என்று கேட்டு அருள் புரிய வேண்டும் என மணிவாசகர் இறைவனிடம் பணிக்கின்றார்.

தூய அன்பினால் இறைவழிபாட்டினை பின்வரும் பாடல் தருகிறது.

**“வாளால் மகவரித்(து) ஊட்டவல் லேனல்லேன் மாதுசொன்ன**
**சூளால் இளமை துறக்க வல்லேனல்லேன் பக்தி சென்று**
**நாளாறில் கண்ணிடத்து அப்ப வல்லேனல்லேன் நானினிச் சென்(று)**
**ஆளாவது எப்படியோ காளத்தி அப்பருக்கே.”**

சிறுதொண்ட நாயனரைப் போன்று சிவனடியார்க்குத் தன் மகனை வெட்டிக் கறி சமைத்து உண்பிக்கின்ற பக்தி என்னிடமில்லை. தம் மனைவி “எம்மைத் தொடாதீர், திருநீலகண்டம்” என்று ஆணையிட்டுச் சொன்ன சொல்லின்படி தனது இளமைப் பருவமுதற் கொண்டே மனைவியையும் மற்றப் பெண்களையும் தன் மனத்தாலும் தொடாது விரதம் பூண்டு வாழ்ந்த திருநீலகண்ட நாயனாரது மனவுறுதியும் எனக்கில்லை. ஆறு நாளில் காளத்தி குடுமித் தேவரை வழிபட்டு தன் கண்ணைப் பிடுங்கி அப்பிய கண்ணப்பநாயனார் பக்தியும் என்பாலில்லை என இப்பாடல் அன்பையே அர்ப்பணித்து வழிபாட்டினை ஆற்றியவர்களை கூறி தான் எப்ப இறைவனுக்கு தொண்டனாக மாறுவது என ஆதங்கப்படுகின்றார்.

எனவே அடியார்கள் தம் முன் சென்ற அடியார்களின் அன்பினை வழிபாட்டினை போற்றியும் வாழ்த்தியும் வரும் பண்பாடு இன்றும் உளது. இது தமிழர்களின் பண்பாட்டுக் கோலமாகும். இதனை பெரியபுராணத்தில் கூறப்பெற்றுள்ள அடியார்களின் வரலாறு எடுத்தியம்புகிறது. சுந்தரர் சம்பந்தரை “நாளும் இன்னிசை தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” எனப் போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தூய்மை அன்பு கொண்டோர், “தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் ஆவான் பிறரின் இன்பத்தினை கண்டு மகிழ்வதும், அவர்கள் இன்னல் அடையுமிடத்து அவர்கட்கு உதவுவதே உண்மையான அன்பு. பெரியபுராணம் கூறும்

அடியார்களின் அன்பானது ஒன்று மெல்வினை, மற்றையது வல்வினையாகும்.

இதனை சித்தாந்த சாத்திர நூல்களுள் முந்தியதான திருக்களிற்றுப்படியாரில் கூறப்பட்டுள்ளது.

**"மெல்வினையேயென்ன வியனுலகில் ஆற்றரிய**
**வல்வினையே யென்ன வருமிரண்டும் – சொல்லிய**
**சிவதன்மம் ஆயவற்றில் சென்றதிலே செல்வாய்**
**பலகன்மம் நீங்கும்படி"**

இப்பாடல்வாயிலாக சிவபிரான் வழிபாட்டு நெறியில் மெல்வினை வல்வினை இரண்டுமே ஒரே வழிதான் எவ்வழியினை அன்பு பக்தியுடன் வழிபாடாற்றினால் எமது துயர்யாவும் நீக்கம் பெறும்.

இறைவனுக்கு பக்தி மூலம் அர்ச்சித்து, தொண்டாற்றிய அடியார்கள் மெல்வினைகளை ஆற்றியவர் இவர்களில் அரிவாட்டநாயனார், ஆனாயர் கணநாதர், அதிபத்தர், வாயிலார், திருநீலநக்கார், சண்டேசுவரர் போன்ற அடியார்களை குறிப் பிடலாம். வன்வினை மூலம் இறைவனை அர்ச்சித்தவர்கள் தங்களது இறைவழிபாட்டிற்கு எவர் குறுக்காக வந்தாலும் பொறுக்கமாட்டார் - எறிபத்தார் சிறுதொண்டரை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

குரவரான நால்வரும் மெல்வினையினை ஆற்றியதனை அவர்களது வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

மெல்வினையின் மூலம் இறைவனுக்கு தொண்டு புரிந்தவர்கள் குறையாத வீரம் படைத்தவர்களாவர் என்பதனை சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பில் வரும் பாடல் வரி எடுத்துக் காட்டுகிறது.

**"ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகைய தோ"**

மெல்வினையின் மூலம் இறைவனுக்கு தொண்டு ஆற்றியவரில் முதன்மையாக வைக்க கூடியவர் நாவுக்கரசர். சமணர் தமக்கு துன்பம் இழைத்த பொழுது கூட அவர்களை, "வழக்கிலா அமணர்"

என மென்மையாகக் கூறியுள்ளார்.

மணிவாசகரும் தனது அன்பினை இறைவனிடம் மெல்வினையின் மூலம் தொண்டாற்றி அவரின் அருளினை அதுவும் இறைவனே மணிவாசகரிடம் தேடிச் சென்று குருவாகி உபதேசித்து தனது அடியவராக்கியுள்ளார். தில்லையம்பதிதான் மணிவாசகர் அருள்பெற்று கீர்த்தியை அளித்த தலம் அதனால்தான் 'தில்லைபாதி மணிவாசகர் பாதி' என வழங்கப் பெறுவதுண்டு.

எனவே உள்ளத்தூய்மையிலான பக்திதான் முக்கியம் அதனை பக்தி செலுத்துபவர் தமது அறிவு, பக்குவம், சூழல் அதற்கமைய செலுத்தினால் அதனையும் இறைவன் ஏற்று அருள்பாலிப்பார்.

**"அன்பெனும் கடவுள் ஆளப்பிறந்தவன்**
**அடியார்களெல்லாம் இன்பமுறப்**
**பிறந்தவர்கள்"**

யாவும் ஈசன் செயல் என்ற உணர்வு ஏற்படுமாயின் யாவும் நிறைவு பெறும்.

அர்ச்சுனன் மற்போர் விற்போர் சிவபிரானுடனே புரிந்தான். ஆனால் அவன் உள்ளன்புடன் இறைவழிபாடு செய்தமையால் அவனுக்கு இறைவன் மட்டுமன்றி அவன் கேட்ட "பாசுபத அஸ்திரத்தை வழங்கி அருளினார்". பெரியபுராணம் கூறும் ஒவ்வொரு அடியார்களின் வரலாறும் இறைவன் பால் அவர்கள் ஆற்றிய அன்பின் ஆழத்தினை எடுத்துக்காட்டுகிறது. பெரியபுராண அடியார்களில் சிலர் சரியை நெறியினின்னின்றும், வேறு சிலர் கிரியை நெறியாலும், யோக நெறி, ஞான நெறியினை கடைப்பிடித்து இறைபாதங்களை எய்தியுள்ளனர். இவர்கள் யாபேருமே தமது உலகு, செல்வம், உறவுகள் யாவுமே சிவபிரான்தான் என்று வாழ்ந்துள்ளார்கள். சில அடியார்களின் அன்பினால் இறைவன் பெற்றோராக, நண்பராக, தோழனாக, குருவாகவும் அருள் புரிந்துள்ளார்.

ஒவ்வொருவரின் குறிக்கோளானது வாழ்வியலை முறைப்படி துய்த்தபின் இறைவன் திருவடியினை அடைதலேயாகும். இதனை ஔவையார் பின்வரும் பாடல் வாயிலாக கூறியுள்ளார்.

**‘மெய், வாய் கண் மூக்குச் செவியேனப் பேர் பெற்ற**
**ஐவாய் வேட்கை அவாவினைக் – கைவாய்க்**
**கலங்காமல் காத்து உய்க்கும ஆற்றல் உடையார்**
**விளங்காது வீடு பெறும்.’**

**நாலடியார் – 39**

சூதமுனிவரால் சொல்லப் பெற்ற சிவகீதையில் முக்தி ஐந்து வகைப்படுமெனக் கூறப்பெற்றுளது. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், கைவல்யம். கைவல்ய முக்திதான் மிக உயர்ந்தது. இம்முக்தி பெற்ற எந்த ஆன்மாவுக்கும் மீண்டும் பிறப்பு என்ற துயர் இல்லை. இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுவர். மணிவாசகர், திருமூலர் இருவருமே இம்முக்திப் பேற்றினைப் பெற்றவர் இம்முக்தியை பெறுவது அரிதிலும் அரிது. ஆனால் சிவகீதையைப் பாராயணம் செய்வதன் மூலம் இம்முக்தியைப் பெறலாம். சிவகீதையானது பகவக்கீதைக்கு முந்தியது. பத்ம புராணத்தில் சிவகீதை இருக்கிறது. இதனை சிவபிரானே ஸ்ரீ இராமனுக்கு உபதேசித்துள்ளார். இவ் உபதேசத்தினை கேட்டுக் கொண்டிருந்த கந்தபிரான் சனற்குமாரருக்கும், அவர் வியாசருக்கும் உபதேசித்தார். பின்பு சூதமுனிவர் ஏனைய முனிவர்கட்கு உபதேசித்தார்.

திருமூலர் இறைவனிடம்,

**“இக்காய நீக்கி இனியொரு காயத்திற்**
**புக்குப் பிறவாமற் போய் வழி நாடுமின்”**

இவ்வுடல் இன்னுமொரு பிறவியெடுத்து உடலினுள் பிறவாது சுத்த முக்தியை எய்ய வேண்டுமேயானால் இறைதாளினை வழிபாடு செய்தல் வேண்டும்.

தாயுமானவரும்,

**“பாழில் இறந்து பிறந்து என்று உழலப்**
**பண்ணாதே: யான் உன்பரம்.**

என இனி பிறப்பு என்பதே வேண்டாம் என இறைவனிடம் பணிக்கின்றார்.

அன்பின் ஊற்றானது அறமாய் தர்மமாய் விரிகின்றது. அன்பில்லாவிட்டால் அருளில்லை, அறமில்லை, இன்பமும் இல்லை அன்பினால் தன்னை உருகியுருகி மணிவாசகர் சிவமயமானார். மாசற்ற தூய்மையான அன்புதான் சிவம். அன்பினை வளர்த்தாலே அன்பே பேரின்பமான சிவமாகும். பாலும், வெண்மையும், மணியும் நாதமும் போல அன்பும் சிவமும் ஒன்றேயாகும். அன்பினை உருக்கி இறைவனை ஏற்றுமிடத்து ஞானத்தினால் இறைவனை அடையலாம். அங்ஙனம் நாம் நடக்குமிடத்து இறைவன் தன் அன்பினை என்மீது தலையாக நிற்க செய்வான். உண்மையான தூய்மையான அன்பினால் மட்டுமே இறைவனின் திருவடியினை தரிசிக்கலாம்.

இவ்வுலகத்தில் வளமாக வாழ்ந்தவர்களின் சிறப்பு அவர்கள் அன்பு பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையின் பயனாகும். இந்த உண்மையினை அறியாதவர் சிலர் அன்பு அறத்திற்கு மட்டும் துணை என்பர். ஆனால், அறத்திற்கு மாறானவற்றை போக்குவதற்கும் அந்த அன்பே துணையாகும். உள்ளுறுப்பாகிய அன்பு இலாதவர்க்கு வெளியிலுள்ள உறுப்புக்களால் எந்தப் பயனும் உண்டாகாது. எவர் அன்பின் வழி ஒழுகும் இடத்து உயிர் நிலைத்து வாழும். ஆனால், அன்பு இலாதவர்களது உடம்பு எலும்பினை தோலினால் போர்த்து மூடி வைத்துள்ள வெற்றுடம்புகளே. எனவே, உள்ளத் தூய்மை உடையோரது அன்பானது சுயநலமின்றி தம்மையே பிறர் நலனுக்காக அர்ப்பணித்து வாழுவார்.

அன்பினை எங்ஙனம் இறைவன் மீது செலுத்த வேண்டும் என்பதனை திருமூலரின் மந்திரம் தெளிவாக்குகிறது.

**"அன்பொ டுருகி அகங்குழை வார்க்கன்றி**
**என்பொன் மணியினை எய்தவெண் ணாதே**
**என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்:**
**முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்!**

உமிக்குள் அரிசி என்ன பாடுபடுகிறது. யாமெல்லாம் பிறவி என்ற வினையுடன் உலகின் இன்ப துன்பங்களால் அல்லலுற்று

இடர்களினால் வருந்துகின்றோம். உமிக்குள் அரிசி புகுந்து நெல்லாகிறது. உள்ளேயுள்ள அரிசி என்ன அவஸ்தைப்படுகிறது. கதிரடித்து, சூடடித்து, நெல்லைப் பிரித்து பின்பு சூடடித்து, உலர்த்தி, பின்புதான் உமியை பிரிக்க வேண்டியுள்ளது.

சமய நெறிகளுடன் தூய்மையான அன்பு செலுத்தி வாழ்ந்த மகான்களின் வாக்குகள் இன்றும் முன் உதாரணமாகச் சொல்லப்படுகின்றன. சமயநெறியினை எடுத்தியம்பும் பெரிய புராண காப்பியத்தினை அன்புக் களஞ்சியமென போற்றப் படுகின்றது. அதில் கூறப்பெற்ற அடியார்கள் யாபேரும் குடும்ப உறவுமுறைகளை, சமுதாய அக்கறையினை தமது அன்பினை முனைப்பாக வைத்துதான் வாழ்ந்து காட்டியுள்ளனர். உயிர்கட்கெல்லாம் அம்மை அப்பனான சிவபிரானே காரைக்கால் அம்மையாரின் அன்பில் திளைத்து அவரை, **'அம்மையே'** என அழைக்கப் பெற்ற பேற்றினைப் பெற்று அவரது திருவடி நிழலில் அமரும் பெரும் பாக்கியத்தினைப் பெற்றவர். வள்ளுவர் திருக்குறளில் அன்புடைமை எனும் அதிகாரத்தில் அன்பின் வலிமை எத்தகையது. அன்பிலாதவர் எவ் இயல்புடையவர். அன்பினை நெறிமுறை தவறாது ஒழுகுமிடத்து அது ஒவ்வொருவரையும் எந்நிலைக்கு உயர்த்தும் என்பதனை வகுத்தும் தொகுத்தும் கூறியுள்ளார்.

**"அன்பு ஊற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்ப."**

வாழும் பொழுதே சிறப்புகளையும் பயனுடையவர்களாக வாழ்ந்தோர்களது சிறப்புக்கு காரணம் அவர்கள் அன்பினைத்தான் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தமையினால் அவர்கட்கு வாழ்ந்த வாழ்க்கையின் பயன் கிடைத்துள்ளது. எமது சமய நெறியின் சிறப்புகளாக திகழுபவை இறைவனிடம் இயல்பாகவே அன்பானது ஊற்றாகப் பெருகும். எமது நெறி ஒரு குடும்ப அன்பின் உறவினைக் காட்டுகிறது. எவ் ஆலய பெரு விழாவாக இருந்தாலும் சிவபிரான் தன் சக்தியுடனும் தனது திருக்குமாரர்களுடன்தான் திரு உலா எழுந்தருளி அடியார்க்கு அருள்பாலிப்பார்.

எத்தகைய முறையில் எமது நெறியில் இல்லறவாழ்வினை எங்ஙனம் துய்க்க வேண்டுமென எம்பெருமானே எமக்குக் காட்டுகிறார். எமது நெறி அன்பினால்தான் புனைந்துள்ளது. என்பதனை இப்பாடல் ஒன்றே போதும். சிவப்பிரகாசர் சுவாமிகள் பாடியுள்ளார்.

**'அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்**
**ஐயஎன் செவியை மிகவும்**
**ஆறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்**
**அத்தன் வேலனை நோக்கி**
**விரைவுடன் வினவவே அண்ணனென் சென்னியில்**
**விளங்குகண் எண்ணினனென**
**வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீயப்படி**
**விகடமேன்செய் தாயென**
**மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன**
**மயிலவன் நகைத்து நிற்க**
**மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்**
**மைந்த ரைப்பா ராயெனக்**
**கருதரிய கடலாடை உலகுபல அண்டம்**
**கருப்பமில் பெற்றி கன்னி**
**கணபதியை அருகலைத் தகமகிழ்வு கொண்டனன்**
**களிப்புடன் உமைக்காக் கவே.'**

விநாயகர் தன் காதினை ஆறுமுகம் கிள்ளினான் என தந்தையிடம் கூற, தந்தை முருகப் பெருமானை கண்டித்த பொழுது அண்ணன் என் தலையில் உள்ள கண்களை எண்ணிப் பார்த்தான் என்று கூறினான். அதற்கு தந்தையாரிடம் விநாயகப் பெருமான் தம்பி என் துதிக்கை எத்தனை முழம் என அளந்து பார்த்தான் என்றான். இதனைக் கேட்டதும் முருகப் பெருமான் சிரிக்கவே உமை விநாயகரை ஆறுதல் கூறி மனம் களிந்தாள். பிள்ளைகள் குறும்பு செய்பவர்கள் இது இயற்கை நியதி என இறைவனே எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் குழந்தைகள் குறும்புகள் செய்தாலும் அவர்களை அன்போடு அரவணைத்து காக்க வேண்டும். அவர்கட்கு தண்டனை அளித்தால் எதிர்விளைவினையே

தருவார்கள் எனச் சிந்தித்து செயல்பட வேண்டும்.

இது எம்மையெல்லாம் உயிர்த்துவம் அடையச் செய்யும் மகிமையினை என்னென்பது.

மணிவாசகர் சிவபிரான் மீது கொண்ட அன்பின் நிமித்தம் சிவபிரானையே 'செல்வமே சிவபிரானே' என உருகிப் பாடியுள்ளார். சிவபிரான் தான் உண்மையான நிலையான அழிவற்ற செல்வம். இதனைப் பின்வருமாறு பாடுகின்றார்.

**'செம்பொருள் துணிவே சீர்படைக் கழலே**
**செல்வமே சிவபெருமானே.**
**செப்புவதற்கு அரிய செழும் சுடர் மூர்த்தி**
**செல்வமே சிவபெருமானே.**
**செல்வமே சிவபெருமானே**
**எம்பொருட்டு உன்னை சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந்து அருள்வது இனியே.'**

நாமெல்லாம் பச்சிளங் குழந்தையைக் கண்டவுடன் அன்பினால் செல்வமே என விழிப்பது உண்டு. ஆனால், மணிவாசகர் இறைவன் மீது உள்ள அன்பின் நிமித்தம் சிவபிரானை செல்வமே என பாடியுள்ளார். சிவபிரானை அன்பினால் வழிபட்டால் மட்டும் போதாது. அவரது திருக்கழல்களை கெட்டியாகப் பற்றிக் கொள்ளுதலும் அவசியம் என்பதனை மார்க்கண்டேயர் வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

உள்ளத்தூய்மையுடனான அன்பானது,

**பாலோடனாய நீர் பாலாகுமல்லாது**
**நீரால் நிறம் தெரிந்து தோன்றாதாம்**

பாலுடன் சேர்ந்த நீர் நீராக தெரியாது. பாலாகவே தெரியும். எனவே, தூய்மையான அன்பில் இருக்கிறதுதான் இறைமை. இறைமையில் இருக்கிறது தான் அன்பு.

நாமெல்லாம் வாழ்வில் ஒரு வட்டப்பாதை வழியே சென்று எப்போதாவது வட்டத்தை முடித்தே தீர வேண்டும். இதுதான் நியதி. தர்மக்கோட்பாடு.

எவரிடமிருந்து யாவும் தோன்றுகின்றனவோ, எவருக்குள்

எல்லாமே வாழ்கின்றனவோ, இறுதியில் எவரை யாவரும். பற்றிகின்றனவோ அவர்தான் இறைசக்தி, கடவுள். எனவே இறைதாளினை அன்புடன் வழிபாடு செய்வோமாக.

இறைசக்தி என்ற மையப்புள்ளியிலிருந்தே அனைவரும் தோன்றியுள்ளோம். எனவே ஒவ்வொருவரும் உயர்வாகவோ தாழ்வாகவோ இருக்கலாம். ஆனால் அன்புடன் கலந்த வாழ்வினை வாழ்ந்து துய்க்க வேண்டும்.

இறைவனை அன்பெனும் வலையினுள் பிடித்து வைக்குமிடத்து அவன் அன்பினுள் அமருவான். அவனது அன்பினால் எவர் உள்ளாரோ அவனது அன்பினை உயிராய்க் கொண்டு வாழ்பவரே அணைத்து எப்போதும் துணையாக வந்து தீயனவற்றை விலக்கி எம்மையும் ஆட்கொள்வான்.

**'அன்பின் உள்ளான் புறத்தான் உடலாயுளான்**
**முன், பின் உள்ளான், முனிவர்க்கும் பிரான் அவன்**
**அன்பின் உள்ளாகி, அமரும் அரும் பொருள்**
**அன்பின் உள்ளார்கே அணைதுணை யாமே!'**

**திருமூலர் 279**

அன்பினால் இறைவனுடன் கலந்துறைவோம், தோற்றம், மாற்றம், ஏற்றம, யாவும் அவனை அறிவான். அன்பினால் கலந்தால் பிறவியும் முடிந்தொழியும். தீயுடன் கலந்த கற்பூரம் மிச்சமின்றி சோதியுடன் எரிந்தொழியும். அதுபோலவே, இறைவன் அன்பிற் கலந்த ஆன்மாவும் இருவினைப்பிறவியும் மறைந்தொழியும். எனவே, அன்பிற் கலவி செய்து ஆதிபிரான் வைத்த துன்பப்பிறவி முடிவதுதானே.

இறைவன் உளன் ஆனால், 'கண்டும் கண்டிலேன்' என மணிவாசகர் பாடுகிறார்.

உருவமும் நிழலும் போல இறைவன் மகிழ்வுடன் எம்முடன் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்.

ஐஜஐஜ

# 5 இறைவழிபாட்டினை ஏற்றுவோம்

**இ**றை எனும் சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. இறைவன் (அசைவன்), (அசைவற்றது), (சரம்) அசரம் என்ற எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் இயக்கு கின்றமையால்,

**'பெரும் பெயர் இயவுள்'** என்பார் நக்கீரர். இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கி அவ்வுயிர்களின் பிறவிப் பிணியினைப் போக்குகின்றனன். இதனைப் பரஞ்சோதிமுனிவர்,

**'உள்ளொடு புறங்கீழ் மேலாய்**
**உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்**
**அண்டமும் அளவிலாத உயிர்களும்**
**ஆகமாகக் கொண்டவன்.'**

பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பது போல், இறைவழிபாட்டிற்குப் பூவும் நீரும் முக்கியம்.

**'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுண்டு அருள்புரியா நிற்கும்'**

என திருமந்திரம் கூறுகிறது.

**'சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்'**

என்கின்றார் அப்பர். மலர் சச்சிதானந்த மயமானது. அதன் நிறம் சத்து. வடிவு - சித்து, மணம் - ஆனந்தம். இந்த மூன்றையும் உடையது மலர். மலர் மணத்துக்கும் வாக்கிற்கும் எட்டாத பரம்பொருளை மலர்களைக் கொண்டு அன்புடன் அர்ச்சிப்பதால்

எளிதில் இறைவனை நம் வசமாக்க முடியும். வளமாக வாழ்பவரைக் கண்டு நல்ல பூ எடுத்து பூசை செய்தவர் என உலகம் கூறுகிறது.

பார்வதி பரமேஸ்வரர் மீது விளையாட்டாக வில்வக்கிளையினை உதிர்த்த குரங்கு, அபுத்தியால் செய்த சிவபுண்ணியத்தினால் மறுபிறவி எடுத்து பூவுலகிற் பிறந்தது. மறுபிறவி எடுத்த குரங்கு முசுகுந்த சக்கரவர்த்தி என்ற பெயருடன் மூவுலகினையும் ஆண்டது.

**'வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்**
**செல்வத் துரைமகனாய் செய்தனையே.'**

- **(திருவருட்பா)**

**கடவுள் என்பதன் பொருள்.:**

உள்ளதெல்லாவற்றையும் கடந்தது. கடந்து உள்ளது. எல்லைக்கு உட்படாதது. எதற்கும் கட்டுப்படாதது. அதுவே கடவுள். இராஜாஜி அவர்கள் கடவுள் என்ற தமிழ்ச் சொல்லை **'இது போல எந்த மொழியிலும் இல்லை'** எனப் புகழ்ந்துள்ளார். நவீன சிந்தனைவாதியான ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கடவுள் என்பதற்கு, 'எது எது உளதோ அனைத்தையும் நீக்கி விடுங்கள். அப்புறம் உள்ளதே உண்மை' என்று கூறியுள்ளார். கடவுள் உள்ளேயிருந்து அனைத்தையும் நடத்துகிறவர் - இதில் முத்தொழிலும் வந்துவிடும்.

இம்முத்தொழில்களும் எப்படி நடைபெறும் என்ற கேள்விக்கு தெளிவாக வருவது மாயை என்ற அற்புதமான சக்தியினாலேதான். மாயை என்ற சக்தி அனைத்துலகங்களையும் உண்டாக்கி வைத்திருந்து மீண்டும் காரண நிலையையே அடைகிறது. இதையே அழிவு என்கிறோம். உண்மையில் காரணமான மாயை ஒருபோதும் இல்லாமல் போய்விடுவதில்லை. 'உலகமோ படைக்கப்பட்டு, இருந்து மறைகின்றது. மீண்டும் இப்படி ஒவ்வொரு கல்பத்திலும் நிகழ்கின்றது என்கிறது வேதம்.' எனவே கடவுளின் சக்தியான மாயை அவ்வவ்போது கடவுளால் வேலை செய்வதும் அடங்குவதும் ஆக இருக்கிறது.

யாம் அன்புடன் கூடிய புத்தியின்படி நடக்காது எமக்கு ஏற்படுகின்ற இடர்களினின்றும் மீள்வதற்காக மட்டுமே கடவுளிடம் நேர்த்திவைத்து சமயத்தின் துணையினை சமயம் கருதி நாடுகின்றோம். எம்மையெல்லாம் தர்மநியதியுடன் ஆன்மீகப் பாதையில் செல்வதற்கு உரிய சாதனம் கடவுள் வழிபாடாகும். ஆனந்த வடிவமாக பஞ்ச கிருத்திய நடனம் புரியும் நடராஜர் ஆகாயத் தலமான தில்லையில் தனது இடது பாதத்தினை (தூக்கிய திருவடி) தூக்கி தானும் திருவருட்சக்தியுடன் இணைந்த திருநடனம் புரியும் இத்திருவடியினை சரணடைந்தவர் யாபேருக்கும் பேரின்பம் கிடைக்கப் பெறும். அதுவும் மனிதப் பிறவிக்கே உகந்தது என்பதனை அப்பர் தனது பாடலில் கூறியுள்ளார்.

**"...............**
**இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே."**

- என்கிறார்.

**"முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே."**

என மணிவாசகர் போற்றும் இறைவனை தரிசனம் செய்ய கண்கள், தியானிப்பதற்கு மனம், கேட்பதற்கோ எண்ணிறைந்த திவ்வியப் பெயர்கள் உண்டு என்கின்றார்.

இறைவழிபாட்டினை ஆற்றுவோர் கடைப்பிடிக்கப்பட வேண்டிவையை சேக்கிழார் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்**
**திருந்து சாத் துவிகமே யாக**
**................."**

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகள் வாயிலாக அறியப்பெறும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்து பெரிய அறிவும் ஒருமைப்பட்டு கட்புலன் ஒன்றிலே நிற்க,

முக்குணங்களில் சாத்வீகமான குணத்துடன் இறைவழிபாட்டினை ஆற்ற வேண்டுமென்கின்றார்.

எங்ஙனம் இறைவழிபாட்டினை ஆற்ற வேண்டுமென பட்டினத்தார் கூறுகின்றார்?

**"இறைவழிபாட்டினை ஆற்றுமிடத்து,**
**திருநீறுமிட்டுக் கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும்"**

திருநீறு தரித்தல், கைகுவித்து அஞ்சலி செய்தல், ஐந்தெழுத்து மந்திரத்தினைப் பாராயணம் செய்தல் வேண்டுமென்கின்றார்.

**'மானிடப்பிறவிதான் அரிதான பிறவியென்பது'** தாயுமானவர் கூற்றாகும்.

**"எண்ணரிய பிறவிதனில் மானுடப்**
**பிறவிதான் யாதினும் அரிதரிது காண்"**

ஒருவர்க்கு ஒரு முறை மனிதப் பிறவி பெற்றால் தொடர்ந்தும் மனிதப் பிறவிதான் எய்துவோம் என்பதனை யாம் அறியோம். எனவே இறைவனை வழிபடுவதற்கு.

**"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ"**

எனக் கூறுகின்றார்.

**"திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து**
**பருகி யூறலைத் பற்றிப் பதமறிந்து"**
**'உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே'**

என்பது அப்பரது வாக்காகும்.

"கண்டறியேன் கேட்டறியேன் காட்டு நிலையே கொண்டறியேன்"

இறை உருவத்தினை வழிபடல் அவரின் புனித அருட் திறன்களை கேட்டு வழிபடுதல் மனத்தில் இறை உருவை வைத்து அகவழிபாட்டினை இயற்றுதல் ஆகும். இதனை திருநாவுக்கரசர்,

**"உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளியாக**
**மடம்படும் உணர்நெய் பட்டி உயிரெனும் திரியயக்கி**
**இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே"**

இதனையே தாயுமானவரும் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"**

உடம்பினில் மனத்தில் மெய்யுணர்வினை நெய்யாக ஊற்றி உயிர் எனும் திரியைச் சேர்த்து ஞானமாகிய தீயினால் விளக்கினை ஏற்றி அவ்வொளியில் தெரிவது முருகப் பெருமானின் தந்தையாரின் வீரக்கழல் அணிந்த திருவடிகள் ஆகும்.

இறைவழிபாட்டின் பொழுது இறைவனைப் போற்றியும் ஏற்றியும். பாடல்களை பாடும் மரபு பழமையானது ஓதுவார் என்போரே ஆலயத்தில் பஞ்சபுராணம் ஓதுதல், திருவாசகம் ஓதுதல் போன்ற பணிகளை ஆற்றி வருகின்றனர். சேக்கிழார் **"அர்ச்சனை பாட்டேயாகும்"** என்பார். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் அடியார்களை போற்றுகின்றார். **"அவ் அடியார்களில் இறைபுகழினை எவ் அடியார் பாடினரோ அவர்கட்கு தான் அடிமை"** என்கின்றார்.

ஈசன் ஒரு மின்னல் கீற்றுபோல் ஆன்மாவில் ஒளிர்கிறான். அவன் பிராணரூபமாய் விளங்கி உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆற்றலைத் தருவான்.

**'உள்ளத்து ஒருவனை உள்ளூறு சோதியை**
**உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதே!'**

இறைவன் நமது மன மண்டலத்தில் பேரொளி வடிவில் இருப்பவன். ஒருபோதும் எமது மனதைவிட்டு நீங்காதிருக்கிறான். இறைவனை வழிபடுவதற்கு தடையாக இருப்பது நான் எனது என்ற அகந்தை ஊழ்வினை, மாயை இவை காரணமாய் நாம் காணத் தவறிவிடுகிறோம்.

**"தன்னையறிவது ஞானம்**
**தன்னை அறியாதிருப்பது அஞ்ஞானம்"**

எமது அறியாமை என்ற இருளிலிருந்து விடுபட இறைவழிபாட்டினை ஏற்றுமிடத்து அந்த இருள் நீங்கி ஒளிபெறும்.

மார்க்கண்டேயர் தனது ஆயுள்விருத்தி வேண்டி சிவலிங்க வழிபாட்டினை இயற்றினார். யமன் மார்க்கண்டேயரை கவர வந்த பொழுது சிவபெருமான் திருவருட் சக்தியுடைய தனது இடது பாதத்தினால் உதைத்து சம்ஹாரம் செய்தும் பூமாதேவிக்காக எமனை அனுக்கிரஹம் செய்தார். மார்க்கண்டேயருக்கு ஆயுள்விருத்தி வழங்கி அருளினார்.

உலகத்தில் ஒட்டாமல் இருக்குமிடத்து அருள் கிடைக்கும். ஆலிலை கிருஷ்ணன் மார்கண்டேயரின் பக்தியை வியந்து, தன் மாயாவித்தைகளை காட்டுவதற்காக பிரளயத்தைக் காட்டினான். அந்த பிரளய வெள்ளத்திலேதான் ஒரு ஆலிலை மேலே படுத்துக்கொண்டு குழந்தையாக கிருஷ்ணபகவான் தரிசனம் தந்தான். ஆலமரத்தின் கீழே மௌனமாக உட்கார்ந்து நால்வருக்கு பரமேஸ்வரன் (தட்சிணாமூர்த்தி வடிவமாக) உபதேசம் பண்ணுகின்றார். மகாவிஷ்ணு ஆலிலை மேல்படுத்து விலாசத்தைக் காட்டி, ஞானம் கொடுக்கிறார். இந்நிலையில் கிருஷ்ணன் முகுந்தன் என அழைக்கப்பெறுவான். மிருக வர்க்கத்தில் பசு போல தாவர வர்க்கத்தில் ஆல் உயர்ந்தது. ஆலமரத்தின் கீழே பிதிர்க்கருமங்களை செய்வது சிறந்தது. தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருப்பதும் ஆலமரத்தின் கீழே தான். இது ஞானகாண்டம். கர்மா எத்தனை உயர்ந்ததோ அது மாயா சம்பந்தமானது. அதனாலேதான் மார்க்கண்டேயருக்கு மாயா தரிசனம் பண்ணுகிறார், ஆதிசேடன் மீது அறிதுயில் கொள்பவரான மகாவிஷ்ணு.

**'கண்ணில் காண்பது உன்காட்சி கையால் தொழல்,**
**பண்ணல் பூசை, பகர்வது மந்திரம்,**
**மண்ணொடு ஐந்தும் வழங்குயிர் யாவுமே**
**அண்ணலே நின் அருள் வடிவு ஆகுமே.'**

**– தாயுமானவர். 18.33**

பெண்களுக்கான நோன்பிருந்து தனித்துவமான இறை வழிபாடு திருவெம்பாவையும் திருப்பாவையும் இறைவழிபாட்டியலை எங்ஙனம் இயற்ற வேண்டும் என்பதனை கூறுவன ஆகமங்கள்.

இவை 28 எனவும் இவை சிவபிரானால் அருளப்பட்டவையென்றும் அதில் எமக்குரியது காமிக ஆகமமாகும். இதனைத் தமிழில் கூறுபவை திருமந்திரம் இது ஒன்பது திருமந்திரங்களைக் கொண்டது.

தேன் எனப் போற்றப்படும் திருவாசகத்தினை தினமும் ஓதி வந்தால் தொல்லையான பிறவி அகலும். மணிவாசகர் இறை திருப்பாதங்களை **'நமச்சிவாய வாழ்க'** எனப் போற்றி, அச்சோவே பதிகத்தில் முடிக்கின்றார். இறைவனை அம்மையே என விளித்து, **'அம்மையெனக் கருளிய வாறார் பெறுவார் அச்சோவே'** என முடிக்கின்றார்.

இறைவழிபாட்டினை இயற்றுமிடத்து நாம் கடைப்பிடிக்கும் சைவசாதனங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்குமாம். இந்நெறி எமது புறவாழ்வையும் அகவாழ்வையும் நெறிப்படுத்தி ஆன்ம ஈடேற்றம் பெற உதவும் தாயுமானவர் இதனை,

**"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"**

என்கின்றார்.

எனினும் ஒவ்வொருவரும் இறைவழிபாட்டினை ஆற்றும் பொழுதும், இதனை மனத்தினில் இருத்தி வழிபடல் வேண்டும் என்கின்றார்.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்**
**வேறொன்றறியேன் பராபரமே."**

ஒரு பொருளின் புறத்தோற்ற அமைப்பினை சுலபமாக தெரிந்து கொள்ளலாம். சமய நெறியின் புறத்தோற்ற அமைப்பானது சடங்குகள் செய்வது, சின்னங்களை அணிவது, ஆலய வழிபாடு, சமய நூல்களை படிப்பது, கேட்பது இவையாவும் சுலபமானது ஆனால் சமய நெறியின் அக அமைப்பானது மனதினை உள்முகமாக திருப்பி இறை பாதங்களை பணிவதேயாகும்.

உலகத்தவர்களில், நிலையில்லாத செல்வங்கள் மீது வைக்கும்

அன்பானது பாசத்தை வளர்க்கின்றது. பின்னர் அப்பாசம் துன்பமாக வடிவெடுக்கிறது. ஆனால் கடவுளிடம் செலுத்தும் அன்பு தியாகத்தினை வளர்க்கும் பக்தியாக மாறுகிறது. பக்தியை பெருக்குவதே முக்திக்கு வழியாகும். ஒவ்வொரு வீட்டிலும் அவரவர் செய்யப்பெறும் சின்ன சின்ன தியாகச் செயல்களே உலக வரலாறு ஆகின்றது. ஒரு நாட்டில் வளர்ந்த பெரிய மனிதர்கள் அதன் வரலாற்றினை உண்டு பண்ணுவதில்லை. மக்கள் வாழ்கின்ற வாழ்வே நாட்டின் வரலாற்றினை ஏற்படுத்துகின்றது.

பொருளாசை கொண்டோர் அது இல்லாமல் வாழ முடியாதென பணத்திற்கு பின்னால் ஓடுகின்றார்கள். பாசங்களின்று விடுபடுமிடத்துத்தான் ஒவ்வொருவரினது மனநிலை சாந்தமாக மாறும். சாத்வீகமான பண்பு. மிளிரும் சாத்வீகமான நிலையினை பௌர்ணமி தினத்திற்கு ஒப்பிடலாம். எமது விடேச தினங்கள் ஆலயப் பெருவிழாக்கள் யாவும் பௌர்ணமி தினத்தன்று நிகழும். இதன் தத்துவார்த்தம் பௌர்ணமி தினமான தண்மையான ஒளியை பரப்புகின்ற நாளாகும். இப்பௌர்ணமி தினத்தில்தான் எமது விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் யாவும் கொண்டாடப்படுகின்றன. பௌத்த மதத்தவர்களுக்கு கூட பௌர்ணமி தினம் புனித நாளாகும். இத்தினத்தில் விசேட தினங்கள் இடம்பெறுமிடத்து ஒவ்வொருவரது மனநிலையிலும் எவ்விதமான சஞ்சலமின்றி சமூக சமரசமும் பேணப்படும் தூய்மையான அன்புடன் யாவரும் தமது செயற்பாடுகளை ஆற்றுவர். உள்ளமானது அமைதியடைந்து சாத்வீகமான குணப் பண்புகளுடன் திகழும்.

ஒவ்வொரு மதமும் தியாகத்தையும் சுயநலமின்மையையும் வலியுறுத்துகின்றன. ஒரு சிலர் இறைவன் சொர்க்கத்தில் இருக்கின்றார் என்கின்றார். வேறு சிலர் இறைவன் எங்கும் நீங்கமற நிறைந்துள்ளார் என்கின்றனர். இவ்விரண்டு விதமான கோட்பாடுகளின் முடிந்த நிலை ஒன்றுதான். எனவே ஒவ்வொருவரும் தத்தமது மார்க்கத்தை பின்பற்றி இறைவனை

அடையலாம். ஒன்று மட்டும் நிதர்சனமானது பின்பற்றும் மார்க்கங்கள் வெவ்வேறானவைகளாக தென்பட்டாலும் முடிவில் இரண்டும் ஒரே குறிக்கோளின் கண்கொண்டு சேர்கின்றதெனலாம்.

எனினும் ஒவ்வொரு சமயத்து மகான்களும் தூய நெறியுடனும் அன்புடன் தர்ம வழி நின்று வாழ்ந்து முன்னோடிகளாகக் காட்டியுள்ளார்கள்.

**'அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை**
**அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விதிவழி அடைய நின்றனரே,'**

- **திவ்ய பிரபந்தம் 2679.**

வரலாற்றினை நோக்கினால் எந்த வகையான உயர் பதவிகளை வகித்தவர்கள் இன்றும் போற்றப்படுபவர்களாக இருக்கின்றனர் அவர்கள் யாபேரும் தூய்மையான வழிபாட்டினை இயற்றியுள்ளனர். அதனால்தான் இன்றும் எம்முடன் உலாவந்து கொண்டிருக்கின்றனர். ஒருவனை முழுமைத்துவம் பெறச் செய்வது அவனது தூய சிந்தனையோடு கூடிய இறைவழிபாடே ஆகும்.

ஒவ்வொருவரும் தாம் நிற்கும் நிலையினைக் கொண்டு இறுமாப்பு கொண்டால் அவர்களது வாழ்க்கை பெரும் சுமையாக தெரியும். இறை வழிபாட்டினாலும் இறை அருளினாலும் எமக்கு எல்லாவித சௌந்தரியங்கள் கிடைக்கப் பெறுகின்றன என மனம், மொழி, மெய்யினால் உள்ளமுருகி வழிபாடுயியற்றுமிடத்து யாவும் வெற்றியாக அமையப்பெறும். சமய குரவர் நால்வரின் உலகம் சிவபெருமானும் சக்தியும். அவர்கள் வேறு எவரையும் போற்றிப்பாடவில்லை. தாம் கேட்கின்றோம் அதனை சிவன் செவிமடுத்து எமக்கு அருள் பாலிப்பார் என அவர்களாற்றிய எத்தனையோ செயற்கரிய செயல்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவர்கள் யாபேரும் அநுபூதிமான்கள். தமது வழிபாட்டினால் தாமே கண்டும், அறிந்தும், அநுபவித்தும் பிறர்க்கு எடுத்துரைக்க இயலாததுமான அநுபவம் பெற்றவர். அவர்களால் பாடப்பெற்ற பாடல்கள் யாவும் இறைவன் வாக்குகளே. இதனாலே,

“வண்டமிழால் எழுதும் மறை பொழிந்த பிரான்” என அப்பரும், ‘எனதுரை தமதுரையாக’ எனச் சம்பந்தரும் கூறியுள்ளனர்.

நாரதர் விஷ்ணுபகவானின் மகிமைகளை கர்ப்பிணியான இரணியனின் மனைவிக்கு உபதேசிக்கும் பொழுது கருவிலிருக்கும் குழந்தை மனதில் ‘ஓம் நமோ நாராயணாய’ என்ற மந்திரம் பதியப்படுகிறது. அக்குழந்தையே பிரகலாதன். அவனுக்கு அருள்புரிந்தது மகாவிஷ்ணுவின் மந்திரமும் இறைவழிபாடுமேயாகும்.

அடியார்களின் வழிபாட்டியலின் ஏற்றத்தினை சேக்கிழாரின் பெரியபுராணம் எடுத்தியம்புகின்றது. இப்புராணத்தில் கூறப்பெற்ற அடியார்கள் யாபேரும் தத்தமது அறிவு மனப்பக்குவத்திற்கமையவே தமது இறைவழிபாட்டினை ஆற்றியுள்ளனர். இவர்களின் அன்புநிலை அவரவர்களின் நிலைக்கேற்ப வெளிப்படுகின்றது. இவர்கள் தம் வாழ்வின் இலட்சியங்களில், கடமைகளில் இறை வழிபாட்டின் உச்சங்களை எடுத்துக்காட்டியுள்ளனர். இவர்களின் வாழ்வும் வரலாறும் பாமரமக்களிடம் கூட சமய நெறியினை புகட்டி தர்மநெறியில் வாழ வழிவகுத்தன. இவர்களின் இறைவழிபாட்டியலை அன்புடன் ஆற்றுமிடத்து தமக்காக எவ்விதமான செல்வங்களை கேட்டாமல் உலக நன்மை, மக்களின் பிணி நீங்கி யாபேரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுமென்றனர்.

இறைவழிபாட்டின்போது இல்லத்திலோ அன்றி எந்த வைபவத்தின் பொழுதும் பஞ்சோபசாரம் என்கின்ற ஐந்து உபசாரங்களை ஆற்றுதல் வேண்டும். இறைவனுக்கு அளிக்கப் பெறும் நைவேத்தியம் - பூமாதேவியினால் உற்பத்தி செய்யப்படும் தானியங்களால் செய்யப் பெற்ற உணவு வகை, இறைவனின் அபிடேகத்திற்குப் பயன்படும் சாதனங்களான நீர், பால், தயிர் இவை நீருடன் தொடர்புடையவை.

தீபங்கள் - அக்கினியை சார்ந்தவை.

தூபம், சாமரை இவை வளியுடன் தொடர்பான உபசாரமாகும்.

ஆகாயம் - மந்திரம் தோத்திரம் முதலிய ஆகாயத்திலெழும்

சத்தத்தினால் நாதத்தினால் ஒலிப்பது.

பூசை ஆராதனைகள் இடம்பெறும் பொழுது எழுப்பப்படும் மங்கல வாத்தியங்களும் பஞ்சபூதங்களுடன் சார்ந்தவை.

நிலம் - இதில் உற்பத்தியாகும் மரங்களைக் கொண்டு தயாரித்து அதன் மூலம் ஒலிப்பது - மேளம் - ஆர்மோனியம்.

நீர் - கடல் நீரிலிருந்து எடுக்கப்படும் சங்கு, இதன் நாதத்திலிருந்து பிறப்பது சங்கொலி.

தீ - உலோகங்களைத் தீயினால் உருக்கி வார்க்கப்படுவதனால் பெறப்படும் கருவிகள் - மணி, சேமக்கலம், தாளம் இவற்றின் மூலம் பிறப்பது ஒலி ஆகும்.

வாயு - நாதஸ்வர ஒலி வளியிலிருந்து பிறப்பது.

ஆகாயம் - இது சப்த ஒலி நாதம் எம்மிடையே இருந்து பிறப்பது.

வேதபாராயணம், தமிழ்மறை வாழ்த்து. இது விண்ணொலியாகும்.

இறைவழிபாட்டின் பொழுது மணி முக்கியத்துவம் பெறுகிறது. மணியினால் எழுப்பப்படும் நாதமானது எங்கும் இறையருளினை வியாபிக்கச் செய்கிறது. கண்டாமணியின் நாதமானது இறைவழிபாட்டிற்கான ஆயத்தத்தினை தெரிவிக்கின்றது. பூசை நிகழுமிடத்து கைமணி, கொத்துமணி, கண்டாமணி யாவும் ஒலிக்கப்பெறும்.

சங்கு தர்மத்தைக் குறிக்கிறது. சங்கு ஒலி தீங்கின் அழிவினையும், நல்ல செயல்களின் வெற்றிகளையும் காட்டுகிறது. ஆலயங்களின் திருவுருவங்களுக்கு அபிடேகம் சங்குகளினால் தான் நிகழத்தப்பெறும். *108*, *1008* சங்கின் மூலம் விசேட அபிடேகங்களும் இடம்பெறும். சங்கினை காதுக்கருகில் வைத்தால் கடலலைகளின் ஓசையைப் போல், 'ஓம்' என்ற அதிர்வினை கேட்கலாம். கிராமங்களில் முக்கியமாக பூசைகள் இடம்பெறும் இடத்து மணியொலி, சங்கு ஒலி, ஆகியவற்றால் எழுப்பப்படும் ஒலிகளினால் ஆலயங்களுக்கு செல்லாதோர்கூட தமது வேலைகளை நிறுத்திவிட்டு மனம், மொழி, மெய் மூன்றினாலும் இறைவனை வழிபாடு செய்வர். ஆலயங்களிலும் வீடுகளிலும்

இறைவன் முன் சங்கு வைக்கப்பெறும். சங்கு நாதப் பிரமத்தை வேதங்களின் மங்கலத்தைக் குறிக்கிறது. இறைவனுக்கு அபிடேகம் செய்ததன் பின்பு புனித தீர்த்தத்தினை அடியார்களுக்கு வழங்கப் பெறும் பொழுது சங்கு பயன்படுத்தப்படுகிறது.

சங்கின் மகத்துவம் தொடர்பாக விஷ்ணு புராணம் கூறும் கதையானது, கிருஷ்ணரும், பலராமனும் காசியில் பிறந்த வேதியரான சாந்தீபினி முனிவரிடம் அறுபது கலைகளையும் கற்று தேர்ந்தனர். இருவரும் குருகுலக் கல்வி நிறைவு பெற்றதன் பின்பு முனிவரிடம் குருதேவா, தங்களுக்கு குரு தட்சணையாக நாங்கள் எதனைத் தருவதை விரும்புகிறீர்கள் என்று கேட்டனர். முனிவர், கிருஷ்ணன் பலராமன் இருவரும் சாதாரண மானிடப் பிறப்பன்று சூரிய சந்திரரே ஏதோ காரண நிமித்தம் புவியில் அவதாரம் எடுத்துள்ளனர். எனவே, முனிவர் எனது மகன் பிரபாச தீர்த்தத்தின் கடலில் மூழ்கி இறந்துவிட்டான். அவனை உயிருடன் மீட்டுத் தருமாறு கேட்டார். கிருஷ்ணர் சமுத்திர ராஜாவே, சாந்தீபினி முனிவரின் மகன் இக்கடலில்தான் மூழ்கி இறந்து போனானாம். அவனை மீட்டுத் தரும்படி கேட்டார். சமுத்திரராஜன் கிருஷ்ணனை பணிந்து, அடியேன் என்மீது எவ்வித குற்றமுமில்லை. சங்கின் ரூபம் தரித்து பஞ்சஜனன் என்னும் அரசன் என் சமுத்திரத்தில் வாசம் செய்கின்றான். அவன்தான் முனி புத்திரனை கொண்டு போனவன் என்றான். சமுத்திரராஜன். கிருஷ்ணனும் பலராமனும் கடலின் அடிக்குச் சென்று பஞ்சஜனனுடன் போரிட்டு அவனை சங்காரம் செய்தனர். கிருஷ்ணன் எலும்பாலான சங்கத்தை எடுத்து யமதர்மனுக்கு முன்னாக சங்கநாதம் செய்தார். யமன், வந்திருப்பவர் கிருஷ்ண பகவான் என அறிந்து சாந்தீபினி புத்திரனை உயிருடன் ஒப்படைத்தனர். கிருஷ்ணனும், பலராமனும் முனிவரிடம் புத்திரனை ஒப்படைத்தனர். சங்கின் நாதத்தினால், பஞ்சஜனனுக்கு சங்காசுரன் என்ற பெயரும் ஏற்பட்டது.

இறைவழிபாட்டினை அவரவர் வீட்டிலிருந்து ஆற்றலாம். அங்ஙனம் ஆற்றுமிடத்து வாழ்வியல் தர்மநியதியுடன் ஆன்மீக நியதியுடன் வாழ வழிவகுக்கும். எமது உள்ளத்தில் உண்மை

ஒளி உண்டாகுமிடத்து ஒவ்வொரு வாக்கினில் செயலினில் ஒளி பிறக்கும். இறைவனுடன் ஒன்றுபடுவதற்கான ஆர்வம் இறையுடன் உணர்வு முறையில் கொண்டுள்ள ஆகியவைதான் வழிபாடு. இதனை மேம்படுத்த ஒவ்வொருவருக்கும் ஆன்மீகப் பசி எடுக்க வேண்டும். இறை அருள்நிலை பெற உபவாசம் நோற்று, எந்நேரமும் இறைநாமத்தினை உச்சரித்தல், இறைபுகழினை பண்ணமைத்து கேட்டல், இறை திருவுருவத்தின் மீது அந்தக்கரணங்களை அடக்கி, தியானம் செய்து மூடிய கண்களுடன் புறவாழ்வினை துறந்து அகத்திலே இறையுருவின் காட்சியினைப் பெற்று வழிபாட்டின் மூலம் இறைவனை அருகில் அமர்த்தப் பெறலாம்.

வழிபாட்டின் ஏற்றம் உளத்தின் மாசு சஞ்சலம் நீங்கி அமைதியான நிலையில் இதயத்தில் தரும உணர்வுகள் ஊற்றெடுத்து சமாதி நிலையிலும் அடையலாம். மனத்தினை கோயிலாக்கி அன்பினால் வழிபாடு செய்து ஆராதனை செய்யுமிடத்து மனமே கோயிலாகும். இந்நிலையில் இறைவழிபாட்டினை ஆற்றியவர் வாயிலார் நாயனார். இவரை சேக்கிழார் தபோதனர் என்கின்றார். வழிபாட்டிற்கு ஒன்றும் கிடைக்கவில்லையானால் நெஞ்சுண்டு, அந்த நெஞ்சால் வழிபடவேண்டும். இவரது அகப்பூசையின் சிறப்பினை சேக்கிழார் போற்றியுள்ளார்.

**'மறவாமை யானமைத்த மனக்கோயிலுள்ளிருத்தி**
**உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி**
**இறவாத ஆனந்தம் எனும் திருமஞ் சனமாட்டி**
**அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்சனை செய்வார்'**

இறைவனே உலகினிற்கு அத்திவாரம், அடித்தளம். இறையருட் சக்தியே உலகினிற்கு மூலாதாரம். அவனன்றி ஓரணுவும் அசைய முடியாது. இறை சக்தியின் இடத்திலேதான் நாம் வாழ்கின்றோம், நடமாடுகின்றோம் சகல உயிரினங்களும் அவனது இடத்திலேதான் வாழ்கின்றன. இவை யாவற்றையும் அறிவுபூர்வமாக சிந்தித்து உணர்வுக்கு அடிமையாகிவிடாது இறைவழிபாட்டினை இயற்றுமிடத்து அதற்குரிய அருள் கிடைக்கப் பெறும். ஒரு குழந்தை பொம்மை ஒன்றினை குளிப்பாட்டி

உடையுடுத்து சீராட்டி பாலூட்டி விளையாடுகிறது. தூங்கவும் வைக்கிறது. எதிர்காலத்தில் அன்பு பாசம் போன்ற பண்பாட்டு அம்சங்களையும் வளர்க்கின்றது. அதேபோன்றே இறைவனை உருவ வடிவில் வைத்து வழிபாட்டினை இயற்றுமிடத்து மனம் பூரணத்துவம் பெற்று மன நிறைவு வழிபாட்டிலும் கிடைக்கின்றது.

இறை வழிபாட்டின் மகத்துவத்தினை விஷ்ணு பகவான் மூலம் சிவபிரான் எடுத்துக் காட்டியுள்ளார். இதனைக் காளமேகப்புலவர் பின்வரும் பாடல் மூலமாக விளக்கியுள்ளார்.

**'சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்**
**போரங்க மாகப் பொருவதேன் – ஓரங்கன்**
**வேண்டாமி தென்ன விவரம் தெரியாதோ**
**ஆண்டானும் தாதனுமா னால்.'**

சிவபிரானை பூசிப்பதற்காக திருமால் ஆயிரம் தாமரை மலர்களை சேகரித்து வைத்தார். சிவபிரான் திருமால் தம்மீது கொண்ட வழிபாட்டின் பக்தி எத்தகையது என்பதனை சோதிக்க ஒரு தாமரை மலரினை மறைத்தருளினார். திருமால் சிவபிரானுக்குரிய பூசை ஆராதனை முழுமை பெறாது என தனது தாமரை போன்ற கண்ணைப் பெயர்த்து சிவபிரானை அர்ச்சித்து வழிபாட்டினை ஆற்றி சிவபிரானுக்கே அடியவர் ஆனார்.

மணிவாசகர் திருவாசகம் மூலம் தான் எங்ஙனம் வழிபாட்டினை இயற்றினேன் எங்ஙனம் இறையருள் கிடைத்தமையை பாடியுள்ளார்.

**'பெருமறை தேடிய அரும் பொருள் அடியேனை**
**அடித்து அடித்து அக்காரம் (பரமானந்தம்)**
**முன் தீற்றிய அதிசயம் அறியேனே.'**

பூனைக்குட்டி தனது தாய் என்னை எவ்விடத்திற்கு கொண்டுபோகுமோ என ஏங்குமோ. குட்டிகளின் செயல் எதுவும் இல்லை. தாயே பாதுகாக்கும். அதேபோல் எம்பிரான் எனக்கு அளித்த பரமானந்தம் சொல்ல முடியாது. இந்நெறி மார்ச்சல நெறியாகும். அதன் எல்லை அளப்பரியது.

இறைவழிபாட்டின் சிறப்புக்களை வள்ளுவப் பெருந்தகை கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் மூலம் பதியவைத்துள்ளார். இறைவன் எத்தகையவன் அவனது திருவடிகளை வணங்குபவர் பெறுபவை யாவை? வணங்காததற்கு கிடைக்கப் பெறாதவை? கடவுளின் திருவடிகளுக்கு தம்மை உளத்தூய்மையுடன் சமர்ப்பிப்போர் பெற்ற தகைமையினையும் வகுத்தும் தொகுத்தும் கூறியுள்ளார்.

முதலாவது குறளிலேயே....

**'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.'**

கடவுளின் திருப்பாதங்களை வணங்காதவன் தான் கற்ற கல்வியின் பயன்களை பெறமாட்டான்.

எனவே யாமெல்லாம் செய்ய வேண்டிய பணி இறைவனின் திருப்பாதங்களை போற்றியும், ஏற்றியும் வழிபாட்டினை செய்வது எமது கடமையாகும். எமது பணியினை தரும நியதியுடன் செய்தால் இறைவனுக்கும் ஒரு பணியுளது. என்பதனை அப்பர் தெளிவாக பாடியுள்ளார்.

**'தன் கடன்அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே.'**

எனவே, எமது வழிபாடு தூய்மையானதென்றால் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை எனவே எமது பிறவியின் பயன், இறைவன் தாள் தொழுதலே, இங்ஙனம் இயற்றுமிடத்து அவன் புகழ் ஒன்றே பொருள் பெருமைபேர் புகழாகும். எனவே, நாம் மானிடனாக பிறந்தும் பயனற்ற நாட்களாக வாழ்நாளினை இயற்றினால் அதுதான் அறிவு இலாதார்க்குரிய சான்றாகும்.

**'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ்வர்'**

**– திருக்குறள் :3**

மகாபாரதப் போர் நிறைவடைந்ததுடன் கிருஷ்ண பரமாத்மா

குந்திதேவியாரிடம், “உங்களது இன்னல்கள் யாவும் முடிந்துவிட்டன. அன்னையாரே யாம் உமக்கு வரம் அளிக்கவுள்ளேன். என்ன வரம் வேண்டும்” என்று கேட்டார். “கிருஷ்ணா, எனக்கு தினமும் தவறாது ஏதாவதொரு பிரச்சினையை தந்துவிட்டால் அதுவே போதும்” என்றார். “என்னம்மா நீ வரத்தினையை ஏன் இங்ஙனமாக கேட்கின்றாய்” என்றார். “பரமாத்மாவே எனக்கு ஏதாவதொரு பிரச்சினை வந்தவுடன் உன்நினைவுதான் எனக்கு வருகின்றது. சதாகாலமும் உன்னையே நினைந்துருகி வழிபாட்டினை இயற்ற வேண்டும் என்பதற்காகவே பிரச்சினைகளை அளிக்க வேண்டுமென்று கேட்கின்றேன்” என்றார். எனவே இறைவழிபாடு எத்தகைய மகத்துவம் உடையது. ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டி தேவை. ஒரு உதாரண புருஷர் தேவை, ஒரு கதை, நிகழ்ச்சி உருவம் இவையாவும் தேவைப்படுகிறது. இதனை நெறிப்படுத்துவது எமது நெறி சொல்லும் ஆன்மீகம். ஆன்மீகத்தின் அடிநாதமே இறைவழிபாடாகும்.

இறைவழிபாட்டினை விலங்குகள் கூட பூசித்து மோட்சம் பெற்றதை புராணங்களில் காணலாம். பல திருக்கோயில்களுக்கு விலங்குகளின் பெயரே அமைந்தும் உள்ளன. சீர்காளத்தி எனும் தலம் சிலந்தி, பாம்பு, யானை ஆகிய விலங்குகளின் வழிபாட்டினால் ஏற்பட்ட பெயராகும். சீர்காளத்தி சிவலிங்கத்தின் மீது பக்தி கொண்ட பாம்பு பாதாள உலோகத்திலிருந்து மாணிக்கக் கற்களால் காட்டில் மரத்தடியில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தின் மீது பூசை செய்து வந்தது. பாம்பின் சிவவழிபாடு இரவில் இடம்பெறும். காலையில் யானை, தனது துதிக்கையினால் நீரையும் பூக்களையும் இட்டு மாணிக்கத்தினை கீழே தள்ளிவிட்டு பூசை வழிபாடு செய்யும். இங்ஙனமாக பாம்பும் யானையும் மாறி மாறி பூசை வழிபாட்டினை செய்தன. ஒரு நாள் பாம்பு தனது மாணிக்கக்கற்களை யார் தள்ளிவிடுகிறார்கள் என்பதனை மறைந்து நின்று பார்த்தது. யானை தனது பூசை வழிபாட்டிற்கு இடையூறு என்பதனை அறிந்து கொண்டது. எனவே, பாம்பு சீறிப் பாய்ந்து யானையின் துதிக்கையினை கொத்தியது. பின்பு துதிக்கையினுள்

நுழைந்து பலமாக கொத்தியது. இதனால் யானை விஷம் ஏறி பாறை மீது துதிக்கையை பலமாக மோதியது. யானையும் பாம்பும் இறந்துபோயின. இத்தலத்தினை சிலந்தி ஒன்று சிவலிங்கத்தின் மீது தனது இழையினால் சிவனுக்கு கோபுரம் பிராகாரம் ஆகியவற்றினை கட்டி பூசை வழிபாடு செய்து வந்தது. சிவபிரான் சிலந்தியின் வழிபாட்டின் பக்தியை சோதிக்க விரும்பி சிலந்தி கட்டிய நூல் யாவற்றையும் எரித்துவிட்டார். சிலந்தி தான் கட்டிய நூல் எரிகின்றமையால் அதனை விழுங்கச் சென்றது. சிவபிரான் சிலந்திக்கு அருள்புரிந்தார். இப்படியாக சிலந்திக்கும் யானைக்கும் பாம்புக்கும் முக்தி கொடுத்த காரணத்தினால் இத்தலம் உயிரினங்களின் பெயரால் **ஸ்ரீ காளஹஸ்தி** என அழைக்கப்படுகின்றது சீ காளத்தி என்ற சொல்லை 'சீ' என்பது சிலந்தியையும், **காளம்** என்பது பாம்பையும், **அத்தி** என்பது யானையையும் குறிக்கும். சீகாளத்தி தலத்தின் சிவனின் திருமேனியைக் கவனித்தால் கீழ்ப்பாகம் யானைத் தந்தங்களும் நடுவில் பாம்பு பின்புறமாக சிலந்தியையும் காணலாம்.

விலங்குகள் பூக்களினால் பூசை வழிபாடு செய்ததனை சம்பந்தர் பாடலில் பதிவு செய்துள்ளார். திருமுதுகுன்றத்தில் குரங்குகள் சிவபிரானை மலர் கொண்டு வழிபட்டதை,

**'மந்தி ஏறி இனமாமலர்கள் பல கொண்டு**
**முந்தி தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே'**

எனப் பாடியுள்ளார்.

ஆண் யானை வேங்கை மரப்பூக்களை சிவலிங்கத்தின் மீது தூவி வழிபடும் பொழுது பெண் யானையும் இணைந்து வழிபட்டது எனவும் பாடியுள்ளார்.

**'பூந்தன் நறுவேங்கை கொத்திறுத்து மத்தகத்தில் பொலிய ஏந்தி**
**கூந்தல் பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலா.'**

எனவே இறைவழிபாட்டினை எவர் திரிகரணசுத்தியுடன் வழிபாடு செய்கின்றனரோ அவர்கள் யாபேருக்கும் எம்பிரானின் அருள் கிடைத்துள்ளது.

இங்ஙனம் ஐந்து அறிவு கொண்ட விலங்குகளும் பூச்சிகளும் கூட இறை வழிபாடு செய்கின்றன. ஆறறிவு கொண்ட மனிதர்களாகிய நாமெல்லாம் இறைவனை மறந்து உலக இன்பங்களே உண்மையென சிக்கி உழன்று வருகின்றோம். 'யமனை மார்க்கண்டேயருக்காக தனது இடது பாதத்தினால் உதைத்த சிவபிரானின் திருக்கழல்களை சதா சிந்தனை செய்து வழிபாட்டினை செய்தால் அருட்கடாட்சம் கிடைக்கும்' என்பது நக்கீரரின் வாக்காகும்.

இறைவன் இருக்கிறார் என்பதற்கு நேரடிக் காட்சி அதாவது பிரத்தியட்ச அனுபவம்தான். எமக்கு முன்னால் மேசை இருக்கிறது என்றால் நேரில் காண்பதுதான். இது எமது புலன்காட்சி. ஆனால், இறைவனை காண்பது புலன் அறிவினை கடந்து புலன்களின் சிறையினின்றும் விடுபட்டவுடன் விழிப்பு, கனவு, தூக்கம், நிலைகளில் கூட காணாதவற்றினை கண்டும் கேட்க முடியாதவற்றினையும் கேட்டும் அந்நிலையில் பேசும் மொழி கூட யாருக்கும் புதிரானது. எனவே, ஆன்மீகம் என்பது புலன் அறிவினை எல்லாம் கடந்த நிலையாகும்.

இறைவனிலிருந்து தோன்றிய அனைவரும் என்றோ ஒருநாள் இறை தாளினை அடைந்தே தீர வேண்டும். இறைவழிபாட்டினை தூய அன்புடன் ஆற்றினால் கிடைக்கும் பேறானது

**'ஈ என்று நான் ஒருவரிடம் நின்று கேளாத**
**இயல்பும் என்னிடம் ஒருவர் ஈது**
**இடுவென்ற போதவர்க்கு இல்லை யென்று சொல்லாமல்**
**இடுகின்ற திறமும் இறையாம்.'**

எனவே, 'விதியினை விதிப்பவன் இறைவன். விதியின் எழுத்தை மாற்றி அருளுபவனும் இறைவனே'.

எனவே இறைவழிபாட்டினை இயற்றினால் பழவினை துன்பங்கள், பந்த பாசங்கள் அழுக்குகளை கூடப் போக்கலாம். இறையருளும் கிடைக்கும்.

எமக்கு கிடைக்கப் பெற்ற செல்வம் கூட நல்லறத்தினை செய்யாதுவிட்டால் பயனற்றுப் போய்விடும்.

‘எட்டி மரம் பழுக்கும் ஏறிட்டு யாரும் அதைப் பார்ப்பதில்லை.’ எனவே, எங்கள் யாபேரது வாழ்வின் முடிவு எப்பொழுது என்று தெரியாது. அது முதுகுக்குப் பின்னே நின்று கொண்டிருக்கிறது என்பதனை நாலடியார் பாடல் கூறுகின்றது.

**‘இன்று கொலன்று கொலென்று கொலென்னாது**
**பின்னையே நின்றது கூற்றமென் றெண்ணி**
**பொருவு மின்றியவை யொல்லும் வகையான்**
**மருவுமின் மாண்டாராரம்’**

**– நாலடியார்**

‘நீளநினைந்தடியேன் நித்தலும் உமைக் கைதொழுவின்’ என யாமெல்லாம் தூய அன்புடன் இறைவழிபாட்டினை இயற்று வோமாயின் எவரிடத்து யாவும் தோன்றியதோ எவருக்குள் யாவும் வாழ்வியலை துய்க்கின்றவோ, நிறைவில் எவரை யாவும் சரணாகதி அடைகின்றவோ அவரே இறைவன். அவரது திருவடிகளை அடையலாம்.

எமது மனத்துடன் சேர்ந்து ஐம்பொறிகளும் ஆன்மாவில் அடங்கி புத்தியும், எப்ப ஓய்வு பெற்றிருக்குமோ அப்போது சிவப்பேறு கிடைத்துவிடும். இறைவனின் வடிவம் காட்சிக்குரியது அன்று. “ஒரு நாமம்” ஓருருவம் ஒன்றுமில்லாமல் விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொழியால் எண்ணிறைந்து எல்லையிலாதனானாய் இருக்கின்றான்.” இறைவனை எம் உள்ளத்துள்ளே உணர்வது எளிதாக சித்தியாகும் ஒன்றன்று. எனினும் அப்பர், தேடிக் கண்டுகொண்டேன் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் எனப் பரவசப்படுகின்றார். திருமூலரும் இதனைப் பாடுகின்றார்.

**‘நாடு நகரமும் நற்றிருக்கோயிலும்**
**தேடித் திரிந்து சிவப்பெருமான் என்று**
**பாடுமின் பாடிப் படிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக்கு கோயிலாக் கொள்வானே.’**

**– திருமூலர்**

நாடு நகரங்கள் நல்ல திருக்கோயில்கள் இருக்கின்ற ஊர்கள் தேடிப்போய் அங்கெல்லாம் எழுந்தருளியிருக்கிற சிவப் பரம்பொருளைக் கண்டு பெருமானே என்று போற்றிப் பாடுங்கள். அங்ஙனம் வணங்கிப் பணிபவர்கள் உள்ளமே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான் பரம்பொருள்.

அன்பு செய்வார்க்கே இன்ப நிலை

**என்அன்[பு] உருக்கி இறைவனை ஏத்துமின்**
**முன்அன்[பு] உருக்கி முதல்வனை நாடுமின்**
**பின்அன்[பு] உருக்கிப் பெருந்தகை நந்தியுந்**
**தன்அன்[பு] எனக்கே தலைநின்ற வாறே.**

**– 274**

மனிதனுக்கு இறைபக்தி என்பது இளவயதிலேயே வந்தால் தான் அது சிறந்த பக்தியாக அமையும். இளமையில் எமது மனதில் விதைக்கப்படும் பக்தியானது நாம் வளர வளர அதுவும் பண்பாக வளர்ந்து பெரும் விருட்சமாக மாறி, எமது ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கும். எனவே, இறைபக்திக்குரிய வித்தினை அன்புடன் மனதில் ஆழமாக பதியம் போடவேண்டும். இன்றைய கணனி உலகில் ஒவ்வொரு பெற்றாருக்கும் இது ஒரு பெரும் கடமையாகும். அப்பொழுதுதான் எமது தலைமுறை ஆன்மீக உணர்வுடன் தமது வாழ்க்கையை வளமாக வாழுவதற்கு உரியவராவார். இறைவனைத் துதித்து இறைவனின் திருப்பாதங்களை அடைவதே ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையாகும். இறைவழிபாட்டினை இயற்றும் இடத்து பூமாலையை விட பாமாலை உயர்ந்தது. ஏனெனில் பாமாலை ஞானம் வாசனை வீசுவது வாடாதது. உள்ளத்தை உருக்கி அன்புத் தேனைப் பெருக்கி, எம்மையெல்லாம் உய்விப்பது.

ஐஐஐஐ

# 6

# அன்னை பராசக்தி வழிபாடு

**இறைவன் தானே எல்லோரையும் தனித்தனியே பெற முடியாது என்பதனால் தான் தாயை இறைவன் படைத்துள்ளான்.**

**'தாய் அல்ல அவள் உலகை ஆளும் சக்தியான ஆதிபராசக்தியாக இருக்கிறாள்.'**

**—பாரதியார்**

வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தியானவள் 'இறை சக்தியாகவும், உயிர்கள் அனைத்திற்கும் முதன்மையாகவும் பொருள்கள் ஒவ்வொன்றிலும் சக்தியாகவும் நான் இருக்கின்றேன்' என்ற கருத்தில் தாயைப்பற்றி வேதத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே 'சிவன் அறிவின் ஆதாரம்' என்றால் 'சக்தி அதன் இயக்கம்.' எனவே பிரபஞ்சம் தோன்றுவதற்கும், நிலை பெறுவதற்கும், ஒடுங்குவதற்கும், ஆதாரமும் வேண்டும். இயக்கமும் வேண்டும். சக்திக்கு இரு அம்சங்களான சிற்சக்தி ஒளிமயமானது, அறிவுமயமானது, மற்றயது மாயா சக்தி. இது தன்னை மறைத்து உலகை வெளிக்காட்டி, எல்லாவற்றையும் உண்டாக்கும் சக்தி. சிவனும் சக்தியும் எங்ஙனம் பிரிவின்றி உள்ளனர் என்பதனை திருவருட்பயனில்,

**தன்னிலமை மன்னுயிர்கள் சாராத் தருஞ்சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்.** எனக் கூறப்பட்டுள்ளது.

இதனையே,

**"சத்தியாய் விந்து சத்தியாய்மனோன் மணிதானாகி**
**ஒத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி**
**வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி பொருத்தி யாகும்**
**எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்."**

சக்தி சிவபிரானிலிருந்து பிரியாத ஒன்று என்பதனை காட்டும் உருவவழிபாடே சிவபெருமானின் அர்த்த நாரீச்சர (மாதொருபாகன்) தோற்றம். இறைவன் சாந்தமாக இருக்க, சக்தி பிரபஞ்சம் முழுவதையும் இயக்குகின்றாள் என்பது தொன்று தொட்டு நிலவி வருவதாகும்.

எமது ஆலயங்களில் வழிபாட்டிற்காக அமையப்பெற்ற மூர்த்தம் சிவலிங்கமாகும் மாலும் அயனும் சர்ச்சையின் போது சோதி வடிவமாக தோன்றியதும் சிவலிங்கமே. சோதி மேல்நோக்கி நிற்கிறது. அது ஆன்மாவில் உயிருக்குயிராய் விளங்குகிறது. ஆன்மா அறிவுப் பொருள். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் ஒளிர்கின்றது. ஆன்மசோதி, அருட்சோதி, சிவசோதி என்ற மூன்றும் ஒருங்கே கூடியது சிவலிங்கம். இவ்வடிவமானது அருவமும், உருவமும் இணைந்த வடிவமாகும். இதன் கீழ்ப்பாகம் அகலமானது பீடம் போன்றது இதனை ஆவுடையார் எனச் சக்தியைக் குறிப்பது. அடியில் நாற் கோணமாயும் மேலே எண்கோணமாயும் இருப்பது, எல்லா அண்டங்களும் சிவசக்தியின் ஆளுகைக்குட்பட்டவை. இதன் நீண்டபாகம் கோமுகி. சிவசக்தி எல்லாவுயிர்களுக்கும் அருள் புரிதலை குறிப்பதாகும். சிவம்+ லிங்கம் - சிவலிங்கம். சிவம் கடவுள் லிங்கம் அடையாளம். ‘காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்’ என்று சேக்கிழார் பாடியுள்ளார். இது சிவனின் சதாசிவன் வடிவமாகும். இதில் அருவத்திருமேனியான சிவம், சக்தி, நாதம், விந்து என்பனவும் உருவத்திருமேனியான பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் ஆகிய உருவத் திருமேனிகளும் சதாசிவன் எனும் அருவுருவத்திருமேனியும் அடங்கப் பெறும். சிவலிங்கத்தின் மேற்பாகம் சிவனை குறிப்பது. கீழேயுள்ள பகுதி அருவப்பகுதியாகும். இது சக்தியின் பிரவாகத்தினை குறிப்பதாகும். யாவற்றையும் தாங்குபவள் சக்தியேயாகும்.

பிரபஞ்சத்தை இயக்குகின்ற சக்தியை இயற்கை என்றும், எம் உடம்பிலுள்ள உணர்வுகளை ஊக்குவிக்கின்ற சக்தியை

ஆத்மா எனக் குறிப்பிடுவோம். இந்த இரண்டுவிதமான சக்திகளுக்கிடையே ஏற்படுகின்ற கருத்து மோதல்களே மனித வாழ்வாகும். ஒவ்வொருவரும் அறிவுபூர்வமாக உணர்வு நிலையில் எந்த மனப்பாங்குகளில் ஏற்படுத்தும் விளைவிற்கு காரணம் இவ்விரண்டு வகையான சக்திகளின் வலிமைதான். சூரிய ஒளியானது எல்லாவற்றிலும் பரந்துபட்டு தனது வெளிச்சத்தை பரப்புகிறது. இறைவனோடு பிரிவில்லாத சக்தி யாவற்றையும் கடந்தும் ஒரு பெரிய சக்தி எனக் கருதி அதனைக் தாய் எனப் போற்றினான். அதுவே தாய் வழிபாடு தோன்றியமைக்கான காரணமெனலாம். இத்தகைய தாய் வழிபாட்டின் தொன்மையினை சிந்துவெளி வழிபாட்டு முறைமை எடுத்துக்காட்டியுளது. அங்கு அகழ்வின்மூலம் கிடைக்கப்பெற்ற முத்திரைகளில் சாந்த, சாந்தமற்ற பெண் வடிவங்கள் காணப்படுகின்றன.

காத்தல் கிருத்தியத்தை புரிபவரான மகாவிஷ்ணு மகாலக்ஷ்மியை தனது இடதுமார்பிலும், படைத்தல் கடவுளரான பிரமா சரஸ்வதியை தனது நாவிலும் வைத்துள்ளார். விநாயகபெருமான் தம் மடிமீது அறிவு, பயன் இரண்டினையும் தருகின்ற சித்தி புத்தி இரு சக்தியை வைத்துள்ளார். முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை என்னுந் தேவியரை இரு மருங்கிலும் அமர்த்தியுள்ளார். சிவனை முழுமுதற் கடவுளராக போற்றும் சைவர் போன்று சக்தியை முழுமுதற் கடவுளராக போற்றப்படுபவர் சாக்தர்.

**அன்னையின் மகத்துவம்:**

அன்பு, பொறுமை, தூய்மை, கலப்பில்லாத மனம், மன்னிக்கும் சுபாவம், தன்னலமின்மை இவை யாவற்றிலும் சிறந்தவள் அன்னை. ஒரு குழந்தை எத்தகைய ஏற்றம், இறக்கம் போன்ற நிலையினை அடைந்தாலும் தனது அன்பினை ஒரே மாதிரியாகவே அளிப்பாள். அன்னைக்கும் பிள்ளைகட்கும் எப்போதும் எந்த இடைவெளி இருக்கமாட்டாது. தாயின் சக்தி தான் யாவற்றையும் இயக்குகின்றது. என்பதனை சூரனை

சங்கரிப்பதற்கான உமையினால் முருகப்பெருமானுக்கு வழங்கப் பெற்றமை ஞானசக்தி வேலாகும். விநாயகர் அன்னையின் ஆணையினை மீறக்கூடாது என்பதற்காக சிவபிரானுடன் போர் செய்து தனது தலையையே இழந்தமை வரலாறாகும். இதனாலே அடியார்கள் 'தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்' என்றும், 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ' என்றும் 'அம்மையே அப்பா' என்றும் போற்றியுள்ளனர். சக்திதான் ஒவ்வொரு நிலையிலும் ஏதாவதொரு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', மாதா பிதா குரு தெய்வம், தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பது ஆன்றோர் வாக்காகும். அன்னையானவள் பாச உணர்வுடன் பிரதிபலன் கருதாது அள்ளி அள்ளி வழங்குபவள்.

தாய் அன்பின் மொத்தக் களஞ்சியம். அவளே தியாகத்தின் வாழ்விடம். ஒரு குழந்தையை உருவாக்கும் முதல் ஆசிரியை தாயே. தாயின் மடியே ஒரு குழந்தையின் ஆரம்பப்பள்ளி. இன்றைய சமகாலத்தில் இந்த ஆரம்ப கல்விக்குரு அநாதை வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றாள். இதனடிப்படை எமது பண்பாடு கலாசாரம் யாவும் இல்லங்களில் புகட்ட மறந்து விடுகின்றனர். பெற்றோரைப் பின்பு அவர்கள் வயதானால், எங்ஙனம் பேணுதல் வேண்டும் என்பதனை போதிக்க நேரமில்லை. பண்பாடு என்பது தாய் பிள்ளைகளை பராமரித்தல். இன்று நாகரீக கணினியுலகில் பிள்ளைகள் அநாதைகளாக ஆயாக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். "வலிமை என்பது தாய்முலைப் பாலடா" என்றான் பாரதி. போலி நாகரீகம் என்ற போர்வையில் இந்தத் தாய்ப்பால் கிடைக்காத பிள்ளைகள் எத்தனை. இந்தத் தாய்ப்பாலினால் பாரம்பரிய கலாசார பண்புமட்டுமன்றி உணர்வும் சேர்ந்தேயுளது. இதனை ஞானசம்பந்தருக்கு உமையம்மை திருமுலைப்பாலை ஊட்டியமையே எடுத்துக்காட்டுகிறது. உமையம்மையின் திருமுலைப்பாலினால் சிவஞானம் பெற்று இதுவரை அடியார்களோ பக்தர்களோ மூன்று வயதில் திருப்பதிகம்

பாடவில்லை. ஆனால், ஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே தேவாரம் பாடியமை உலக மாதாவின் திருஞானப்பாலின் அருட்கடாட்சமே ஆகும். தாய்ப்பாலுக்குரிய மகத்துவம் எத்தன்மையது என்பதனை அன்னை பராசக்தியே எடுத்துக் காட்டியுள்ளாள். அம்மையின் பாலினால் சிவஞானம் பெற்றவுடன் சம்பந்தர் முதலாவது திருப்பதிகத்தில் அன்னையை விழித்தே “தோடுடைய செவியன்...” என பாடியுள்ளார்.

பிரபஞ்சத்தில் அருள்நிலை குறையுமானால் மக்களும் மனிதத்துவத்தினின்றும் விலகி விலங்குப் பண்பினை உடையவர்களாவர். அதாவது ஆறாவது அறிவின் பிரயோகத்தினை நழுவவிடுவர். வாழ்க்கையில் இன்னல்கள் வருமிடத்து சுயநலம் வலிமை குன்றுகின்றது. இதனால் சுயநலம் விடுபடுமிடத்து உள்ளத்தில் விழிப்புணர்ச்சி உண்டாகின்றது. இந்தச் சூழல் நிலையில் ஒவ்வொருவரின் உள்ளத்தில் எழுப்பும் ஒலி அம்மா என்ற அதிர்வலையாகும். அதுதான் தாயான அன்னை பராசக்தி வழிபாடாகும். எல்லா உயிர்களும் இன்பமோ, இன்னலோ வருமிடத்து முதலில் எழுப்பும் சொல் அன்னையே.

இன்று விஞ்ஞான கணினியுகம். உலகம் உள்ளங்கை நெல்லிக்கனியாகியுளது எனினும் மக்கள் யாபேரும் அமைதி யின்மையுற்றுள்ளனர். வாழ்வில் எமக்கு கிடைக்கப்பெறும் கல்வி, செல்வம், புகழ், பதவிகள் இவையாவும் கிடைக்கப் பெற்றாலும் மனம் ஆத்ம திருப்தி அடைவதில்லை சாந்தியும் கிடைப்பதில்லை. காரணம் நாம் யாபேரும் எல்லாவற்றுக்கும் ஊற்றாக திகழும் அன்னை வழிபாட்டினை இயற்றாமையாகும். வழிபாடு, பக்தி, அன்பு, இரக்கம், பரோபகாரம் இவை யாவும் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதற்கு ஆதார சுருதியாக திகழுபவள் அன்னைதான். அவள் எல்லா உயிர்களிடத்தும் தூய அன்பினை செலுத்துகின்றமையால் நாமும், மனம், மொழி, மெய் என்பவற்றால் தூய்மையான பக்தியை செலுத்துவோமானால் அவளது பார்வை எப்போதும் எமக்குக் கிடைக்கும். மூன்று வயதான ஞானசம்பந்த குழந்தைக்கு அழுதது. அன்னை ஞானப்

பாலை ஊட்டி சிவஞானம் பெற அருளினார். உமாதேவியாரின் ஞானப்பாலினால் சம்பந்தர் சிவஞானம் பெற்று ஞானப்பாலின் ஒளிபிரவாகமாகி பக்தி இலக்கியமாகியது. சம்பந்தரின் தோடு உடைய செவியன் ஓ + தோ - என்ற ஓங்காரத்தில் ஆரம்பமாகி, சேக்கிழார் பெரியபுராணத்தில் 'உலகெலாம் என ஆரம்பமாகி வணங்குவாம் -ம். இல் நிறைவு பெறுகிறது. ஓங்காரத்தின் நாதமே பன்னிரு திருமுறையின் பக்திப் பிரவாகமாகும்.

அபிராமிபட்டருக்கு அமாவாசை தினத்தில் தனது இடது காதணியை கழற்றி வானத்தில் வீசி சந்திரனை வரவழைத்தாள். குமரகுருபரர் மதுரை மீனாட்சி பிள்ளை தமிழ் பாடுமிடத்து அவரது மடியில் இருந்து பாடலை கேட்டு மகிழ்ந்தாள். இன்னும், பாரதி, காளிதாசர் போன்ற மகாகவிகளாக வருவதற்கு ஊற்றாக திகழ்ந்தவள் திருவானைக் காவிலுள்ள அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளால் அவளது திருவாயின் தாம்பூலம் உமிழப்பட்டு அந்த அமிர்தத்தைச் சுவைத்து மேகதூதம், ரகுவம்சம் போன்றவற்றை இயற்றி, மகாகவி காளிதாசர் என ஏற்றம் பெற்றுள்ளார். அன்னை பராசக்தி தாயிடத்துத்தான் குழந்தைக்கு எல்லாவிதமான உரிமையும் உண்டு. அதேபோல் நாமும் அன்னை பராசக்தியிடம் உரிமை பூண்டு பக்திவயப்படுமிடத்து அவள் எல்லாவிதமான நலன்களையும் நல்குவாள். அன்னை பராசக்தி ஆனந்தமயமானவள். அவளது மடியில் நாம் ஓய்வு கொள்ளும் பாக்கியம் கிடைக்குமிடத்து நாம் மிகவும் பாதுகாப்பாக உள்ளோம். அந்நிலை வந்துவிட்டால் நாம் பெரும்பாக்கியம் பெற்றவர்களாவோம். அன்னையின் அருள் பெற்றவரிடம் அன்பும், அருளும், சாந்தியும் நிறைந்திருக்கும். அவர்களைச் சுற்றி ஒரு ஒளிப்பிரவாகம் காணப்படும் அன்னையின் பாதாரவிந்தங்களை சிக்கென பற்றிக் கொள்வோமானால் வாழ்க்கையை வளத்துடன் தனக்கென வாழாது மற்றவர்களுக்கெல்லாம் தேவைப்படுபவராக வாழலாம்.

சந்திரன் ஒளியான தாய் வழிபாடுகளுக்குரிய விசேட தினம் பௌர்ணமி தினம் வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரமும் கூடிய

நாள் புனிதமானது. இப்படிப்பட்ட நாளில்தான் வானிலிருந்து விழும் ஒரு சொட்டு மழைநீர் சிப்பிக்குள் புகுந்து நல்ல முத்து ஆகின்றது. எனவே, இத்தகைய நாளில் அன்னைக்கு ஆராதனைகள் செய்து பூசை வழிபாடு செய்தால் எல்லா சௌந்தர்யமும் வாழ்வில் கிடைக்கப்பெறும். சிவபிரானுக்கு ஒரு இரவாக சிவராத்திரியையும், சக்திக்கு ஒன்பது இரவாக நவராத்திரியாகவும் கொண்டாடப்படுகின்றது. அதுமட்டுமன்றி வீரம், செல்வம், கல்வி மூன்றுக்கும் அதிபதியாக திகழுபவள் அன்னை பராசக்தியேயாகும். அன்னையின் பெருவிழாவிற்கு உரிய மாதம் ஆடிமாதமாகும்.

தாயின் பெருமை மகத்துவத்தினை எடுத்து காட்டவே அம்மா என்று இதுவரை அழைக்காத பிறப்பில்லாத பெருந்தொகை இந்த உலகெலாம் உய்ய காரைக்கால் அம்மையாரை 'அம்மையே' என விளித்ததும் அதற்கு காரைக்கால் அம்மையார் 'அப்பனே' என சிவபிரானை அழைத்துப் பேற்றினைப் பெற்றார். தாய்மையின் சுகத்தினை சுகிர்ப்பதற்காவே பன்றிக்குட்டிகட்கு தாயாகியதுடன், அவற்றிற்கு பால் குடிக்க வைத்தமையாகும். உமை ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்ட இறைவனோ பசுபதி அதாவது உயிர்கட்கு தலைவன் என்பதனை காட்டவும் எல்லா உயிர்கட்கும் செலுத்தும் அன்பானது உயர்ந்தது என்பதனைக் காட்ட பன்றிக்குட்டிகட்கு பால் ஊட்டி தனது பேரருளினை எடுத்து காட்டியுள்ளார். சிவபிரான் தானே வைத்தியனாக மாறி தாயினை போற்றி தாயுமானவர் ஆனார்.

தாயின் பொறுமையோ எல்லையில்லை என்பதனை தாயுமானவர்,

**'எத்தன்மைக் குற்றம்**
**இயற்றிடினும் தாய் பொறுக்கும்'**

என்கின்றார்.

அதனாலேதான் பூமாதேவியை தாயாக போற்றும் வழக்கமுண்டு. இதனை வள்ளுவர்,

**'அகழ்வாரை தாங்கும் நிலம்போல் தம்மை**
**இகழ்வாரை தாங்கும் தலை.'**

பூமாதேவியை எத்தகைமை கொண்டு எதனைச் செய்தாலும் பொறுமையாகயிருப்பாள். தம்மை அகழ்பவரைக் கூட விழாமல் தாங்கிக் கொள்பவளான பூமாதேவிபோன்று நாமும் வாழ்வியலில் பொறுமையெனும் பண்பினை அணிகலனாக பூணுதல் வேண்டும். தாயன்பு மகத்துவம் தூய்மை, கலப்பின்றி அற்றது. அதனால்தான் மாதாவை முன்வைத்து அடுத்து பிதா தொடர்ந்து குரு இவர்களை முதற் தெய்வம் தாய், 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை.' தாயானவள்தான் நேரிடையாக எல்லாவிதமான அறிவையும் வழங்குபவள். எமது நெறியின் மகத்துவம் எல்லா விதமான வழிபாடுகளிலோ அல்லது மங்கல திருநாட்களாக இருந்தாலும் தாயை முன் வைத்தே செய்யப்பெறும். தாயை இழந்தோர் அவரது நினைவினையொட்டி பௌர்ணமி தினத்தன்று விரதம் அனுட்டிப்பர் தாயின் ஒளி தண்மை பொருந்தியது. சிவபிரானின் இடது கண் சந்திரனின் சுடராகும் ஒளி பரவாத பிரபஞ்சத்தில் தண்ணொளியினைப் பரப்பி உயிர்களை அரவணைத்து பாதுகாப்பவளும் அன்னையே. தம்பிள்ளைகளுக்கு எல்லாம் உறவுமுறைகளை எடுத்துக் காட்டுபவளும் அன்னையே.

யாவுமே தாயினுடையதும் - பந்தம் - முக்தி இரண்டையும் படைத்து அவளுடைய மாயையால்தான் மக்கள் காமத்திலும் - பணத்தாசையிலும் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவளது கருணையால் முக்தர்களாகி, சம்சாரத்தளைகளின்றும் காப்பவளும் அவளே என்கின்றார் பாரதியார்.

**'மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்**
**ஆதாரம் உன்னையல்லால் ஆர் எமக்குப் பாரினிலே?**
**ஏதாயினும் வழி நீ சொல்வாய், எமதுயிரே!**
**மேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமா!'**

**- பாரதியார்**

இன்று பேசப்படும் கவித்துவம் பெற்றவர்களின் மகத்

துவத்திற்கு காரணம் அன்னைவழிபாடும் அவரது அருட்காட்சமும் தான். இக்கவிமான்கள் யாபேரும் அன்னையைத்தான் முதன்மைப்படுத்தி பாடல்களை பாடியுள்ளனர்.

ஆறுகளைப் தெய்வங்களாகப் போற்றும் மரபுளது. கன்னியாகுமரித் தெய்வம் பெருமை பெற்றிருந்தது. மேலும் கங்கை, காவேரி, யமுனா, நர்மதா, கோதாவரி, சரஸ்வதி போன்ற நதிகள் பெண் தெய்வங்களைக் குறிப்பனவாகும். 'சரஸ்' என்றால் நீர் அல்லது ஒளி என்பது அர்த்தம். தங்கு தடையின்றிப் பிரவாகமாகப் பாய்வது. அன்னை வாக்கு, கலைகளுக்கும் தெய்வமானவள்.

காடுசார்ந்த நிலமும் தாய்த் தெய்வத்தின் உறைவிடமாகும். "ஓங்கு புகழ்கானமர் செல்வி - அருளலில்" என்று அகநானூறு கூறுகிறது. அன்னை வனவாசியெனவும் போற்றுவர். பொதிய மலையில் சந்தனக்காடும், இமயத்தின் அகற்காடும் அன்னை உறைந்துள்ளமையால் அவ்விடங்களில் வேறு மரங்கள் உண்டாக்கவில்லை என்பர். அன்னையின் சகஸ்ரநாமம் ஆதிசங்கரா சாரியாரினின் அருளப்பெற்ற 'ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்' மகிமை கொண்டது. அன்னையின் பெருமையை மார்க்கண்டேய புராணம் கூறுமிடத்து, 'கண்ணுக்கு புலனாகாத உருவமான தேவி, மகாகாளியாக உருவினையெடுத்து உலகைப் படைத்து, இலக்குமியாக உலகிற்கு வளத்தையும் செல்வத்தையும் வழங்கி, அறிவை அளிக்குமிடத்து சரஸ்வதியாகவும், உலகின் சங்காரத்தின் பொழுது காளியாக உருவெடுக்கிறாள்.'

அன்னையின் வழிபாட்டிற்குரிய ஸ்ரீ சக்கரத்தில் மூன்று ரேகைகள், மூன்று வலயங்கள், நாற்பத்து மூன்று முக்கோணங்கள். அன்னை வழிபாட்டினை மூன்று ரூபத்தில் அடியார்கள் வழிபடுவர் - தூலம் எம்போன்றவர்கட்கு, சூக்குமம் - யந்திரங்கள் அட்சரங்கள் கொண்டு பூசை செய்வோர், தவம் செய்வோர், ஞானியர் பரம் என்ற நிலையில் வழிபடுவர்.

அன்னையின் அருளாற்றலை அறிந்த ஞானியர் அவள் அருள் பேரின்பம் என்பார். அன்னையின் திருவருள் உணர்ந்தவர்கள் அவள் அறிவே வடிவானவள் என்றும், அவளது அன்பைப் பெற்றவர்கள்

'எல்லாம் அவள் செயல் தம்செயல் ஆவது ஒன்றுமில்லை' எனப் போற்றுவர்கள். எல்லாம் அறிந்தவர்கள் பரம்பொருளுடன் சக்தி பொருந்தி எழுந்தருளியிருப்பதை அறிவார்கள்.

அன்னையின் அருளால் கம்பன் 'அரசனைப் பார்த்து மன்னவனும் நீயோ வளநாடும் உன்னையதோ' என்றும் பாடியுள்ளார். ஒருமுறை காளமேகப் புலவர், திருமறையான் அரசனின் சபைக்குச் சென்ற பொழுது அவருக்கு எவருமே ஆசனம் கொடுக்கவில்லை. எனவே, அவர் அன்னை வாணியைத் துதித்து 'வெள்ளைக் கலையுடுத்து' எனும் பாடலைப் பாடியபொழுது அரசனும் சிம்மாசனமே நீண்டு காளமேகப் புலவர் இருப்பதற்கு அமர இடமளித்தது. இச்சம்பவத்தை வைத்து காளமேகப் புலவர் பாடிய பாடல் பின்வருமாறு,

**'வெள்ளை கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு**
**வெள்ளை கமலத்தே வீற்றிருப்பாள்**
**வெள்ளை அரியாசனத்தில் அரசரோடு என்னை**
**சரியாசனம் வைத்த தாய்'**

திருமூலர் அன்னையை போற்றுகின்றார்.

**'அவளை யறியா அமரருமில்லை**
**அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை**
**அவளன்றி ஊர்புகுமாற்றி யேனே.'**

தேவியை உணராத தேவர்களில்லை. அவளை முதன்மைப் படுத்தாத தவமேதுமில்லை. அவளது இயக்கமில்லாது ஐங்கடவுளராலும் ஆவதொன்றில்லை. எனவே அவளை வழிபட்டாலொழிய எமக்கு ஆன்ம ஈடேற்றம் எய்த முடியாது.

அன்னையை ஞானியர் அறிவு பூர்வமாகவும் ஆனந்த நிலையிலும் கண்டு பரவசமடைவர். அவள் ஆதாரமாய் யாவற்றையும் தாங்கி, காத்து புண்ணிய பலனையும் தருபவள்.

எனவே யாமெல்லாம் அன்னை வழிபாட்டினை இல்லத்திலிருந்தே ஆரம்பித்து அவளது மகிமையினை போற்றி வளத்துடன் வாழ்வோம். திருவருட் சக்தியே உயிர்களை

சிவத்துடன் சேர்க்க துணைபுரிகிறது. உயிர் ஆன்மஈடேற்றம் பெற்று பிறவிக்கடலினின்றும் விடுபடவே மனிதப் பிறவிதனை இறைவன் அளித்துள்ளான் என்பது சைவசித்தாந்த முடிபுகளுள் ஒன்றாகும்.

**'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்**
**பவன் பிரமசாரியாகும் பன்மொழிகன்னியாகும்.'**

- ***சிவஞானசித்தியார்***

**'ஒன்றது ஆகிய தத்துவ நாயகி**
**ஒன்றது கால்கொண்டு ஊர் வகை சொல்லிடில்**
**ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்**
**ஒன்றது காலம் எடுத்தருளும்முன்னே.'**

- **திருமூலர் 1098**

தத்துவங்கள் பலவானாலும், தோற்றங்கள் பலவாக இருந்தாலும் உலக தலைவியாகிய ஆதிசக்தி ஒன்றேயாகும். இந்த சக்தி உயிர்ப்புச் சக்தியாகிய பிராணனைச் சேர்த்து உள்ளத்தாமரையில் ஆட்சி செலுத்தி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் அருளாட்சி செலுத்தி வருகிறாள். ஆதி சக்தியே, காலத்தையும் கடக்க உதவும். யோகத்திற்கும் ஆதாரமும் முதல் துணையுமாகும்.

தாய்மை பாவனைதான் சாதனை வாழ்வின் கடைசிப்படியாகும். நீ தாய், நான் உன் குழந்தை இதுதான் கடைசிப்படி.

**'சலதி உலகத்திற் சராசரங்களை**
**ஈன்ற தாயாகினாலே எனக்குத்**
**தாயல்லவோ? யான் உன் மைந்தனன்றோ?'**

- **அபிராமிபட்டர்.**

எமது நெறியானது வழிபாடு இயற்றுமிடத்து தாயை முன்வைத்துத்தான் பேசப்படும். பார்வதி பரமேஸ்வரா, லக்ஷ்மி நாராயணா, சரஸ்வதி பிரமதேவா, வள்ளியம்மை தெய்வயானை சமேதராய் சுப்பிரமணியா, என வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. யாவும் சக்திமயம்தான். சக்தியில்லையேல் சிவம் இல்லை.

அன்னையின் சக்திக்கு எமது நெறி உயர்நிலையினை

காட்டியுள்ளது. சிவபெருமான் தனது இடது சடாமுடியில் கங்காதேவியை சூடியுள்ளார். இங்ஙனமாக எம்பெருமான் சடாமுடியில் சூடியமைக்கான தத்துவமானது பெண்ணானவள் புத்தி அறிவு மட்டத்தில் ஆணிற்கு இணையாகவே உள்ளாள். எண்சாண் உடம்புக்கு சிரசே முதன்மை. எனவே சிரசிலே கங்காதேவியை தரிப்பதன் மூலம் பெண் நிலையினை உயர்த்திக் காட்டியுள்ளார் எம்பெருமான்.

**'பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேயோர்**
**ஆரியத் தாளுண்டங்கு எண்மர் கன்னியர்**
**பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருஞ்**
**சாரித்துச் சத்தியைத் தாம் கண்டார்களே'**

**– 1084**

அறுபத்துநான்கு கலைகளுக்கும் நாயகி அன்னை பராசக்தி தான்.

விரிந்த தாமரை மலர்களின் எட்டு இதழ்களுக்கும் எட்டுக் கன்னிப் பெண்கள். அவர்கள் எட்டு என்ற கணக்கில் அறுபத்து நான்கு கலைச்செல்விகள். இந்த அறுபத்து நான்கு கலைச்செல்விகளும் அன்னை சக்தியை சார்ந்து நிற்கிறார்கள்.

அன்னையை வணங்கினால் முகத்தில் ஒளிப்பிரவாகம் உண்டாகும். அவளின் திருவடியினை இறுகப் பற்றிக் கொண்டால் எல்லாவற்றிலும் தெளிவு பெறலாம். எமது நடைமுறை வாழ்வு இன்பமே இடம்பெற அன்னைதான் நல்லருள் புரிவாள். அன்னையின் வழிபாட்டினால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களும் நீங்கிய அருள் புரிபவள். அன்னை நாம் செயல்படுகின்றோம் என உணருமிடத்து அன்னையை பிரிய மனம் ஏற்படாது **சக்தியின் வடிவம் தாய் தாயாகவிருப்பவளும் சக்தி.**

ஐஐஐஐ

# 7 நல்லொழுக்கம்

நல்லொழுக்கச் சீலராக வாழவேண்டும். அதனின்றும் பிறழ்வு கொள்ளக்கூடாது. நல்லொழுக்க நிலையினின்றும் வழுகுமிடத்து கிடைப்பது அசாதாரண பலன்களே என்றெல்லாம் நாம் தினம் தினம் உரையாடுகின்றோம். அவ்வவ்போது ஒருவனிடத்து நல்லொழுக்கப் பண்புகள் இல்லாமையினால் அவன் நிலைகுலைந்துள்ளான் என்றெல்லாம் சொல்கின்றோம்.

முதலில் நாம் ஏன் நல்லொழுக்கமாக வாழ வேண்டும்?. நல்லொழுக்க நியதிகளை கடைப் பிடிக்காமலே ஒருசிலர் கழுதை எங்ஙனம் புரண்டு புரண்டு படுப்பது போன்று வாழ்கின்றார்கள். எனினும் அவர்களும் நலமுடனே உலவுகின்றனர்.

நல்லொழுக்கமாக, நல்லவர்களாக இருப்பதற் கான அடிப்படைக் காரணம் - முதலில் சட்டதிட்டங்கள் - அதன் விளைவுகளினால் ஏற்படும் சஞ்சலங்கள். பயம் - அச்சம் - சமூகத்திற்கு இசைவாகி அடையாளத்தினை பெற்று வாழ வேண்டும். இவையாவற்றினை பெறுவதனால் ஒழுக்க சீலராக வாழவேண்டும். எமது புற இயல்பு களை தூய்மையாக்கும் கருவிகள் கொண்டு போக்கலாம். ஆனால் அகத்தூய்மையினைப் பேணல் சில பண்பியலை கடைப்பிடித்தல் வேண்டும். தீயனவையை விலக்கல், அன்பு, கருணை, தியாகம், சமூக இசைவாக்கம், சட்டங்களை நியதிப்படி கடைப்பிடித்தல் இவையாவும் நல்லொழுக்கத்திற்கான கூறுகள் ஆகும். எனினும், இன்றைய சமகால ஓட்டத்தில் நல்லொழுக்க நெறியில்

வாழ்பவர்க்கு வெகுமதி துன்பங்களும் இடர்களும்தான். அத்துடன் நன்மை செய்தாலும் கூட கிடைப்பது நன்றியாக இருக்காது. தவிர தகாத செயல்களை ஆற்றுபவர்கள் சுயநலமாகவும், வளமாகவும் வாழ்கின்றார்களே? என்ற வினா எம்முள் எழலாம். ஆனால் இதில் ஒரு யதார்த்தமுண்டு. நல்லொழுக்க நியதிகளை வழுவியோர் என்றோ அதற்கான பதிலை சொல்லியாக வேண்டும். ஒரு பயிரின் அறுவடையினை உடனே பெற்றுக் கொள்ள முடியாது. அதற்கான பருவம் கால இடைவெளி வேண்டும். ஒழுக்கசீலராக வாழ்ந்து தமது வாழ்க்கையை துய்த்தோர் இன்றும் சிரஞ்சீவியாக உள்ளனர். ஒரு றப்பர் பந்தினை சுவரில் அடித்தால் அங்ஙனமே எந்த மாறுபாடின்றி திரும்பி வரும். ஆனால் நாம் ஆற்றும் செயல்கள் அப்படியே வரமாட்டாது. எந்த செயல்களுக்கும் விளைவுகள் உண்டு. சாதகமான பாதகமான பலன்களுடன்தான் எம்மை வந்தடையும். எனினும் நல்லொழுக்கம் என்ற பதம் தொடர்பான தெளிவினைப் பெறல் வேண்டும். நல்லொழுக்கம் என்ற நிலையினை கடைப்பிடிக்க நல்வழி செல்லுதல் வேண்டும்.

நல்லொழுக்கத்திற்குரிய கோட்பாடுகளை கூறுவது நல்லொழுக்கத்திற்கு அடிப்படை யாது? அதற்குரிய ஏதாவது அளவுகோல்கள் உண்டா? இவை போன்றவைகளை அறிவுபூர்வமாக ஆராய்வதே நல்வழி. இத்தகைய நல்வழிக் கோட்பாடுகளை எங்ஙனம்? எப்படி? எவ்வகையில் நாம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பகுதிகளைக் கொண்டதே நல்லொழுக்கம். 'நல்வழி கோட்பாட்டு நியதிகளைக் கூற அதனை முறைப்படி செயன்முறைப்படுத்துவதே நல்லொழுக்கமாகும்.' இன்னும் எளிமையாக கூறுவதானால் ஒரு விடயத்தினை செயற்படுத்துமிடத்து அதனை உரிய நெறி வழியில் செய்வதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை கொண்டதே நல்வழியாகும். நல்வழியினின்றும் செல்லுமிடத்து நல்லொழுக்க சீலராக வாழமுடியும் எம்மிடையே இயல்பாகவே அமைந்திருக்கும் எனது, நான், மமதை போன்ற பண்புகளான விலங்குப் பண்பினின்றும் வேறுபடுத்தி வாழ வழிவகுப்பதே நல்லொழுக்கமாகும். காலங் காலமாக மனிதனிடம் பகுத்தறிவு

சிந்தித்து செயற்படுத்தலுமான ஆறாவது பரிமாணம் இருந்தும் எம்மால் நல்லொழுக்க பண்புள்ளவர்களாக வாழ முடியாமைக்கு அடிப்படையாக அமைவது நல்லொழுக்கம் தொடர்பான உரிய அறிவினைப் பெற்றுக் கொள்ளாமையே. எந்தச் சமய நெறியிலும் எவரும் ஒழுக்கசீலராக தனக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன்மிக்கவனாக வாழவேண்டுமென்றே கூறுகின்றது எவரையும் சீரற்ற வாழ்வினை வாழச் சொல்லவில்லை. இந்துநெறி கூறும் வாழ்வியல் ஒழுக்க நெறியானது ஒவ்வொருவரும் பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய நிலைகளிலும் உரிய அறதர்மநிலையில் நிற்றல் அவசியமென்கின்றது.

வயது முதிர பக்குவமடைந்து எல்லோருக்கும் முன்மாதிரியாக இருத்தல் அவசியமென்கிறது. வேதங்களில் இந்த ஒழுக்க நியதியை ரிதம் என்ற பதம் மூலம் குறிப்பிட்டுள்ளனர். ரிதம் என்றால் 'நியதி' அல்லது 'ஒழுங்கு' எனப் பொருள்படும். வேத காலத்தில் ரிதக் கடவுளராக வருணக் கடவுளரை வணங்கினர். வருணன் வலது கண் சூரியனது சுடராகவும், இடது கண் சந்திரனின் ஒளியாகவும் கொண்டவன். தகாத செயல்களைப் புரிபவரை வருணபகவான் சுட்டெரித்து விடுவான் என மக்கள் ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்தனர். மேலும் கொடுக்கல் வாங்கல் மூலம் ஒவ்வொருவரும் பிரபஞ்ச வாழ்க்கையுடன் இணைந்து வாழலாம் என அக்கினி வளர்த்து அதில் நெய்யினைச் சொரிந்து யாகங்கள் செய்வதன் மூலம் இக்கருத்தினை வலியுறுத்தினர். எனவே ரிதம் ஒழுக்கநெறி யாவற்றிலும் மேலானது. எதனையும் சாரமாட்டாது ரிதம் என்ற பதத்திலிருந்து வந்தது கர்மம் அல்லது வினை எனப்படும். நாம் செயல்களை ஆற்றும் பொழுது அது பிரபஞ்ச விளைவினை ஏற்படுத்தி அது வினைப்பயனாக வந்து சேர்கின்றது.

நாம் செயல்களை ஆற்றும் பொழுது அது பிரபஞ்ச விளைவினை ஏற்படுத்தி நற்செயல்கள் நல்ல விளைவுகளையும் தகாத செயல்கள் தீய பயனையும் தருகிறது. இந்த ரிதம் என்ற பிரபஞ்ச நியதியே பின்னாளில் தர்மம் என வழங்கப் பெற்று

சட்டம் ஆக்கப்பட்டது. எனவே இந்து நெறி நல்லொழுக்க ரீதியில் மானிடப் பண்புள்ளவனாக வாழாது விட்டால் செய்யும் நல்லன அற்ற செயல்கட்கு வெகுமதி கிடைக்காது தண்டனைகளையே அநுபவிக்க வேண்டிவரும்.

பழைமை நாகரிகம் பொருந்திய கிரேக்கர்கள் அவர்களது லோகோஸ் (Logos) உருவாக்கிய கோட்பாடுகளைக் கொண்டவர். லோகோஸ் கோட்பாடானது உலகம் உயிர்கள் உயிருணர்வுள்ள ஒன்று உயிரினங்கள் அதன் பகுதிகள். அதனையும் இயக்குவது லோகோஸ்தான். இக்கோட்பாடு ரிதம் டாவோவின் கருத்தைப் போன்றது. இவரது கருத்தை வளர்த்தவர் ஸ்டாயிக்ஸ் லோகோஸ் உயிரினங்களின் பகுதிகள் அதன் மக்களின் ஒழுக்க வாழ்வின் சமச்சீர் நிலையை அளிப்பது எனினும் லோகோஸ்ஸின் கோட்பாடானது மேனாட்டில் கிறிஸ்தவமதம் வருகையினால் நிலைக்கவில்லை.

கிறிஸ்தவர்களின் நல்லொழுக்கம் யூதர்களின் மதக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அவர்களது கொள்கையானது கடவுள் மோஸஸிற்குப் பத்துக் கட்டளைகள் அளித்துள்ளார். அதனை மக்கள் பின்பற்ற வேண்டும். நல்லொழுக்கமாக வாழ பத்துக் கட்டளைப்படி நடக்க வேண்டும். எனவே மேனாட்டார்களின் கூற்றானது நல்லொழுக்கத்திற்கு அடிப்படையானது பயம் என்கின்றது. கடவுளின் கட்டளையை மீறக்கூடாது. ஆனால் இந்துமத நெறி தர்மம் அல்லது வினை மீதுள்ள பயம் காரணமாக நல்லொழுக்க நெறியில் வாழவேண்டும் என்கின்றது. இஸ்லாமியரின் கருத்து பயம்தான் நல்லொழுக்க நெறியில் வாழ்வதற்கு.

எனவே நல்வழியில் சென்று நல்லொழுக்கமாக வாழுமிடத்து அவர்களது ஒழுக்கங்களின் வாயிலாக அவர்கள் தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ளவனாக மாற வேண்டும். இத்தகைய அமைப்பினராக வாழவேண்டுமேயானால், தத்தமது மனச்சாட்சிக்கு பயந்தவர்களாக தமக்கு மீறின சக்திக்கு மதிப்பளித்து தமது பகுத்தறிவு கொண்டு மானிட வாழ்வினை

மானுடப் பண்புடன் வாழவேண்டுமென்பதே எல்லா மத நெறிகள் விரும்புவதாகும்.

வள்ளுவரும் உயிரினும் மேலாயுள்ள நல்லொழுக்க நெறியினை கடைப்பிடித்தல் முக்கியமானதாகும். நல்லொழுக்க நெறியினின்றும் நாம் விலகிச் செல்கின்றபடியினால்தான் மதச்சண்டை, சாதி, வேற்றுமை பொருளாதாரச் சிக்கல் யாவும் ஏற்பட்டு மனிதன் மனிதப் பண்பினின்று விலகி விலங்குப் பண்புள்ளவாக மாறிவருகின்றான் என்பதனை சர்வதேச ரீதியில் நாடுகளில் ஏற்பட்டு வரும் பாதகமான விளைவுகளின்றும் நாம் காணக்கூடியதாக உளது. ஒவ்வொருவரும் தாம் செய்யும் செயல்களில், உறவுப்பகிர்வுத் தன்மையில் சமூகத்துடன் இணைவதில் நல்லொழுக்க நெறி மூலம் நடக்க தவறக்கூடாது. இயற்கை சமநிலைத் தன்மையினை இழப்பதற்கு அடிப்படைக் காரணம் மனிதனின் மனச்சாட்சிகளற்ற செயல்களே.

ஒழுக்கம் என்றால் என்ன? அதனை எங்ஙனம் பேணுதல், அதன் பெறுமதியின் தன்மைகளை இனம் கண்டு வகுத்தும் தொகுத்தும் ஒழுக்கம் என்ற அதிகாரம் மூலம் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர்.

ஒழுக்கம் என்பது எப்பொழுதும் உயர்வினைத் தருகின்றமையினால் உயிரினை போல் பேணுதல் அவசியம். உயிருக்கு துணையாக வந்து அறத்தை அளிப்பதும் நல்லொழுக்கமே, கரையற்ற கல்வியை கூட கற்க வாய்ப்புண்டு. ஒழுக்கம் அற்றவர்களிடம் உயர்வாகிய பெருமை நிலைக்காது. நல்லொழுக்கத்தின் இம்மை, மறுமை இரண்டும் நன்மை பயப்பதுடன் இனிய சொற்களுடன் எல்லோரிடமும் பழகுவர். மேலும் உலகத்தவர்களிடமே ஒத்துப்போகின்ற மனப்பான்மை கூட விழுமியங்களை கொண்டவர்களாக திகழுவர்.

ஒழுக்க நெறியினின்று வழுகும் இடத்து பெறுவது பெரும் பழியே ஆகும். ஒழுக்க நெறி அறத்திற்கு தூண் போன்றதாகும். ஒழுக்க நெறியின்மை, இம்மை, மறுமை இரண்டிற்குமே

துன்பத்தையே தரும். பொறாமை உடையவர்களிடம் செல்வம் நிலைக்காதது போல ஒழுக்கநெறி அற்றவர்களிடம் உயர்வாகிய பெருமை நிலைக்காது. எப்பவும், சிறுமையேயே அவர்கள் சந்திப்பர்.

ஒழுக்கம் அனைவருக்கும் வேண்டியதொன்று இதனை சிறுபருவத்தில்தான் பழகிக் கொள்ள வேண்டும்.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை" என்றும், "ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது" என்பது நிறைமொழி மாந்தர் வாக்கு.

'வேதத்தில் மனிதனுக்கு வயது நூறு என்று கூறுகிறது. ஏன் இளம் வயதில் சிலர் இறந்து போகின்றனர்' எனத் தருமர் பீஷ்மரிடம் கேட்டார். அதற்கு பீஷ்மர், 'ஒழுக்கத்தினாலேயே உண்டாகின்றன. ஒழுக்கத்தை விட்டவனுக்கு ஆயுள்குறைவு. நேர்மையாக நடந்தால் மேன்மையும் முன்னேற்றமும் உண்டு. ஒழுக்க நெறிகளை கடைப்பிடிப்பவனை கண்ணெதிரில் இல்லாவிட்டாலும் மக்கள் நேசித்து பாராட்டுவர். சுத்தம் அகபுற சுத்தம் ஆயுளை கூட்டும் அசுத்தம் ஆயுளை குறைக்கும். அறவோர், பசு, முதியோர், கர்ப்பிணி, சுமைதூக்குபவன் இவர்கட்கு முதலில் வழி விட வேண்டும். ஊனமுற்றவர், வறியவர், நேர்மையற்றவர், படிக்காத பெரியவர் இவர்களை இகழக்கூடாது. இறைவழிபாடு செய்து, கடமைகளை ஆற்றி, எவரையும் மனம் மொழி மெய்யினால் வருத்தக்கூடாது. இவ்வொழுக்க நெறி மனிதனை மேம்படுத்தும். இங்ஙனமாக வாழ்பவன் யாவராலும் ஏற்றம் பெறுவான்.' என ஒழுக்க நெறிகளை உபதேசித்தார் என மகாபாரதம் கூறியுளது. எம் ஒவ்வொரிடத்தும் இரண்டு வகையான பகைகள் உள்ளன. ஒன்று வெளியில் இருந்து வரும் பகை. அதனை நாம் நேரிடையாக சந்தித்து வெல்லவும் முடியும். மற்றையது கடினமானதும் எளிதில் வெல்ல முடியாத பகை. நமக்குள்ளேயே இருக்கும் பலவீனம், நெஞ்சத்துணிவின்மை, தமது செயல்களே நியமமாக செய்ய முடியாதோர் உரத்த குரலில் பேசி தமது பலவீனத்தினை

மறைப்பர். அவர்கள் சரியான நியதிப்படி சிந்தனைகளை தூய்மைபடுத்தி செய்வதில்லை.

எண்ணம், சொல், செயல் மூன்றினாலும் தனக்கு அல்லது பிறர்க்கு வாழுங்காலத்திலோ எதிர்காலத்திலோ அறிவு, உடல் உணர்ச்சிகட்கு துன்பம் ஏற்படாது வண்ணம் ஆற்றுகின்ற பண்பாடுதான் ஒழுக்கமாகும்.

நிறைமாந்தர் என்போர் மனவலிமையுடன் எச்சந்தர்ப்பத்திலும் ஒருபோதும் ஒழுக்கநெறியின்றும் பிறழமாட்டார். அவர்கள் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாக போற்றுவர். மனிதனை பொறுத்தவரை நல்ல குணங்கள் அழகு. நற்பழக்கங்கள் அழகு. இவை எல்லாவற்றையும் விட, மனிதனுக்கு ஒழுக்க நெறிதான் மிகமிக உயர்ந்தது, மேன்மை தரக்கூடியது, பெருமைமிக்கது.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் – ஒழுக்கம்**
**உயிரினின் ஓம்பப்படும்.**

- **திருக்குறள்: 131**

குறிக்கோள் இல்லாத வாழ்வு தாள்பாள் இல்லாத கதவு. இலட்சியம் இல்லாத குறிக்கோள். கதவு இல்லாத வீடு ஆகும். பழக்கத்தினால்தான் மனிதம் உயரவும் தாழவும் முடியும். வாழ்க்கைக்கு உயர்வினை அளிக்கும் பழக்கங்களே ஒழுக்கம் ஆகும். மனதின் பழக்கத்தை முறையாக மாற்றி அதன் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உள்ள முறையான பயிற்சியே ஒழுக்க நெறியாகும்.

ஒவ்வொரு மனிதனுடைய ஒழுக்கமும் தன்மையும் அவனவன் செய்துகொண்ட நடை, உடை, பாவனைகளின் பயனாக ஏற்பட்டவை. நாம் செய்கின்ற ஒவ்வொரு செய்கையும் உடலின் ஒவ்வொரு அசைவும் நினைக்கின்ற ஒவ்வொரு நினைவும் மனதில் அவற்றுக்கேற்ப பண்புகளை பதியச் செய்கின்றன.

# 8

# மனிதனின் இரண்டு பக்கங்கள்...!

மனிதன் நல்லவனாக வாழ வேண்டும் என்று கூறும் போது அதற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதை நாம் உணரவேண்டும். முதலில் மனிதன் தனக்குத்தானே நல்லவனாக இருக்க வேண்டும். அடுத்து அவன் பிறருக்கும், சமூகத்திற்கும் பயன்மிக்கவனாக இருக்க வேண்டும், வாழவேண்டும், சமூக இசைவாக்கம் பொருந்த வேண்டும். இது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு மனிதனும் தமது கட்டுப்பாடுகளிலிருந்து, அறியாமையிலிருந்து துன்பங்களிலிருந்து விடுபட விழைகின்றான். இதன் காரணமாக தனது தேவைகளை அதிகரிக்க விழைவான். இத்தேவைகள் நிமித்தம் அவனது அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் அடுத்து சமுதாயத்தில் உண்மை, ஒழுக்கம், பண்பு போன்ற பண்புகளை பின்பற்றுவான். இவையாவும் பெற்றதன் பின்பு இத்தகைய வாழ்வின் என்ன பயன் என உலகியலிருந்து விடுபட்டு உண்மையை அறிய விரும்புவான். இவையாவும் ஒரு மனிதனின் தனக்கே உரித்தானவைகள்.

மனிதன் என்பவன் ஒரு சமூகப் பிராணி. எனவே, ஒவ்வொரு மனிதனும் மற்றவர்கட்கு அவன் செய்ய வேண்டிய பணிகள் உண்டு. பிறரை நேசித்து தனது பங்களிப்பினை அளித்து காலமறிந்து உதவிகள் அளித்து சமூகத்துடன் இசைவாகி வாழவும் வேண்டும். இது ஒவ்வொரு மனிதனின் இன்னுமொரு பக்கமாகும். இங்ஙனமாக மனிதனின் உணர்வலைகள் செயற்பாடுகள்

விரிகின்றன. குடும்பத்தை நேசித்த பிறகு சமுதாயம், நாடு, உலகம் என வட்டம் விரிகிறது.

இந்த வட்டம் இறுதியில் புலன்களின் ஆசைகளின்று விடுபட்டு அறியாமையினின்று விடுபட்டு உண்மையான இறையுடன் அன்புத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. எனவே மனிதன் நல்வழி, நல்லொழுக்கம் என்று சொல்லுமிடத்து இந்த இரண்டு பக்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் இணைந்து செயற்படுத்துமிடத்து அவன் மனிதத்தன்மையுடையவனாக தன்னை மாற்றிக் கொள்வான்.

மனிதனின் அகவளர்ச்சி மிகவும் முக்கியம் வெளிப்புறத்தை கொண்டு மனிதனை மானிடவியல் கொண்ட மனிதனாக ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மை மனிதன் என்பவன் எப்பவும் முழுமையை நோக்குவான். தன்னிடமுள்ள திறமைகள் அனைத்தையும் வெளிப்படுத்துவான். இது குறிப்பிட்டவர்களால்தான் முடியும். ஒரு மனிதன் தன்னிடமுள்ள தகுதிகள் திறமைகள் அனைத்தையும் வெளியே கொண்டு வருவதற்கு ஒவ்வொருவரும் இயல்பாகவே இருக்க வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் மனிதனின் நேயம், சில பண்புகளின் அடிப்படையில் காணப்படுகிறது. மனிதனின் எல்லைகள் அறிவின் அடிப்படையில் அமைந்தவை பகுத்தறிவு, விஞ்ஞான ஆராய்ச்சி என்பவை யாவும் ஓர் எல்லைகட்கு உட்பட்டவை ஆனால் விஞ்ஞான தொழில்நுட்பத்திறனும், மனித சுதந்திரமும், புலன்களின் இன்பங்களை அனுபவிப்பதற்கு எத்தனையோ வழிகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் மனிதன் தனது உலகியல் இன்பங்களில் அமைதியையோ மனச் சாந்தியையோ பெறமுடியாது என உணரத் தொடங்கிவிட்டான். காரணம் தொழில்நுட்பம், விஞ்ஞானத் திறனால் தனது நாளாந்தம் இடம்பெறும் சொந்தப் பிரச்சினைக்கு கூடத் தீர்வினைக் காண்பதற்கு இயலாமல் தவிக்கின்றான். எனவே யாமெல்லாம் அரிதான மானிடப் பிறவிதனை பெற்றுள்ளோம். எனவே ஒவ்வொருவரும் பிறருக்கு நன்மை செய்யாதுவிட்டாலும் ஒருவர்க்கும் மனவலியினையோ

அன்றி தீங்கினை இழைக்காதிருத்தல் வேண்டும். யாவருக்கும் மரியாதையுடன் கூடிய அன்பினைச் செலுத்த வேண்டும். ஆத்மாவை எக்காலத்திலும் சிறுமைப்படுத்தக்கூடாது.

எல்லா உயிரினங்களின் செயற்பாடு தத்தமது உயிரினை பேணுவதேயாகும். இதன் அடிப்படையிலே பலவிதமான செயற்பாடுகளும் ஆற்றப்படுகின்றன. எல்லா உயிரினங்களும் தமக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமே தம்மை காப்பாற்றுவதே முக்கிய காரணமாகிறது. எவன் தன் உயிரினை நேசிக்கின்றானோ அவன் தெய்வீகமடைகின்றான். ஆனால் ஆறறிவு கொண்ட மனிதன் மட்டுமே தன் உயிரினை நேசிக்காது ஆத்மாவை மனஉளைச்சல்களுக்கு உள்ளாக்குவதுடன் ஆத்மாவின் உயர்த்துவத்தினையும் சிதைக்கும் செயலை செய்யும் வழக்கமுளது. இத்தன்மை வேறு எந்த உயிரினத்திலும் காணப்படுவதில்லை.

மகாமானுடப் பண்பினராக திகழ்வதற்கு பஞ்ச பூதங்கனிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பண்புகளாவன. பூமி - பொறுமை, நீர், தூய்மை, காற்று - பரந்த நோக்கம், தீ - எதையும் சேர்த்து வைக்காத தன்மை, ஆகாயம் - தைரியம் மானுடப் பண்பியலினைக் கொண்டோவர் மற்றவர்கட்கு உதவி புரிவதற்கு வகை இல்லா விட்டாலும் உபத்திரம் அளிக்கமாட்டார். மேலும் இவர்கள் எவரிடத்தும் கோபமாகவோ, ஆணவமாகவோ பேசமாட்டாதவர்.

இன்று உலகளாவிய ரீதியில் பலர் இயற்கையுடன் இணையாமல் போலியான வாழ்வினை, ஒவ்வொருவரும் தமக்கான நெறியில் நிற்காது மற்றவர்கள், சமூகத்தில் தான் எல்லாம் நிறைந்தவன் என்பதனைக் காட்டுவதற்காக தமது மகிழ்வினையும் இழக்கின்றனர். ஒவ்வொரு வீடும் இயந்திரமாகி ஒவ்வொருவரும் அன்பிற்காக ஏங்குகின்றனர். இதன் காரணத்தினால் பலர் இளவயதினரே மனநோய், குடிப்பழக்கம், போதைவஸ்துகளுக்கு அடிமை, இச்சைகளை முறையின்றி அனுபவித்தல், தற்கொலை, பைத்தியம் என அதிகரித்து வருகின்றமையைக் காணலாம். சர்வதேச ரீதியில் ஏறத்தாழ விகிதாசாரத்தினர் இத்தகைய நோய்

ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் விகிதாசாரம் வருடா வருடம் அதிகரித்து வருகின்றமையை ஒவ்வொரு நாட்டினதும் சுகாதார சுட்டி காட்டுகின்றது. இது இவ்வாறு இருக்க கர்ப்பிணித் தாய்மார்களும் சாத்வீக சூழலுடன் இணையாமல் தமது குறுகிய கால இன்பத்திற்காக பலவற்றிற்கு அடிமையாகின்றனர். அவர்களது குழந்தை கூட ஏதோவொரு குறையுள்ளதாக பிறக்கின்றது. அத்துடன் அக்குழந்தை சமூகத்துடன் இணைந்து வாழமுடியாமல் அல்லல்படுவதனையும் காணலாம். இவற்றிற்கான அடிப்படையான காரணம் ஒவ்வொருவரும் தத்தமது நிலையினின்று இறங்கி இயற்கையோடின்றி செயற்கை தன்மை அதாவது போலியான வாழ்வினை வாழ்வதாகும்.

இன்னுமொரு விதமான மனித சமுதாயம் ஏற்படத்தொடங்கியுளது. எங்கு பார்த்தாலும் மனிதன் வாழுவதற்கு திணறுகின்றான். இரண்டு உலகப்போர்கள், நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போர்கள் யாவும், நல்லொழுக்க பண்பு நியதிகள், ஒழுக்க சட்டங்கள் யாவும் சீரழிந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் விஞ்ஞான தொழில்நுட்ப கருவிகளே.

இன்றைய சமகாலத்தில் யாவும் எவருக்கும் எதுவும் கிடைக்கப் பெறலாம் என புற விடயங்களில் தம்மை அர்ப்பணித்தவர் தமது அகநிலையினை பற்றி ஆராய ஆரம்பித்துவிட்டனர். உள் உணர்வினை அறிவின் மூலமாக தேடத் தொடங்கிவிட்டனர். மேலை நாட்டவர் கீழைத்தேயத்து பண்பாடு, கலாசாரம் என்பவற்றினையெல்லாம் பெருமைப்படாதவர் இன்று அவர்களே இந்துசமய நெறி நிறுவனங்களின் மூலம் ஆன்மீக உணர்வுத் தேடலை ஆரம்பித்துள்ளனர்.

மற்றும் அமைப்புகளில் இடம்பெறும் மனவளவியல், தியானம், உளவளப்பயிற்சி, மன அமைதி போன்றவற்றில் கவனம் செலுத்தி தத்தமது அகவாழ்வு மீது அதீத ஆர்வம் கொண்டுள்ளனர். கூட்டு வழிபாடு, இறைநாம பாராயணம், இறை புகழினை கேட்டல் இவைகளின் மூலம் வாழ்வின் இயந்திரமயமான பதகளிப்பு நிலையினை மாற்ற முயல்கின்றனர்.

புறவிடயங்களான உலகியலுள் ஆழ்ந்து தம்மை புலன் வழிவரும் இன்பங்களை அனுபவித்த மேலை நாட்டினர். அக உணர்வினை அறிவாராய்ச்சி மூலம் தேடல் செய்ய, பரம்பரை கலாசார பண்பாட்டியல் அம்சங்களுடன் சமயத்தை வாழ்வுடன் இணைத்து வாழ்கின்ற கீழைத்தேய மக்கள் புற வாழ்க்கையை சிற்றின்ப நிகழ்வுகளை தேடி அலைகின்றனர். தேவையற்ற சிக்கல்கட்கு உள்ளாகி அல்லற்படுகின்றனர். இளமைக்காலத்திலேயே முதிர்வடைகின்றனர். இங்ஙனமாக எமக்கென்றுள்ள மரபுரீதியானவைகளை நழுவவிட்டு, மனித நேயத்தை விட்டு விலகுகின்றனர். தமது தேவைகளை பூர்த்தி செய்ய இளந்தலைமுறையினர் முறையற்ற செயல்களை ஆற்றுவதுடன் தீய பழக்கவழக்கங்களுக்கு உள்ளாகி பிறழ்வான பாதைக்கு செல்கின்றனர். எந்த காலத்திலும் பச்சை மண்ணுடன் சுட்ட மண்ணினை ஒட்ட முடியாது. கீழைத்தேயத்தவர் மேலை நாட்டவரின் பழக்கங்கள், கோலங்களை தம்முடன் இயைபாக்கி எண்ணி வரும் சமுதாயத்தையும் நலிவடையச் செய்கின்றனர். மேலைத்தேயத்தவரிடம் காணப்படுவது எதிலும் தெளிவான அறிவு ஆகும். அவர்களது சிறப்பம்சங்களை இனம்கண்டு பின்பற்றாது அவர்களது பகட்டான வாழ்வியலைப் பின்பற்றுகின்றனர்.

விவேகானந்தர் எமக்கெல்லாம் அளித்த அறிவுரைகளாவது, எமது பழைமை, பண்பாடு கலாசாரத்தினை மறக்கக் கூடாது. ஆனால் அதனையே சொல்லி இருக்கக் கூடாது. இன்றைய நவீன உலகியலிலும் வாழவேண்டும்.

ஒரு மரத்திற்கு வேர் முக்கியம். வேர் இல்லாமல் மரம் இல்லை. வேர் இல்லாமல் மேல்பகுதியாக மட்டும் இருக்கக் கூடாது. இங்ஙனமாயின் அது போலியான வாழ்க்கை. வேர் போன்ற பண்பாட்டியல் கோலங்களின் சிறப்பினைப் பெற்று இன்றைய நவீன விஞ்ஞான கணினியுகத்துடன் இணையும் இடத்து அதன் பலன் மகத்தானது. ஏனவே வேர் போன்ற பண்பாடு கலாசாரத்தினை மறக்கக் கூடாது. அதேபோன்றே புதிய நடைமுறைகளையும் ஒதுக்கக் கூடாது. ஆனால், இன்று

யாமெல்லாம் வேரினை மறந்து வாழ பழகிக் கொண்டுள்ளோம்.

இதனால் மேலைத்தேயத்தவர் எமது பண்பாட்டியல் அம்சங்களையும் விருப்புடன் ஏற்றுக் கொள்கின்றனர். தமது வாழ்வில் உடையணிதலைக் கூட மாற்றிவருகின்றமையை காணலாம். எமது ஆலயங்களுக்கு இந்துநெறி நிறுவனங்களுக்கு வருகை தரும் பொழுது எமது கலாசாரப் பண்பாட்டினையே கடைப்பிடிக்கின்றனர். நடைபெறும் சடங்குகள் வழிபாட்டிலும் கலந்து கொள்கின்றனர். அவர்கள் சுற்றுலா என்ற கோதாவில் எமது கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தந்தாலும் அவர்கள் ஆலயங்களையே பெரிதும் விரும்புகின்றனர். எமது புராண இதிகாசங்களையும் விரும்பி ஆராய்ச்சி செய்கின்றனர். ஆலய கிரியைகள் ஆராதனைகளில் பயபக்தியடன் கலந்துகொள்வதனையும் அது தொடர்பான விளக்கங்களை அறிவதனையும் காணமுடிகின்றது. பகவக்கீதையை பெரிதும் போற்றி அறிவியல் ஆராய்ச்சிகளையும் செய்கின்றனர். அதன் பெருமைகளையும் சிறப்புகளையும் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றனர். மேலைத்தேயத்தவர் தமது நாட்டின் காலநிலை சீரின்மையை கீழைத்தேய நாடுகளுக்கு சுற்றுலா கொள்வதுடன் அறிவியல் தொடர்பான தேடலுக்கான பயன்படுத்துகின்றனர். இது இவர்களது மறுபக்கமாகும். வேத அத்யாயனம் செய்வதிலும் மேலைத்தேய மக்கள் ஆர்வம் கொண்டு வேதபாராயணம் செய்கின்றனர்.

எவரிடத்தும் இயல்பாகவே எல்லாத்திறன்களும் உள்ளன. இதனை விழிப்புணர்வுடன், தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடுமிடத்து சக்தி வரும், பெருமை பெறும், தூய்மையுடன் கூடிய நன்மை வரும் எவையெல்லாம் உயர்வானதே. ஒவ்வொருவருக்கும் அவரே ஆசிரியராவர். எனவே எவரும் தம்மீது நம்பிக்கை வைத்து மனவுறுதியுடன் செயலில் ஈடுபடல் அவசியம். தாமே தமக்குச் சுற்றத்தவர்.

மனிதனின் சிந்தனை என்பது எல்லைகளால் அணைகளால் கட்ட முடியாது. அறிவியல் வளருமிடத்து சிந்தனைகளும் சிதறியடிக்கப் படும். எனவே சிந்தனைகளை மனம் போன போக்கெல்லாம்

விட்டால் காட்டில் விட்ட மாதிரி அதாவது நாம் வனத்திற்குச் சென்றால் திசையினை கண்டுகொள்ளமுடியாது. எந்த திசை என்பதனை கண்டுகொள்ள முடியாது. மிகுந்த சிரமப்படுவோம். அதேபோன்றே சிந்தனைகளை எந்தவித கட்டுபாடின்றி விடுமிடத்து அதன் மூலம் பெறவேண்டிய இலட்சியத்தினை அடைய முடியாது.

சிந்தனைகள் தர்மநியதிப் படியும் கருணையாலும் எழுப்பப்படும் செயற்றிறன்கள் வெற்றியையே பெற வைக்கும் அறிவு கொண்டு சிந்தனை வளர்க்குமிடத்து அறிவு என்ற காட்டுக்குள் உலாதிரியும் ஐம்புலன்களையும் அடக்கிவிடலாம். புத்தியை மட்டும் கொண்டு செயற்றிறனில் வெற்றி பெறமுடியாது. அச்செயலினை ஆற்றுவதற்கு விடாமுயற்சியும் அவசியம். எனவே எப்பொழுதும் எவரும் மனதினை உற்சாகப்படுத்தி சோர்வின்றி வைத்திருத்தல் வேண்டும். மனதினை இளவயதிலேயே முதிர்வடைய வைத்தால் தோற்றம் கூட வயோதிப நிலையினை காட்டும். சிந்தனையில் பயம் அச்சம் இரண்டையும் விட்டெறிதல் வேண்டும். விஷஜந்துக்களால் ஏற்படும் விஷமோ, நோய்களோ மனிதன் உயிரினை மாய்க்காது. ஆனால் அச்சமும், பயமும் உயிர்க்கொல்லியாகும்.

ஒருவரை நாமே இழந்து, உலகம் இழக்க வைத்தால் அதைவிடப் பெரிய தகாத செயற்பாடு வேறொன்றுமில்லை. இங்ஙனம் ஒருவர் நடந்து கொண்டாலும் அவரது உள்ளம் மகிழ்வு பெறமாட்டாது. நிம்மதியை இழக்க நேரிடும் ஒவ்வொருவரிடமும் இயல்பாகவே சில திறன்கள் காணப்படும் அதனை அவர்களிடமிருந்து வெளிக் கொணர்வதற்கு உதவி செய்தால் அது ஞாலத்திலும் பெரிய உதவியாகும். எப்போதும் உயர்ந்த, அமைதியடைய, பலம் தரக்கூடிய துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் கொண்டு செயற்படுமிடத்து சலனமற்ற தெளிவான அறிவைப் பெறலாம். இதனால் ஊற்றிலிருந்து நீர் பெருகுவதுபோல், உள்ளத்திலிருந்து மனிதன் தனது பக்கங்களை சீராக இணைத்து நான் யார் என்பதனைத் தேடினால் இறைவன் அருளைப் பெறலாம். நான் என்பது? மனமா, புத்தியா? ஆராய்ந்து கொண்டே போனால் இறுதியில் நான் என்பது இவை எதுவும் அல்ல என்பதனை

அறியலாம். ஆன்மாவை அறியவோ, தொடவோ முடியாது. அது குணமற்றது. ஆசைகள் அற்றது.

**'நான் அறிந்த அப்பொருள் நாட இடமில்லை**
**வான் அறிந்து அங்கே வழியுற விம்மிடும்**
**ஊன் அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்**
**தான் அறிந்து எங்கும் தலைப்பட லாமே.'**

**தூய்மை அருள் ஊண் சுருக்கம் பொறை செவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே.**

மனிதன் எவர்மீதும் கோபம் ஏற்படுத்தலாம். அறிவின் பிரயோகமின்றி உணர்வுகட்கு முக்கிய பங்களிப்பினை ஏற்படுத்தி னாலும் தனது அறியாமையை நிதானித்தவுடன் அவன் சுயநினைவுக்கு வரலாம். இதுதான் பகுத்தறிவு கண்டவுடன் செயற் படுத்தப்படும். இது மனிதன் ஒரு பக்கம். மறுபக்கம் என்பது தனக்கு ஏற்பட்ட கோபத்தினை மறக்காது மேலும் மேலும் அதனை வலிமையடையச் செய்யுமிடத்து கோபம் குரோதமாக மாறும். மனிதனின் மனதில் குரோதத்தினை ஏற்படுத்தினால் அவன் தனது வஞ்சகத்தினை தீர்ப்பதற்கு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருப்பான்.

மகாபாரதப் போர் முடிவடைந்ததுடன் பஞ்ச பாண்டவர் கிருஷ்ண பரமாத்மா யாபேரும் அஸ்தினாபுரம் செல்கின்றனர். முதலில் திருதாஷ்டினிடம் பஞ்சபாண்டவர் அனைவருமே 'தாம் தமக்குரிய கடமைகளைத் தான் ஆற்றினோம். எங்கள் யாபேரையும் ஆசீர்வாதம் செய்யும்படி இறைஞ்சுகின்றனர்.' ஆனால் திருதாஷ்டினனோ 'எங்கே பீமன் எமது சந்ததிகளையே அழித்தவன் நான் அவனை சாகடிப்பேன்' என பீமனின் இரு தோள்களையும் அழுத்தி உதிரம் வரப்பண்ணினான் சற்று நிதானித்து பஞ்சபாண்டவர் அனைவரையும் வாருங்கள் வாருங்கள் எமது ஆசிகளை அளிக்கின்றேன் என்றான் அனைவரும் செல்கின்றனர். திருதாஷ்டினன் எங்கே பீமன் என விளிக்கின்றான். அத்தருணத்தில் யாவும் அறிந்த பரமாத்மா பீமன் மாதிரி செய்யப் பெற்ற உருவத்தினை திருதராஷ்டினன் முன்னே

வைக்கின்றார். திருதராஷ்டினன், 'பீமா பீமா என விளித்து இறுக அணைத்து அதனை கீழே தள்ளி விடுகின்றான்.' அது விழுந்த சப்தத்தினைக் கேட்டு, 'பீமா நான் பாவியானேன் உன்னை என் கையாலே சாகடித்து விட்டேனே' என பெரும் ஓலமிட்டு அழுதான். அப்பொழுது பகவான், 'திருதராஷ்டிரா நீ பயம் கொள்ள வேண்டாம். நீ கொன்றது பீமனை அல்ல உனது மனதில் ஊறி வலிமைபட்ட குரோதத்தினைதான் அழித்தாய். இப்பொழுது நீ அவர்களுடைய பெரியப்பா. பீமன் உயிருடன் தான் இருக்கிறான்' என்றார். உடனே திருதராஷ்டினர் பீமனை மட்டும் மகனே பீமா என்று அழைத்ததுடன் மற்றவர்களையும் ஆரத்தழுவி ஆசிர்வாதம் செய்ததுமட்டுமன்றி தான் வயதில் அதிகமென்றாலும் தான் செய்த குற்றங்களுக்கு மன்னிப்பினையும் கேட்கின்றான். எனவே மனிதர்களாகிய யாமெல்லாம் உணர்வுகட்கு அடிமையாவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும். அந்த சமயத்தில் எமது அறிவினை கொண்டு எமது செயற்பாடுகளை ஆற்றவேண்டும் என்பதனை மனதில் கொண்டோமேயானால் வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புண்டாகும்.

பகவக்கீதை வாழ்வியல் முறையினை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளது. ஆன்மீக வாழ்க்கைக்குரிய விரதங்கள், ஆசாரங்கள் சாதனை முறைகள் முதலியன யாவும் கூறப்பெற்றுள்ளன. ஆச்சிரம தர்மங்களைப் பற்றி கீதையைப் போல் தெளிவாக விளக்கும் நூல் இல்லை எனலாம். இந்நூலானது மேலைத் தேயத்தவர்களால் தெரிந்து எடுக்கப்பட்டு பயன்பாட்டுக்குள்ளாக்கப்பட்ட நூலாகும். "உன் கடமை எதுவாயினும் தன்னலம் நோக்கத்தினை விட்டு அதனை உலகிற்கு உபகாரமாக செய்து வருவாயாயின் அதுவே தியாகம், அதுவே தியானம், அதுவே யோகம், அதுவே உனது முக்தி வழி" என கீதை அழுத்தமாக கூறுகிறது. இதனையே மானிடராகிய நாம் எல்லாம் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

எனவே மனிதன் என்பவன் உணர்வலைகளுக்கு ஆளாகி பிழைவிடுவான். முதலில் ஒவ்வொருவரும் பழிவாங்கும் தன்மை மனப்பாங்கினை தவிர்த்தல் வேண்டும். ஒருவரை மனதிற்கு மதிப்பு

அளித்தல் முக்கியம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல், பேராசை போன்றவற்றினை தவிர்த்து மனத்திற்கான பயிற்சிகளுடன் தியானம் செய்யும் பழக்கத்தினை கடைப்பிடிக்குமிடத்து ஒவ்வொருவரும் மனிதத் தன்மை கொண்டவர்களாக வாழ்வர்.

மனிதன் தனது வாழ்வினை வளமாக்குவதற்கு எதிராளிகள் வெளிப்புறத்தில் இல்லை ஒவ்வொருவரிடத்திலும் எதிரிகள் அவர்களிடமே மலிந்து இருக்கிறார்கள். பயம், சோம்பல், சந்தேகம் போன்ற குணங்கள் எம்மை எதிலும் வெற்றி பெறுவதற்கு தடையானவையாகும். ஒவ்வொருவரும் தம்மில் நம்பிக்கை கொள்ளுமிடத்து இத்தகைய எதிரிகளை ஒழித்துவிடலாம். அத்தனை இடையூறுகள் பெரிதாக வந்த பொழுதும் எடுத்த காரியத்தை ஒரே உறுதியாக நடத்திச் செல்லுமிடத்து அவனது வாழ்வு சிறப்பானது. எதிலும் வாழ்வில் திருப்தியான மனப்பாங்கினை வளர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். எம்மில் பலர் எத்தகைய இன்பங்கள் கிடைக்கப் பெற்றாலும் அவற்றினால் நிலை பெறாமல் பதகளிப்பாகவே இருப்பதற்குக் காரணம் அவர்களது மனம் திருப்தியற்றதானதாகும்.

பூர்வீக மகான்களின் வாழ்வியல் தொடர்பான அறிவினை பெற்று அது தொடர்பான நெறிகளை வளர்க்குமிடத்து அறிவாளிகளை பெற வாய்ப்புண்டாகிறது. நாம் ஒவ்வொருவரும் அவரவர் நெறியினின்றும் வழிபாட்டினை இயற்றாவிட்டாலும் பிறரை ஏமாற்றாது அவர்களது செல்வத்தினை பறிக்காதுவிட்டால் தெய்வம். எப்போதும் அருள்புரியும். ஒவ்வொருவருக்கும் அறிவு, செல்வம், தைரியம், நம்பிக்கை இவை நான்கும் முக்கிய தூண்களாகும். இதில் நம்பிக்கையின் முக்கிய அம்சமானது விடாமுயற்சியாகும். ஒருவன் தனது திறமையினால் ஒரு விடயத்தினை வெற்றிகரமாக செய்து முடித்தால் அவனை மேலும் ஊக்குவிக்க வேண்டும். வெற்றியை ஏற்கும் மனப்பாங்கு இல்லாதவன் வெளிச்சத்தை கண்டு மிரளும் ஆந்தை போன்றவன். விடயங்களை செயற்படுத்துமிடத்து கழுகு வானில் பறந்தாலும் கீழே திரியும் கோழிக்குஞ்சினை குறி

வைப்பது போன்றது. ஒரு பழமையினை கூறுவர் வைத்தியர் நோயாளியின் நோயினை கண்டுபிடிக்க கழுகுக் கண் கொண்டு நோக்குதல் அவசியம்.

நாம் நல்ல ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டுமேயானால் நல்லொழுக்கம், மன்னிக்கும் சுபாவம் ஆகியன வாழ்வில் இடம்பெற வேண்டுமேயானால் அதற்கு மிகுந்த வலிமை மன உறுதி வேண்டும். நாம் துன்பம் இடர் போன்றவற்றினை சந்திப்பதற்கு காரணம் பலவீனம்தான். நாம் பலவீனம் உடையவர்களாக இருப்பதால் பொய் சொல்கின்றோம், துன்பமடைகிறோம், களவு, மற்றும் பாதகமான செயல்களையெல்லாம் செய்கிறோம். பலவீனத்தை நீக்குவதற்கு வலிமையுள்ள உள்ளமாக மாறவேண்டும். இந்த வலிமையை கொண்டு பொறுமை, மன்னிக்கும் சுபாவம் இரண்டும் மிகவும் முக்கியமானது.

எல்லோரிடத்தும் இயல்பாகவே ஆற்றல்களும், திறன்களும் புதைந்துள்ளன. எனவே நம்பிக்கையை திடப்படுத்தி மனவுறுதி கொண்டு விழித்தெழுந்து தன்னுணர்வுடன் எல்லா திறன்களையும் தர்ம நியதியுடன் செயற்படுத்துமிடத்து. எவரும், எங்கும், எவற்றிலும் செயல்களை சாதிக்க வல்லவன் என்பதனை அறிந்து கொள்வர். ஒவ்வொருவருக்கும் அவர்களேதான் ஆசிரியர்.

**'முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.'**

எனவே யாமெல்லாம் உணர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்காது அறிவு மூலமாக எதையும் பார்த்தும், கேட்டும் தெளிவு பெற அவற்றை உணர்த்தும் வாழ்க்கையைக் கடைப்பிடிக்குமிடத்து ஒவ்வொரு மனிதனும் சுபிட்சத்துடனும் மன நலத்துடனும் கிடைத்த மானிடவியலை துய்க்கலாம்.

**"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே"**

என்ற மனப்பாங்கினை எப்பொழுதும் நாம் வளர்த்துக் கொள்ளுதல் நல்லது.

ஐஐஐஐ

# 9

# 'மகத்தான மானுடனாய் மாற..'

மானுடன் என்ற பதம் எதனைக் குறித்து நிற்கிறது? மானுடப் பண்பியல் கூறுகளை நாம் பேணுதல் அவசியமா? மானுடம் என்பது ஒவ்வொருவரும் தம்மைப்போல் ஏனைய உயிர்களையும் நேசித்து இருத்தல் எனக் கொள்ளலாம். எவரும் பிறந்தவுடன் மானுடப் பண்புகளுடன் பிறப்பதில்லை. எனினும் எமது வாழ்க்கை நெறியில் பாரம்பரிய மரபுக்கமைய தமது மூதாதையர் போன்று பண்புள்ளவனாக ஆகவேண்டுமென்ற எண்ணத்துடன் வம்சாவழியினரின் பெயர்களையே வைப்பது மரபாகும். இந்து நெறியில் சடங்கு சம்பிரதாயங்களில் பிள்ளை பிறந்தவுடன் பெயர் இடும் வைபவம் புராண இதிகாச மரபிலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

புலன்களை அறிவுகண்ணுடன் வென்றால் மட்டுமே மாமானுடப் பண்பினை கொண்டவனாக விளங்குவான். அவனால் மட்டுமே யாவற்றையும் சாதிக்க முடியும். 'புலன்களை தன் இச்சைப்படி செல்லாது பொறிவழி தர்ம நியதிப்படி செல்ல இழுக்கும் திறன் எவனிடம் உளதோ, அப்பொழுது அவனது புத்தி நிலைபெற்று அவன் மானுடப் பண்பாளனாக உயர்ந்து விடுவான்.' - கீதை 2.58.

மகா மானுடப் பண்பினை வளர்ப்பதற்கு அவரவர் எண்ணங்களே ஆதார சுருதியாகும். அவரவர் சிந்தனைகள் தர்மநியதிப்படியும், கருணையாலும் எழுப்பப்படும் செயற்றிறன்கள் மட்டுமே வெற்றி பெற வைக்கும். பகுத்தறிவுக்கண் கொண்டு சிந்தனைத் திறன்களை வளர்க்குமிடத்து அறிவு என்ற கட்டுக்குள் உலாவித்திரியும்

ஐம்புலன்களை அடக்கி விடாமுயற்சியுடன் மனதினை உற்சாகப்படுத்தி சளைக்காது செயல்களை ஆற்றுமிடத்து எவனும் மகாமனிதனாக ஆகமுடியும்.

மனிதப் பண்பினை வளமாக்குவதற்கு எதிரிகள் எவரும் வெளிப்புறத்தில் இல்லை. எதிரிகள் அவர்களின் அறியாமை என்ற அகத்தில் தான் மறைந்து இருக்கின்றார்கள். ஏற்ற இறக்கமின்றி சமரசமான திருப்தியான மனப்பாங்கினை வளர்த்துக் கொண்டால் அவன் நிச்சயமாக மானுடப் பண்பாளனாக உயர்ந்துவிடுவான்.

**'யான் எனது, எனும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்'**

- **திருக்குறள்: 340**

நான் எனது என்ற செருக்கினை போக்குபவன் மட்டுமே உலகம் போற்றும் மானுடனாளனாகப் ஏற்றம் பெறுவான். இதனையே அருணகிரிநாதரும் திருப்புகழில்,

**'எனதி யானும் வேறாகி எவரும் யாதும்**
**இதயபாவ னாந்தம் அருள்வாயே.'** என்கிறார்.

"மனிதர்களைப் படியுங்கள் அவனே வாழும் கவிதையாவன்." என்பது விவேகானந்தரின் கூற்றாகும். ஒவ்வொருவரிடத்தும் திரை போன்ற அறியாமையை போக்க வேண்டுமேயானால் நூல்களை கற்பதுடன் மனிதர்களை படித்தல் அவசியம் இதனையும் மிகவும் நுட்பமானமுறையில் மகாத்மாகாந்தி காட்டியுள்ளார். நாம் தேவையானவற்றை மட்டுமே, கேட்கவும், பார்க்கவும், பேசவும் வேண்டுமென்கின்றார். மூன்று குரங்குகளின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

மானுடபண்பாளனாக தன்னை உயர்த்துமிடத்து பல இடர்கள் ஏற்படும். எனவே, மனதில் கவலையை விதைத்தால் கவலையைத்தான் அறுவடை செய்யலாம்.

**'நெஞ்சிற் கவலை நிதமும் பயிராகி**
**அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை.'**

- **பாரதியார்**

எமது பழைய இலக்கிய காலமென ஏற்றம் பெறும் சங்க கால மக்கள் இயல் நெறியுடன் இணைந்த முழுமையான மானுட நேயத்துடன் வாழ்வினை துய்த்துள்ளனர் என்பதனை இலக்கியங்கள் சான்றுபகர்கின்றன. இலக்கியங்கள் என்பது காலக் கண்ணாடியாகும்.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா.'**

இவை இரண்டுமே எந்தக் காலத்திற்கும், எந்த தேசத்தவர்க்கும் கூட மணிவாக்காகக் கொண்டு வாழ்வியலை நியதியுடன் வாழ வழிவகுப்பதாகும்.

நாலடியாரில் அன்னப்பறவை பாலை வைத்து நீரினை நீக்கி பாலை மட்டுமே அருந்துவதுபோல் நாம் ஒவ்வொருவரும் பயனுள்ளவற்றினை செயற்படுத்துமிடத்து யாவருமே மானுட பண்பாளனாக மாற வாய்ப்புண்டு. 'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்பது ஒவ்வொருவரின் நிலைக்கும் அவர்களே தான் காரணம் அவரவர்களின் செயலின் விளைவேயாகும்.

இரண்டாமவர் பொறுப்பாளி அல்லர். மனவழி சென்று லௌகீக இன்பத்தை நாடுமிடத்து குற்றங்கள் உண்டாகும். இது ஆன்மீகம் தொடர்பான செயற்பாடுகளைக் கொண்டது. எனவே நிறைமொழி மாந்தர் என ஏற்றம் கொண்டோர் எவ்வூரும் தமது ஊராகவும், எம்மக்களும் தமது மக்கள் எனவும் அதனை ஆன்மிக நெறிநின்று போற்றி தமது வாழ்வியலைத் துய்த்துள்ளனர். இத்தகைய மானுடவியல் பண்புகளைக் கொண்ட பெரியோர்கள் எங்ஙனம் எமக்கு முன்மாதிரியாகப் பேசப்படுகின்றனர் என்பதனை மாமனிதர் சிலரது வரலாறுகளில் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலனிடம் இல்லறத்திற்குரிய கடமைகளை, மானுடனை நேசிக்கும் பண்பு இல்லாமல் போய்விட்டது என்கின்றார்.

**'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.'** - ***சிலப்பதிகாரம்.***

தமிழ்மொழியின் இலக்கணத்தினை வகுத்த தொல்காப்பியத்தில் விருந்து என்பது வழக்கிலுள்ளது என்பதனை,

**'விருந்தே தானம் புகுவதுமேற்றே'**

என்கிறது.

அரசனாக இருந்த பாரி வள்ளலை மானுடப் பண்பிற்கு உரியவனாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. கொடைக்கு பாரி எனும் வழக்குளது. பாரி தனது தேரினை முல்லைச் செடியொன்று படருவதற்கு கொளுகொம்பு இல்லாததைக் கண்டு தனது தேரையே முல்லைச் செடிக்கு வழங்கினான். இங்கே மாமானிடப் பண்பாளர்களில் பாரி வள்ளல் சிகரமாகி கொடைவள்ளல் பாரி என நடைமொழியுடன் பாரி மகா மானுடன் என அரசர்களுக்குள் பேசப்படுகின்றார்.

மனுநீதி கண்ட சோழன் ஓர் இளங்கன்று எங்ஙனம் தேர் சில்லினுள் அகப்பட்டு தனது உயிரினை மாய்த்தவுடன் எங்ஙனம் கன்றின் தாய் மனம் பதறும் என்பதாலேயே தனது மகனையே தேரின் காலில் வைத்து உயிர் நீங்க வைத்த பெருமையை பெற்றுள்ளார். பிறர் உயிரினையும் தம் உயிரெனப் போற்றியமையால் தர்மநீதிக்கு மனு என்ற ஏற்றத்தினைப் பெற்றுள்ளார். வேடன் துரத்தி கொல்லவிருந்த புறாவிற்காக சிபி என்ற அரசன் தன்னையே தியாகம் செய்து சிபிச் சக்கரவர்த்தி என்ற சிறப்பினை பெற்று இன்றும் முன்னிலைப்படுத்திப் பேசப்படுகின்றார்.

உலகப் பொதுமறையான திருக்குறளில் திருவள்ளுவர் மானுடப் பண்பாளனுக்குரிய பண்புக் கூறுகளை இனம் கண்டு வகுத்து தொகுத்து கூறியுள்ளார். இதனை நேர்த்தியாக வாழ்வியலில் கடைப்பிடிக்குமிடத்து வானோர்க்கு நிகரானவன் என ஏற்றம் பெறுவான். அவர் கூறிச் சென்ற நியதிகளைக் கடைப்பிடித்தே பலர் மாமனிதர்களாக போற்றப்படுகின்றனர். மானுடர்க்கு விருந்தோம்பல் செய்தவனை எங்ஙனம் அவர்களது முகம் இருத்தல் அவசியம் என்று கூறுகின்றார். விருந்தோம்பல்

என்ற அதிகாரத்தில் சிறப்புற கூறியுள்ளார்.

**'மோப்பக் குழையும் அனிச்சம், முகம் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.'**

**- திருக்குறள்: 90**

பக்தி இலக்கியத்தின் அடிநாதமாக திகழ்வது மானுடப் பண்பினை நேசித்தலாகும். இதனை ஆரம்பித்து வைத்த பெருமை சம்பந்தர்க்குரியது. அவர் தனது தந்தையாரின் தோளின் மீதிலிருந்தே தலயாத்திரை செய்து சமய நெறிக்காகவும் மக்களின் துன்பத்திற்காகவுமே பாடல்களை பாடியுள்ளார். அவர் ஈர நெஞ்சம் கொண்டவர். அவரிடமுள்ள மானுட நேயமானது, 'வையகமெங்கும் மக்களும் துயர் நீங்கி இன்பமயமாக வேண்டும்' என்பதே. எனக்கு 'எவ்விதமான பொன்னோ பொருளோ வேண்டாம். ஆனால் என்னிடம் கேட்பவர்க்கு பொருள் எதுவும் இல்லையே' என்றுதான் குறைப்பட்டுள்ளார்.

**'கூடும் அன்பினால் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**
**நீள்நிதி வேண்டினர்க்கீவது, ஒன்றும் மற்றிலேன்**
**உன்னடி அல்ல தொன்றறி யேன்.'**

சம்பந்தர், அப்பர் இருவருமே இணைந்து இறைவனிடம் படிக்காசு பெற்று திருவீழிமிழலை மக்களின் பசிப்பிணியினையும், செங்குன்றூரின் மக்களின் குளிர் காய்ச்சல் பிணியினையையும் நீக்கி அடியார்களின் மானிடப்பண்பாளராயினர். மேலும் ஊர் மக்களுக்காகவே ஆலயம் என்பதனை வேதாரணியத்தில் பூட்டியிருந்த தலக் கதவினைத் திறக்கவும் பாடலைப் பாடி மூடவும் இருவரும் செய்தனர். யார் தமக்கென வாழாது ஏனையோரின் வாழ்விற்காக தம்மை அர்ப்பணித்தோர் யாபேரும் இன்றும் சிரஞ்சீவியாகயுள்ளனர். பட்டினத்தடிகளும் மானிட மனிதராக வரவேண்டியோர் கடைப்பிடிக்க வேண்டியவற்றை எளிமையாக கூறியுள்ளார்.

**'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்**
**அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்பல் அறமும் நட்பும்.**
**நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி**
**என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.'**

முகம்மது நபி, யேசுநாதர், கௌதமபுத்தர் யாபேரும் மானடராகவே பிறந்து தமது செயற்கரிய அருஞ்செயல்களை ஆற்றியுள்ளனர். தமது நெறியினால் ஒவ்வொரு சமய நெறியினை ஏற்படுத்தி மக்களையும் அந்நெறியினை கடைப்பிடிக்க வைத்தவர். இவர்கள் மூவராலும் பௌத்த கிறித்தவ, இஸ்லாமிய சமயநெறிகள் ஏற்படுத்தப்பட்டு இன்று சர்வதேசரீதியில் இந்நெறிகளுக்குரிய வழிபாட்டுத்தலங்களும் ஏராளமான அவ்வவ் நெறிக்கான மக்களும் பரந்து காணப்படுகின்றனர். இவர்கள் சாதாரண மானுடராகவே பிறந்து தமக்காக வாழாது மக்கள் தர்மநியதியுடன் வாழ்வினை வளமாக வாழ வைப்பதையே எண்ணி அதற்கான கொள்கைகளை வகுத்து அதனை செயற்படுத்தினர். இவர்களது சமய நெறியிலான போதனைகளை அந்நெறி மக்கள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

நிராபதியான யேசு கிறிஸ்து விசாரணை செய்யப்பட்டார். யேசுவிற்கு சார்பாக பேசுபவர்களை எவரையும் நீதிமன்றத்திற்குள் விடவில்லை. ஆனால் நீதிபதியோ பண்டிகை முன்னிட்டு தன் அதிகாரத்தினால் யேசுவை விடுதலை செய்ய விரும்பினார்.

யேசுவோ பயங்கர குற்றவாளியான 'பராபஸ்சினி'யை எனக்குப் பதிலாக விடுதலை செய்யுங்கள் என நீதிபதியிடம் பணித்தார். எனவே கிறிஸ்து தண்டிக்கப்பட்டார். பெரும் பாவியின் பாவங்களை ஏற்றுக்கொண்ட நிலையில் இயேசு மற்றவர்களின் குற்றங்கட்கு பாவமன்னிப்பு அளிப்பவராக கிறிஸ்தவமத தாபகராகவும், கிறிஸ்தவ மத நெறியின் மாமானுடப் பண்பாளனாகப் போற்றப்டுகின்றார். யேசு மானுடப் பண்புடன் தன்னுயிர் போன்று பிற உயிர்களையும் நேசிப்பவர் சர்வதேச நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் யேசுவின் கொள்கையினால் பெருபாலான மக்கள் கிறிஸ்தவ நெறியினை ஒழுகுகின்றமையையும் காணலாம். வானனாவிய

தேவாலயங்களையும் கட்டி வழிபாட்டினை இயற்றுகின்றனர்.

இந்துநெறி என்பது எவராலும் தோற்றுவிக்கப்படவில்லை. அது சனாதன தர்மமென போற்றப்படுகிறது. எமது நெறியிலும் இறைவன் அவதாரமெடுத்து அதாவது மானுட உருவில் இராமனாக பூவுலகில் உலாவி எங்ஙனம் மானிடப் பண்புள்ளவனாக ஒவ்வொருவரும் வாழவேண்டுமென வாழ்ந்து காட்டியுள்ளார். வீட்டு, சமூக நாட்டு உறவுகள் எங்ஙனம் நேசிக்கப்பட வேண்டுமென ஒவ்வொருவரையும் உதாரணம் காட்டியுள்ளார்.

காந்தி பிறந்த பொழுது மகாத்மா காந்தியாக பிறக்கவில்லை. காந்தி பிறந்தவுடன் அவருக்கு குடும்பப் பெயரான மோகன்தாஸ் கரம் சந்தகாந்தி என்றே பெயரிட்டனர். அவர் இளமையிலேயே சகல துறைகளிலும் புலமைசார் உயர்கல்வியைப் பெறுகின்றார். தான் பெற்ற கல்வித்திறன்களைக் கொண்டு தன்னை, தன் குடும்பத்தின் செல்வ விருத்தியை பெருக்கும் எண்ணம் இருக்கவில்லை. அவரது உள்ளம் திருப்திப்படவில்லை. வீட்டைவிட்டு தனது அகல அடியெடுத்து ஒளி பொருந்திய பார்வையை நாட்டின் மீது மக்களின் மீதும் பாய்ச்சினார். நாட்டிற்காகவும், ஒவ்வொரு மானிடனும், சுதந்திர குடிமகனாக வாழவேண்டுமென தனது அறிவுத் திறன்களைக் கொண்டு அகிம்சை முறையில் சேவை மனப்பாங்குடன் தன்னை நாட்டிற்கே அர்ப்பணித்தார். நாட்டிற்காக தனது உயிரினையும் தியாகம் செய்தார். உயிர் நீங்கும் பொழுது கூட இறை நாமங்களை பாராயணம் செய்து அகிம்சை நெறியில் தான் உயிரை நீத்தார். சராசரி மானுடனாக இல்லாது செயற்கரிய அரிய பெரிய செயல்களை ஆற்றியமையால்தான் இதுவரை காலமும், யாருக்கும், எவருக்கும் இன்று கூட கிடைக்கப் பெறாத அடையாளமாக ‘மகாத்மா’ எனப் போற்றப்படுகின்றார். மோகனதாஸ் என்ற பெயர் நீங்கப் பெற்று, ‘மகாத்மா’ என்ற பெயரே அவருக்கு நிலையான பெயராகியது. பரந்த எண்ணம், தெளிந்த சிந்தனை, சளையாத அயராத முயற்சி, சேவை மனப்பான்மை, பயமின்மை, தாழ்வுச் சிக்கலின்மை, யாவருக்கும் மதிப்பளித்தல், இவை போன்ற பண்பு கூறுகளினால் மகத்தான

மனிதனாய் போற்றப்பட்டார்.

இந்தியா என்ற தேசத்தினை அறியாதவர்கள் கூட காந்தி அடிகளை அறிந்து இருந்தார்கள். எவரைப் பார்த்தாலும் நீ காந்தி தேசத்தில், காந்தி பிறந்த ஊரிலிருந்தோ வருகிறீர்களா? எனக் கேட்பார்கள். காந்தியின் அரிய பணியினால் நாடு ஏன் மக்கள் கூட இன்றும் ஏற்றம் பெறுகின்றார்கள். இந்தியன் என்ற நாட்டுப் பற்றினை ஒவ்வொரு குடிமகனின் உள்ளத்தில் ஏற்றம் பெற வைத்த பெருமை மகாத்மா காந்தியடிகளையே சாரும். மகாத்மா காந்தி தான் கொண்ட மனவுறுதி கொண்டே இந்திய மக்கள் அனைவரது இதயத்திலும் மகாமனிதனாக குடிகொண்டுள்ளார்.

பாரதியும் காந்தியின் காலத்திலேதான் வாழ்ந்தவர். அவருக்கும் குடும்பத்தவரால் இடப்பட்ட பெயர் சுப்பையர் அவர் தன்னை நேசிக்காது, நாட்டை மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் சிறுமைகண்டு பொங்கினார். நாடு, நாட்டு மக்களின்அவலங்களைச் சீரணித்து, தான் வாழும் காலத்தினை அநுபவித்து, எதிர்காலம் செழிப்புற வேண்டி தூரதிருஷ்டிப் பார்வையும் புரட்சிமிகு பாடல்களை பாடினார். பாமர மக்களிடம் கூட நாட்டு பற்றினை ஏற்பட இசை முக்கிய கருவியென பாடல்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். கவிதை என்பது கூட்டு முயற்சியன்று. அவரது எண்ண அலைகளினால் கற்பனா சக்தியுடன் வெளிக்கொணரப்படுபவை. இவரது பாடல்கள் ஒவ்வொரு மானிடனும் நேர்த்தியாக வாழுவதற்குரிய பாடல்கள் பாடியமையால் சுப்பையர் என்ற இயற்பெயர் நீங்கி மகாகவி என்ற மகாமானுடப் பெயரே இன்றுவரை நிலைபெற்றுள்ளது.

திருமூலர் திருமந்திரத்தில்,

யாவற்றுக்குமாம் பசுவிற்கொரு வாயுறை என உயிர்கட்கெல்லாம் உணவு அளிக்க வேண்டுமென்று கூற, பாரதியாரோ

**'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்**

**இந்த ஜகத்தினை அழித்திடுவோம்.'**

எனப்பாடி மகாமானுடப் பண்பாளன் என ஏற்றம் பெற்றுள்ளார்.

அகத்தின் ஒளியினை முகத்தில் தெரியும் என்பதற்கமைய மாமானிடராக தமது வாழ்வினை வாழ்ந்த மகான்கள் அறிஞர் இவர்கள் யாபேரது முகத்தில் ஓர் ஒளிப்பிரவாகத்தினைக் காணலாம். இவர்கள் யாபேரும் ஆன்மிகம் சார்ந்த அருட் செயல்களைத்தான் செயற்படுத்தியுள்ளனர். அவர்கள் இருக்குமிடத்தில் மட்டுமன்றி எந்தவொரு இடத்திற்கு வந்தாலும் தம்முடன் ஓர் ஒளிபிரவாகத்துடன்தான் வருவர் உள்ளத்தில் ஒளி இருந்தால் வாக்கினில் ஒளியுண்டாகும்.

எந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் அச்சமின்றி உண்மைகளை மறைக்கக் கூடாது. பகுத்தறிவு, வலிமை கொண்டவன் மட்டுமே கொள்கையுடையவனாவன். மாமனிதராக வாழ்ந்தோர் தமது கொள்கையையோ, கோட்பாடுகளை மாற்றாது, நீதி, சமத்துவம், அன்பு போன்ற பண்புகளை அணிகலன்களாக கொண்டவர்.

பௌத்த மதத்தினை உருவாக்கியவரான சித்தார்த்தன் என்ற பெயர் நிலைக்காமைக்கு காரணம் தான் நாட்டு இளவரசன் என்ற நிலையினின்றும் நீங்கி சாதாரண மானுடனாக வாழ்ந்துள்ளார். ஒவ்வொருவரும் தம்மீது நம்பிக்கை வைத்து அதன் வழி செல்லுமிடத்து தம்மிடமுள்ள ஆற்றலை உணர்ந்து அதனை சக்தியாக வெளிப்படுத்துமிடத்து, என்னால் எதனையும் சாதிக்கவல்ல வலிமையும் திறமையும் உண்டு என்ற கொள்கையுடன் குறுகிய காலம் உலகில் வாழ்ந்தாலும் அவரது இயற்பெயரான நரேந்திரன் என்ற பெயர் நீங்கி விவேகானந்தர் என்ற மாமனிதர் பெயரே நிலை பெற்றுள்ளது. இவர் தனது குருவான இராமகிருஷ்ணர் நெறிப்படுத்திய நியதிகளை எக்காலத்திற்கும் பொருந்தும்படியாக நடைமுறைபடுத்தியவர். இன்று இராமகிருஷ்ண நிறுவனம் உலகளாவிய ரீதியில் மனிதரின் மானுடவியல் பண்புகளை வளர்ப்பதற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது மாமனிதர்களின் மனம், மொழி, செயல் யாவும் ஆமையானது நீரினுள் உலாவிச் சென்றாலும் அதனது முழுமனமும் கரையிலிட்ட முட்டைகளின் மீதுதான் இருக்கும். அதேபோன்றே அரிய செயல்களை ஆற்றிய மாமனிதர் தமது

முழு அர்ப்பணிப்பு மக்களிடமே ஒன்றிப் போயிருக்கும்.

மனு, மனிதன் எங்ஙனம் மானுடனாய் வாழவேண்டும் என்பதற்கான தர்மநியதிகளை வகுத்துள்ளனர்.

ஏழை மக்களுக்காக தனது வாழ்வியலை அர்ப்பணித்த நோபல் பரிசினை பெற்ற வெற்றியாளரான அன்னை திரேசாவும் பெண்கள் இனத்திற்கு மாணிக்கம் போன்றவர். அவரால் சாதிக்கப் பெற்ற அரிய பாரிய மானுட சேவைகள் யாவும் இன்றும் முன்னிலைப்படுத்தி உலகளாவிய ரீதியில் அன்னையாக ஏற்றம் பெற்றுள்ளமைக்கு காரணம் அவரது அரும்பணியேயாகும்.

இந்தியாவின் ஜனாதிபதியான அப்துல் கலாமும் உலக மாமனிதராக வாழ்ந்து துய்த்துள்ளார். இந்தியாவின் அடையாளமாக சர்வதேசரீதியில் தமிழரின் அறிவுப் பெட்டகமாக அறியப்பட்டவர் இவரது வெற்றிக்கு காரணம் எளிமை, சமத்துவம், நேர்மை, மனவுறுதி, சளைக்காத மனம், அயராத முயற்சி, பகட்டு இன்மை, எளியைமான வாழ்வு, உலகப் பொதுமறையினை ஆழமாக கற்றதுமட்டுமன்றி அதன்படி வாழ்ந்து மாமனிதரானார். அவரை மாமனிதர் எனப் போற்றப்படுகின்றமைக்கு அடிப்படை அவரும் ஓர் அகிம்சா நெறியுள்ள காந்தியவாதியாக வன்முறையின்றி வாழ்ந்தார். அவரது தூர திருஷ்டியான நேர்த்தியான, தன்னம்பிக்கையுடனான சிந்தனையே அவரை வெற்றிபெற வைத்துள்ளது. ஜனாதிபதியாக பதவி வகுக்கும் பொழுது இன்றைய விஞ்ஞான கணினி யுகத்தில் தம் மக்கள், நாடு சர்வதேச ரீதியிலான எல்லா சவால்களுக்கும் உள்வாங்கப்படுபவர்களாக வரவேண்டுமென்பதே அவரது முயற்சியாகவிருந்தது.

மனிதனின் முக்கிய பணிவாக திகழ வேண்டுமேயானால் அரசியல் பேசும் பொழுது கூட சமயத்தின் மொழியின்தான் பேச வேண்டுமென விவேகானந்தர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே ஒவ்வொருவரும் வாழ்வில் நல்லனவற்றை ஆற்றி தீயவற்றினை நீக்குதலுடன் நேரத்தினை முகாமைத்துவம் செய்து அறிவை வளர்த்தலுடன் இன்பதுன்பங்களை சமமாக்கி, அன்பினை வளர்த்து நான், எனது எனும் அகங்காரத்தினை நீக்குதல் வேண்டும்.

எப்பொழுதும் எச்செயலினை ஆற்றுமிடத்து யாம், எமது என ஆற்றுதல் வேண்டும். எனவே எவை போனாலும் வரும், ஆனால் மானமும் உயிரும் திரும்ப பெறமுடியாது. தானாக வருவது இளமையும் மூப்பும் ஆனால் எம்முடன் நிழல் போன்றுவருவது பாவமும் புண்ணியமும். எவரையும் அழிவுப் பாதைக்கு செல்ல வைப்பது பொறாமையும் வெகுளியுமாம்.

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? எதற்காகப் பிறந்தேன்? நான் எவற்றைச் செய்ய வேண்டும்? நான் மட்டும் வாழ்ந்தால் போதுமா? இங்ஙனமாக ஒவ்வொருவரும் தமக்கே தாமே Case Study சுய நிர்ணயப்படி அறவொழுக்க வினாக்களை எழுப்பி தர்மநியதிப்படி வாழ்பவன்தான் மகாமனிதனாகலாம். மக்களை மட்டும் தான் போகிறான், வருகிறான், சாதிக்கிறான் என அழைப்பதற்கான அடிப்படைக் காரணமே. மனிதத் தன்மையுடனான பண்பினையுடையவன்தான் மனிதன். மனிதன் என்ற பதத்தின் பொருள் நினைப்பவன். எனவே நினைவுக்குரிய கருவி மனம். எனவே மனத்தினையுடையவன் மனிதன், வடமொழியில் மனு: ஆங்கிலத்தில் மேன், இவையாவும் மன் எனும் பகுதியடியாகவே பிறந்தவை.

எனவே மனிதன் மனநிறைவின்றி தேடல் என்ற மனப்பாங்குடன் இருக்கின்றானோ அவனிடந்தான் மேன்மைக்கான விதையுளது. மகா மானுடனாக வாழ்ந்தோரில் வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் மகா மனிதர்களாக ஏற்றம் பெற்றோர் எதையோ தேடி தேடி அலைபவர்களாக வாழ்ந்துள்ளனர். குறிக்கோள் எதுவுமேயன்றி தமக்காக வாழ்ந்தோர் தமது இடத்தினை விட்டு நீங்காது கிணற்றுத் தவளை போன்று இருக்காது. அதாவது ஒரு வட்டத்தினை மட்டும் சுற்றி வராமல் செயல்வீரர்களாக தீவிர சிந்தனை கொண்டோர் மட்டுமே சாதாரண மானுடனின்று உயர்ந்து மகா மானுடளாளன் என்ற அடையாளத்தினை பெறமுடியும். இதனை வரலாற்றின் மூலம் நாம் தெளிவு பெறலாம்.

மானுடப்பண்பினனாய் வாழ்வதற்குரிய அடிப்படையானவை. பண்புடன் பாடறிந்தொழுகல்

மனிதன் பண்பாட்டுப்பிராணி என்பது சமூகவியலாளர் கருத்து. பண்பாடு எனப்படுவது விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் அறிவு, மொழி, ஒழுக்கம், நம்பிக்கைகள், கலைகள், விழுமியங்கள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் முதலியன மனித வளர்ச்சியின் அம்சங்களாகும். பண்புடைமை முக்கிய கூறுகளாக திகழுபவை அன்பும், அறமுமாகும். இவ் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு எதிரித்தன்மையை நீக்கி தம்நலம் போன்று பிறர் நலம் பேணி வாழ்பவர்களே மகா மானுடனராக திகழ முடியும். மனிதன் எப்பொழுது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற போக்கில் நடக்காமல் உண்மையை காணும் புத்திக்கு மேன்மையான இடம் அளிக்கப்படல் முக்கியம். இங்ஙனம் நடக்குமிடத்து ஒவ்வொருவரும் விலங்கு நிலையினின்று நீங்கி தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுவான். பண்புடையவர்களாக இருப்பவர்களால்தான் இவ்வுலகம் உயர்ந்திருக்கின்றது. திருவள்ளுவரும் இதனையே வலியுறுத்தியுள்ளார். பண்பினை போற்றுபவன் தன் அறிவினை செம்மைப்படுத்தி வளர்ப்பதிலே குறிக்கோளாக இருப்பான். இவற்றினை வாழ்வில் அணிகலன்களாக அணிந்து செயற்படுபவன் மட்டுந்தான் மகா மானுடப் பண்பினைக் கொண்டவனாக காணப்படுவான்.

மகாமனிதனாக வந்தவர்கள் ஒருபோதும் மனநிறைவினைக் கொள்ளமாட்டார். தான் எல்லையற்றவன், முழுமையானவன் எல்லையற்ற இயல்புகளை உணரும்வரை ஓயமாட்டாதவர். தமது அறிவு வரம்புக்குட்பட்டது என்று எப்பவும் எண்ணமாட்டாதவர்.

மகா மானுடப் பண்பாளராய் வாழ்ந்து காட்டியோர் திசைகாட்டிகள், வாழ்வியலில் தர்மநெறிப்பதைகளை வகுத்துக் காட்டினர். சாதாரண அறிவுடையவராகிய யாமெல்லாம் கண்ணிருந்தும் பார்வையற்றவர்களாக, ஆசையின் மோகத்தால் பேராசையாகுமிடத்து மற்றவர்களது செல்வத்தை அபகரித்தும், வயோதிப காலத்தில் பொறுமையிழந்து வாழ்வில் மடிகின்றோம். மானுடப் பண்பினராய் வாழ்ந்தோர் வரலாறுகள் யாவும் எமக்குரிய வாழ்க்கைச் சுவடுகள். இவர்கள் யாபேரில்

சரியானவற்றை பார்த்து கேட்டு, மெய்யினால் செயல்கள் ஆற்றவேண்டுமென்றனர். வாழ்க்கைக்குரிய இலக்கணத்தை வகுத்து அதன்படி இயக்கினால் ஆன்ம ஈடேற்றத்தை எய்த முடியும் என்றனர். அவர்களது வாழ்வியல் மூலம் யாமெல்லாம் நல்ல மனம் உள்ளவர்களையும் நன்றியுடையாளர்களாகவும் இனம் காணமுடிகிறது. தமக்காக வாழாது நாட்டு மக்களுக்காக உலகத்தோருக்காக வாழ்ந்துள்ளனர் என எண்ணும் பொழுது அவர்களது சுவட்டினை அடியொற்ற விரும்பமுண்டாகிறது. உலகியல் பற்றினால் சிலந்தி வலை போன்று பின்னப்பட்டு வாழுமிடத்து அச்சிக்கலின்றும் எங்ஙனம் விடுபடவேண்டுமென வழிகாட்டியுள்ளனர். மகாமானுட வாழ்ந்தோர்களது முகத்தை கூட காணவில்லை. ஆனால் அவர்களை உலகம் முன்மாதிரியான புருஷர்களாக போற்றுவதற்குரிய காரணம் அவர்களது வாழ்வியல் முறைமையே. இந்துமத பொக்கிசங்களை அளித்த வசிட்டர், வியாசர், வால்மீகி, கம்பன், இவர்களை அடுத்துவந்த மகாத்மாகாந்தி, நேரு, விவேகானந்தர், இயேசுநாதர் புத்தர், நபிகள் நாயகம் இவர்கள் பாரம்பரிய வாரிசுகள்.

விவேகானந்தர் மகா புருஷராக போற்றப்படுவதற்கான முக்கிய அம்சம் அவரது பேச்சுக்கள் அறிவுரைகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக அந்தக் காலத்துச் சூழ்நிலைக்கு ஏற்ப எழுதப்பட்டாலும் இன்று கூட அவை புதியனவாகவே தோன்றுகின்றன. அவர் மக்களின் சிக்கல்களை மரத்தின் ஆணிவேரினைப் போல் ஆராய்ந்தார். இவர் கூறியது ஒவ்வொருவரும் ஆண்மை, அன்பு, தெய்வீகம் என்பவற்றினை தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். இவர் இந்தியாவின் உயிர் நாடியை ஆழமாக அறிந்து அதற்கான பரிகாரத்தினைச் செய்தல் அரசியல் ஆன்மிகம் இரண்டையும் இணைத்தார். இவரது உண்மையான வாசகம் ‘பயமில்லாமல் தலைநிமிர்ந்து எவற்றிற்கும் அஞ்சாமல் நியதிப்படி நடக்க வேண்டும்’. அவரது வாதம். எப்பவும் நாம் பழைமைப் பண்பாட்டினை மறக்கக்கூடாது. ஆனால் அதனையே சொல்லிக் கொண்டும் இருக்கக் கூடாது. இன்றைய உலகியலில்

வாழவேண்டும். ஒரு மரத்திற்கு வேர் முக்கியம். வேர் இல்லாமல் மரம் இல்லை. வேர் இல்லாமல் மேற்பகுதியாக மட்டும் இருக்கக் கூடாது. இங்ஙனமாயின் அது போலியான வாழ்க்கை. எனவே வேர் போன்ற பண்பாட்டியல் கோலங்களின் சிறப்பினைப் பெற்று இன்றைய நவீன விஞ்ஞான யுகத்துடன் இணையுமிடத்து அதன் பலன் மகத்தானது. எனவே வேர் போன்ற பண்பாடு மறக்கக் கூடாது. அதே போன்று புதிய நடைமுறைகளையும் ஒதுக்கக் கூடாது. இந்த இரண்டு அம்சங்களை கொண்டவர்தான் விவேகானந்தர். அதனால்தான் விவேகானந்தர் அன்றும் இன்றும் ஏன் வரப் போகும் காலங்களுக்குரிய உதாரணத்திற்குரிய மகா புருஷராக முன்வைக்கப்படுகின்றார்.

கம்பர், தசரதன் இறந்தவுடன் அவருக்காக பாடிய பாடல் மானுடப் பண்பாளராக வாழ்ந்தோர் எல்லோருக்கும் பொருந்தும்.

**"நந்தா விளக்கனைய**
**நாயகனே நானிலத்தோர்**
**தந்தாய் தனி அறத்தின்**
**தாயே தயாநிதியே**
**எந்தாய் இகல் வேந்தர்**
**ஏறே இறந்தனையோ?**
**அந்தோ இனிவாய்மைக்**
**காருளரே மற்றுலகில்?"**

மகாமானுடராய் வாழ்ந்தோர் அனைவரும் ஒரே வரிசையில் அடங்குவர். சீராகவும் சிறப்புற்று வாழ்ந்தோர் அனைவருக்கும் இப்பாடல் பொருந்தும். அவர்களது வாழ்வியலையும், அவர்களது படைப்புக்களின் மூலம் நாமும் சீர்மை பெற முயற்சித்தல் நல்லதாகும்.

ஜஜஜஜ

# 10

# தியானம்

**தி**யானம் என்பது ஐம்புலன்களை அகவயப்படுத்தி சிவபோதம் பெறுதலாகும். இறைவனை நான் தியானத்தினால் தான் போற்றுவேன் என்பதனை பேச்சினால் அல்லாமல் மனத்தை உட்புறமாக ஒடுக்கி உள்ளத்திலே புகுந்து நிலையாக நின்று தியானத்தால்தான் இறைவனை வணங்குவேன் என்பதனை,

**'புக்கு நின்று உன்னிப்**
**போற்றி செய்வேனே'**

என்கின்றார் தாயுமானவர்.

ஐம்புலன்கள் செல்லும் நெறிக்குச் செல்லாது அதனை நெறிப்படுத்தி மனக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகும். தியான நெறியில் நின்ற மகான்கள் யோகிகள் ஞானியர் என்போர் பேரின்பப் பேற்றினைப் பெற்றதுடன் ஆத்ம ஞானப் பேற்றினையும் பெற்றுள்ளனர். இவர்கள் பயிற்சியினால் தியானத்தினை ஆற்றொழுக்காய் கடைப்பிடித்துள்ளனர். சமய நெறியில் கிரியை முறைகளில் தியானம் மிக முக்கியமான இடம் வகிக்கின்றது.

ஆயிரம் யாகம் செய்வதிலும் பார்க்க தவம் புரிதல் சிறந்தது. ஆயிரம் தவம் புரிதலை விட நாம பாராயணம் சிறந்தது. இறை நாம பாராயணத்தை விட தியானமே மிகமிக உயர்ந்தது. தியானத்தின் மூலம் எமது சக்திகள் யாவும் இறைவன் மீது பதிவதனால் இவை அறிவுக்குச் சாதனமாகின்றது. அத்துடன் எமது செயல்கள் அற்றுப்போய் ஆத்ம பலம் ஏற்படுவதுடன்

வினைகள் குறைக்கப்படுவதனால் எமது பிறவித் தொடரும் குறைய வாய்ப்புண்டாகும்.

தியானத்தின் மூலம் பெறும் ஆத்மபலம். இதுதான் பொய்யினின்றும் உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், சிற்றின்பத்தினின்றும் பேரின்பத்திற்கும் நல்லொழுக்க நெறிக்கும் உதவுமென எமது சமயநெறி அழுத்தமாக கூறுகிறது.

**“தியானம் என்கிற பெரு நெருப்பில் தீய சக்திகள் அழிந்து விடுகிறது.**
**தியான யோகத்தில் முன்னேற விரும்புகிறவனுக்கு கர்மம் உபாயமாகிறது.**
**தியான சித்தி அடைந்தவனுக்கு செயலற்று இருப்பது உபாயமாகிறது.”**

- ***கீதை அத்தியாயம் 6 சுலோகம். 3***

தியானத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரும் மனவுறுதி, வைராக்கியம், ஒருமுகப்படுத்திய அறிவு, அமைதி, சாந்தம், பொறுமை ஆகிய வற்றினை கடைப்பிடித்தல் வேண்டும். தியானத்தின் போது விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, தீய நினைவுகள், பதகளிப்பு இவை யாவும் இருத்தல் கூடாது. திரிகரண சுத்தி அவசியமாகும். தியானம் தீய சக்திகள் யாவற்றையும் அழித்துவிடும். தியானம் மனத்தினை அகப்புறமாக திருப்பி, மனத்தை ஒடுக்கி தனியொருவனால் தனித்து நின்று செயற்படுவதாகும்.

தியானம் செய்வதற்கு பிரம்ம முகூர்த்த நேரமும், சாத்வீகமான சூழலும் அவசியம். அதிகாலை நேரத்தில் மனத்தெளிவு, பற்றின்மை, சிதறியடிக்கும் எண்ணம், யாவும் இருக்காது. எண்ணங்களின் வலிமையை பெருக்கி தியானம் செய்யுமிடத்து ஏற்படும் தடைகள் சந்தேகங்களை நீக்கி விடலாம். தியானம் செய்பவர் நாசி முனையில் பார்வையை ஒருமுகப்படுத்துமிடத்து தடுமாற்றம் தூக்கம் எதுவும் ஏற்படமாட்டாது. இதன் வாயிலாக ஞானியர் யோகியர் தம்முடைய ஆத்மாவை இறைவனுடன் இணைத்து அமைதி அடைகின்றனர். மனதினை ஒருமுகப்படுத்தி இறைநாமத்தினை இடைவிடாது பாராயணம் செய்வதும் தியானம் தான்,

**‘மனத்து விளக்கினை மான்பட ஏற்றி**
**சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி**
**அனைத்து விளக்கும் திரியொக்கத் தூண்ட**
**மனத்து விளக்கது மாயா விளக்கே.’**

**– திருமந்திரம்**

எமது மனத்திலுள்ள விளக்கு ஒளியை மேலே செலுத்தி இயல்பாகவுள்ள சினம் என்ற நெருப்பினை நீக்க வேண்டும். **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** எனும் அந்தக் கரணங்களை நியதியாக நெறிப்படுத்துமிடத்து மனத்தில் சிவம் என்ற விளக்கே தோன்றும். தவம் புரிவோர் தமக்குத் தேவையானதைப் பெற வேண்டி நிற்பர். புராண இதிகாசங்களில் தவவலிமை பெற்று இறைவனிடம் அருளினைப் பெற்றுள்ளனர். அவர்கள் யாபேரும் ஏதாவதொரு தீயவிளைவினை ஆற்றுவதற்காகவே தவம் புரிந்துள்ளனர். அவர்கள் தவவலிமையினால் பெற்ற வரங்களைக் கொண்டு தீங்கினை இழைத்ததுடன் தாமும் மாய்ந்துள்ளனர். ஆனால் தியானத்தின் மூலம் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய பேரின்பப் பேற்றினைப் பெறுவர். பட்டர் என்ற இயற்பெயருடன் கூடியவர் அபிராமியை தினமும் நினைந்து கசிந்துருகி தியானித்துக் கொண்டிருப்பர். ஆழ்நிலை தியானத்தில் ஈடுபட்டோருக்கு நாள், திதி ஒன்றுமே தெரியமாட்டாது. யாரை மனதில் ஒரே நினைவாக கொள்வாரோ அதுதான் அவர்களது காட்சிப் பொருளாகும். பட்டரிடம் சரபோஜி மன்னன், ‘இன்று என்ன திதி’ என்று கேட்டவுடன், பட்டர் அம்பாளின் தியானத்தில் இருந்தமையால் அன்றையதினம் தை அமாவாசை. ஆனால் பட்டர் அரசரிடம், ‘இன்று பௌர்ணமி என்று கூறிவிடுகின்றார். எனவே அரசன் ‘இன்று நீர் பௌர்ணமி’ முழு நிலவினை தோற்றுவிக்க வேண்டும்.’ இல்லாவிடில் உமக்கு தண்டனை அளிக்கப்பெறும் எனக் கட்டளையிட்டார். பட்டர் தன்னை சுயநினைவிற்கு சுதாகரித்து, அன்னையே உன்னையல்லவோ **மனம், மொழி, மெய்** மூன்றினாலும் நினைந்து தியானத்தில் இருந்தேன். என்பணியினைச் செய்துவிட்டேன். உன் பணியினைச் செய்வது உனது கடன் என்ற கூறி, அபிராமி அந்தாதிப்

பாடல்களைக் பாடிக் கொண்டிருக்கும் பொழுது, அபிராமி அன்னை தனது இடது காதணியினை கழற்றி வானத்தில் வீசியெறிந்தாள். அது பௌர்ணமி நிலவாக காட்சியளித்தது. அன்று தொடக்கம் பட்டர் என்ற பெயர் அபிராமிபட்டர் என வழங்கலாயிற்று. இவ் அருங்காட்சி நிகழ்த்திய காலம் தை அமாவாசையாகும். எனவே ஒவ்வொருவரும் தம்முள்ளேயிருப்பதனை ஏதோ ஒரு வழியினால் வெளிக்கொணர வேண்டும். இது ஆன்மீக உணர்வு சம்பந்தமானது. எவராலும் எவரையும் ஆன்மீகவாதியாக்க முடியாது. அவரவரேதான் ஆன்மீகத் தேடலுக்குள்ளாகுமிடத்து உரிய பேரின்பப் பேற்றினைப் பெறலாம்.

யோகியின் உடலில் இயங்கும் சந்திரகலை, சூரியகலை இயல்பை நன்கறிந்து தியானம் செய்பவர்கள் அந்தக்கரணங்கள் கலை பதினாறையும் மூச்சுக்காற்று பிராணனனையும் காக்கலாம்.

நாரதர் தன்னை போன்று பகவானை தியானம் செய்யும் பக்தன் எவருமில்லையென மிகவும் கர்வம் கொண்டார். பகவான் நாரதரின் கர்வத்தினை குறைக்க எண்ணினார். தேவர்கள் கூட, தியான யோகத்தினை பூவுலகில் வாழும் குடியானவனிடம் கற்றுக்கொள்ள வேண்டும் எனக்கூறினார்

உடனே நாரதர் பூவுலகம் வந்து பகவான் சொன்ன ஏழைக்குடியானவன் குடிலுக்கு மாறுவேடத்தில் வந்தான். குடியானவன் நாரதரை உபசரித்தான். விடிகாலையில் எழுந்த குடியானவன் பகவானை துதித்தான். பின்பு ஏர்பூட்டி தனது வயலை உழுவதற்கு சென்று மாலை வரை அயராது உழைத்தான். மாலை வீட்டிற்கு வந்து தனது கடமைகளை முடித்து படுக்கையில் அமர்ந்தபடி பகவானை துதித்தான். குடியானவன் செயலினை நாரதர் பகவானிடம், குடியானவன், தியானம் இவ்வளவுதானா? அவனையா இவ்வாறு புகழ்ந்தீர்கள் என்றார்.

பகவான் நாரதரிடம் நான் சொல்வதைச் செய்தால் உனது பக்தி தியானம்தான் உயர்ந்தது. ‘ஒரு குடம் நிறைய தண்ணீர் நிரப்பிக் கொண்டு என் கோயில் ஒன்றில் மூன்று முறை ஒரு துளி நீர் சிந்தாதபடி சுற்றிவர வேண்டுமென்றார்.

நாரதர் தண்ணீர் குடத்துடன், பயம் அவரது உள்ளத்தில் ஊடாடிக் கொண்டிருந்தது. குடம், குடத்து - நீர் இதே நினைவுதான். சுற்றி வந்ததும் பகவானிடம், 'நல்ல காலம் நான் ஒரு துளி நீர் கூட சிந்தாமல் சுற்றி வந்துவிட்டேன்' என்றார்.

பகவான், 'தண்ணீர் குடத்துடன் வலம் வரும் பொழுது எத்தனை தடவை தியானம் செய்தீர் எனக் கேட்டார். எங்ஙனம் பகவானே நான் தங்களை தியானிக்க முடியும். எனது தலையிலோ தண்ணீர் நிரம்பிய குடம். தாங்கள் விருப்பமோ ஒரு துளி தண்ணீர்கூட நிலத்தில் சிந்தக் கூடாது. எனது முழுக் கவனமும் தண்ணீர்க் குடத்தின் மீதுதான். எனவே தங்களை தியானிக்க முடியவில்லை என்றார். 'ஒவ்வொருவரும் தத்தமது நிலையில் கடமையைச் செய்தாலே அதுவே தியானம். இனிமேலாவது பகவானன் மீது அதீத தியானம் தான் செய்பவன் என்பதனை நீக்க வேண்டும்' எனக் கூறினார்.

எம் ஒவ்வொருவரிலும் இறைவன் கண்ணிலும் உள்ளத் திலும் நிறைந்துள்ளான். நாம் முறையாக தியானத்தினை நெறிப்படுத்துமிடத்து இறைவனை ஒளிரூபமாகவும், ஒலி ரூபமாகவும் தியானிப்பவரால் உணரமுடியும். தியானத்தில் திளைப்பவரிடம் பத்து விதமான ஒலிகள், அதன் நுட்பத்தினையும் அறிய வாய்ப்புண்டாகிறது. பத்துவித ஒலிகளானவன: **கடல், மேகம், யானை, மணி, புல்லாங்குழல், சங்கு, பேரிகை, யாழ், வண்டு, தும்பி.** இதனை திருமூலர் 'மணிகடல் யானை வார் குழல் மேகம்......' எனும் பாடல் மூலமாக விளக்கியுள்ளார். தியானத்தின் மூலம் யோகியர் வன்மை பொருந்திய ஓசைகளையும், மென்மையான நாதத்தினையும் கேட்பது அவர்களது அகப்பார்வையின் வலிமையாகும்.

**'மணிகடல் யானை வார்குழல் மேகம்**
**அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்**
**தணிந்து ஏழு நாதங்கள் தாமிவை பத்தும்**
**பணிந்தவர்க்கு அல்லது பார்க்க ஒண்ணாதே.'**

**– திருமூலர்: 606**

தியானத்தின் பொழுது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கங்களை யோகநெறி கூறுகின்றது. முக்கியமாக பயிற்சிகளாக சிரவணம் 'தக்க குருவின் நெறிப்படி ஆத்ம விசாரணைக்குரிய தெளிவினைப் பெறுதல்' ஆகும். தான் குருவிடம் பெற்ற ஞானத்தை இரண்டாவது நிலையாக அதனை 'நிறுத்துதல்' ஆகும். மூன்றாவது நிலை தான் தியானத்திற்குரியது. 'தான் குருவிடம் பெற்றதைக் கொண்டு மனதினை அகப்புறவாக்கி தியான நிலை செய்தல்'. இவை யாவும் யோக நெறியில் கூறப்பெற்ற அட்டாங்க யோகப் பயிற்சிகளை செய்தாலொழிய தியானத்தினைப் பூரணமாக நெறிப்படுத்த முடியாது.

இறைவனைத் தோழனாகப் பாவித்து அன்பு செய்யும் முறை. இது யோக நெறி, இதனை சிவஞானசித்தியார் கூறும் பாடல் வருமாறு,

**'சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்**
**சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்**
**அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும் பொருள்கள் உணர்ந்தங்(கு)**
**அணைந்துபோய் மேல்ஏறி அலர்மதிமண் டலத்தின்**
**முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேங்கி**
**முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்**
**உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்**
**உழத்தல் உழந் தவர்சிவன் தன் உருவத்தைப் பெறுவர்'**

'யோகத்திற்கான முதல் வாசல்படி வாக்கினை கட்டுப் படுத்துவதே' ஆகும்.

வேதம் அறிவினை தந்தைபோல் அளிக்க ஆகமம்தான். தாய் போன்று பொறுமையாக ஆன்மாக்களை தன் கையில் ஏற்கிறது. பின்பு தனுகரண போகங்களை அளித்து அநுபவத்தினை காட்டுகிறது. நிலையில்லாதவற்றினை உணர்த்துகின்றது. சரியை கிரியையினால் புறத்தூய்மையை அளித்து யோகத்தினால் மனத்தினை அகப்புறம் திருப்புகிறது. மனம் ஒருமைபட அறிவு முதிர முதிர ஆன்மா விழிப்புற்று இறையின்பமான பேரின்பத்தினை நாடுகிறது. ஆகமநெறி ஆன்மாக்களுக்கு அறிவினை புகட்டி அருளாட்சிக்கு பயிற்றுவிக்கிறது.

**அட்டாங்க யோகப் பயிற்சிகளாவன:**

**இயமம்** - ஐந்து விரதங்களாவன: அகிம்சை, உண்மை, கனவின்மை, பிரமச்சரியம், தானம் பெறாமை. அடுத்தபடி நிலை - **நியமம்** - தியான நெறிக்குரிய ஆசாரங்களானவை. அகப்புறத் தூய்மை, திருப்தி, புலன்களை அடக்குதல், ஞான நூல் கற்றல், இறைவழிபாடு. மூன்றாவது யோகப் பயிற்சியாக கடைப்பிடிக்க வேண்டியது. **ஆசனம்** - மனத்தை ஒன்றுபடுத்தி இறைவனில் மட்டுமே நிறுத்துவது. மனத்தினை மாசுபடுத்தும் காமம், வெகுளி, மயக்கங்களை அகற்றி இறையனுபவம் உண்டாக பிராணாயாமம், தியானம் ஆகியவை பயிலுதல்.

பிராணாயாமம் - மூச்சினை அளவாக விடுதல் - ரேசகம், மூச்சினை உள்ளே இழுத்தல் - பூரகம். தம்பகம் - மூச்சினை அடக்கி நிறுத்துதல். இங்ஙனம் பிராணாயாமப் பயிற்சியினால் மூக்குச் சரடுபோட்டு காளையைக் கட்டுப்படுத்துவது போன்று மனதினை எளிதில் அடக்கலாம். மனிதன் சிறப்புற வேண்டுமென்றால் உடலிற்கோ, மனத்திற்கோ மட்டும் பயிற்சி அளித்தால் போதாது. ஆன்மீகப் பயிற்சியும் தேவை. வயது வேறுபாடின்றி யோகத்தில் கூறப்பெற்ற ஆசனங்களை பயிற்சி செய்துவந்தால் ஆன்மீகப் பலத்தினை வளப்படுத்தமுடியும். உடலில் ஓடும் பிராணவாயு சீராக எங்கும் பரவும். தசைகளுக்கு பயிற்சி அளிக்கவும் சுரப்பிகளை நன்கு இயங்கச் செய்யவும் ஆசனங்களும் உடற்பயிற்சியும் உதவும். இதனை நாம் நேர்த்தியாக நியதிப்படி செய்துவந்தால் எம்மிடத்திலுள்ள சோம்பல் குணமான தமோகுணம் நீங்கும். உடலும் உள்ளமும் சுறுசுறுப்படையும்.

ஒரே பொருளில் மனதில் நிலைக்கச் செய்யும் பயிற்சியை கிரமமாக கடைப்பிடித்து வருமிடத்து தியானத்தில் ஈடுபடும் பொழுது அது ஆன்மிகப் பயிற்சியாகி நற்பலன்களை தரும். உடல் உளப் பயிற்சிகளினால் முக்கியமாக பிரமச்சரிய பருவத்தில் நித்ய கர்மங்களாக ஆற்றினால் அவர்களது புலன்கள் அடங்கப் பெற்று மன உறுதியுடன் கூரிய புத்தி கூர்மையும் பெற்று கல்வியிற் சிறக்க முடியும். இளம் பராயத்தில்

பிள்ளைகள் தீயபழக்கங்களுக்கு உள்ளாகி, உடல் உள உபாதைகளுக்கு உள்ளாகி எத்தனையோ விதமான பாதக சூழலுக்குள் அமிழ்த்தப்பட்டு திசை மாறி செல்கின்றனர். எனவே இளந்தலைமுறையினரை காப்பாற்றுவதற்காகவே எமது இந்து சமயநெறி இத்தகைய உடமனவளப் பயிற்சிகளை கடைப்பிடிக்க வேண்டுமென்கிறது.

பிரத்யாகாரம் - குறிப்பிட்ட ஒரு பொருளில் மனதை நிறுத்திப் பழகுவது. அப்பொருள் உடம்பின் உள்ளேயோ, வெளியேயோ இருக்கலாம்.

தியானத்திற்கு முன் நிலைகளின் பயிற்சியை கிரமமாக பெறல் வேண்டும். இந்நிலையினை எய்யுமிடத்துதான் நினைத்த பொருளின் உருவத்தினை ஒழித்துவிட்டு அதன் கருத்தினை மட்டும் தியானத்தால் அது சமாதி எனப்படும். சமாதி எய்யப் பெறுபவர்களிடம் 'அட்டமா சித்திகள்' கைவரப் பெறும். அட்டாங்க யோக நெறியின் இறுதி அங்கமான சமாதி மனத்தினை சிவப்பரம்பொருளுடன் நிலைநிறுத்தி வைத்தலாகும்.

இந்நிலையிலுள்ள தியானம் யோகிக்கு உள்ளத்தில் பிரபஞ்சம் முழுவதும் அடங்கி, புற உலகு பற்றிய உணர்வு இருக்காது. சிவப்பரம்பொருள் சோதி வடிவமாய் தோன்றும். தியானிக்கப்படும் பொருள் என்றும் இரண்டுபடாமல் அவன் தறிபோல் இருப்பன். அந்நிலையில்தான் யோகச்சமாதி அடைபவர்க்கு அட்டமா சித்திகள் தோன்றும் அவர்கள். சித்தராய்த் திகழ்வர்.

**'யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்**
**யோகச் சமாதியின் உள்ளே உளர்ஒளி**
**யோகச் சமாதியின் உள்ளே உளசக்தி**
**யோகச் சமாதி உகந்தவர் சித்தரே!'**

**– திருமந்திரம்**

**அட்டமாசித்திகளாவன:**

அணிமா - அணுவளவாகச் சுருங்கும் ஆற்றல்.
லிகிமா - உடல் பாரமற்றதாகும் தன்மை,
மகிமா - விரும்பியவாறு உருவத்தைப் படுக்கச் செய்யும் ஆற்றல்.

பிராத்தி - வேண்டியவற்றை அடையும் ஆற்றல்
கரிமா - மிகக் கனமாகவிருக்கும் ஆற்றல்.
பிராகாமியம்- நினைத்தபடி செய்யும் திறன்.
ஈசத்துவம் - சித்து தன்மைகளை செய்யும் திறன்.
வசித்துவம் - யாவரையும் தம்வசப்படுத்தும் ஆற்றல்.

யோகநெறியின்பால் இறைவனை தோழனாக பாவித்து சகமார்க்கத்தில் இறைவனின் அருளினைப் பெற்றவர் சுந்தரர். தான் பெற்ற சிவபேற்றினை,

**"தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடோறும்**
**நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்**
**மாடுவன் மாடுவன் வன்கைபிடித்து மகிழ்ந்துளே**
**ஆடுவன் ஆடுவன் ஆமாத்தூ ரெம் அடிகளே"**

தியானத்தின் மூலம் இறைவனின் அருவத் திருமேனி தான் (சிவம்) புலப்படும். இவர்கள் தமது நெற்றியில் திருநீற்றினை பூசுவர். திருநீற்றின் மகிமையானது பரமுக்தியான ஆன்ம ஈடேற்றத்தினை மட்டுமன்றி தியானிப்போர் எட்டுவகைச் சித்திகளையும் சித்தி அளிக்க வல்லது.

முறையான யோகப் பயிற்சியினை சாதகம் செய்வதன் மூலம் நாம் கண்ணாடியில் எமது உருவத்தினை காண்பது போல் தியானத்தினால் இறைவன் கண்ணிலும் உள்ளத்திலும் நிறைந்திருப்பான். அதனாலேதான் இறைவனின் ஒளி வடிவத்தையும், ஒலி வடிவத்தையும் தியானிப்போன் அறிய முடியும். தியானத்தில் ஈடுபடுபவர் கண்பார்வையை புருவமத்தியில் செலுத்தியிருக்க வேண்டும்.

தியானத்திற்கு முண்டக உபநிடதத்தில் சிறந்த உவமை மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தியானம் செய்பவன் வில்வித்தைக்காரன். அவன் பெற்ற கல்வியறிவு அதாவது ஞானமே வில் ஆகும். அம்பு, தியானம் செய்பவனின் ஆத்மா - அம்பாகிய தன் உள்ளத்தை வில்லில் வைத்து, நாணினை இழுக்க வேண்டும். நாணினை இழுக்கும் பொழுது தான் பெற்ற

ஞானத்தை பிரயோகித்து தியானித்து நாணை இழுத்து குறிபார்க்க வேண்டும். இறைவனே குறியாகும். நல்ல வில்வித்தைக்காரன் வில்லை வளைக்கும்போது குறியும் அம்பும் ஒரு நேரில் அமையச் செய்கிறான். அந்த நிலையில் அம்பு, குறியில் மறைந்து போகிறது. இறைவனை தியானம் செய்பவனும் அவ்வாறே தன் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகவே காணவேண்டும். எனவே தியானம் என்பது எளிதானது அல்ல. ஆனால் எம் யோகியர் ஞானியர் இதனைச் சாதித்துள்ளனர். அதற்கு திருமூலர் ஒருவரே எமக்கு உதாரண புருஷராவார்.

தியானம் செய்யும்பொழுது இறைவனே உண்மை. நிலையானவர்: ஏனையவை யாவும் உண்மை அல்லாதவை. நிலையற்றவை என ஆராய்ச்சி செய்ய வேண்டும். இங்ஙனம் சிந்தித்துச் சிந்தித்து நிலையில்லாதவைகளை மனதிலிருந்து முற்றாகவே அகற்ற வேண்டும்.

**‘அஞ்ஞானம் விட்டு**
**அருள் ஞானத்து எல்லைத்தொட்டு**
**மெஞ்ஞானம் வீடு பெற்று**
**வெளிப்படல் வேண்டும்’**

தியானத்தில் ஈடுபடுமிடத்து திடமான புத்தியை எத்தகைய துன்பங்கள் துயரங்கள் இடையூறுகள் ஆபத்துக்கள் வந்தாலும் கொல்லனது பட்டறைக் கல் போன்று அசையாதிருத்தல் முக்கிய அடுத்து விடாமுயற்சியையும் கைவிடக்கூடாது. ரிஷிகள் யோகியர் திடமான மனவலிமையினால்தான் புலன்களை வென்றவர்களாகவும், தியானத்தினை சுலபமாக ஆற்றியுள்ளனர். புலன்களை வென்று தியானத்தில் தம்மை அர்ப்பணித்தவரிடம் வலிமையான தீட்சண்யம் பொருந்திய பார்வையை பெற்றதுடன் லௌகீக உலகில் நடக்கவிருப்பதை கூட காட்சிப்படுத்தி சொல்வர். பூசை, இறைபாராயணம் இவற்றினை முறையாக இயற்றுமிடத்து தியானம் செய்வது சுலபமாகும். பூக்களை கையில் வைத்திருந்தால்

மணம் வீசும். சந்தனத்தைக் கல்லில் உரச உரச வாசம் வீசும். அதேபோன்று தெய்வீக விடயங்களைச் சிந்திக்கச் சிந்திக்க தெய்வீக விழிப்புணர்வு ஏற்படும். இறைவனின் அருட்கடாட்சமும் கிடைக்கப்பெறும் எமது இந்து நெறி சனாதனதர்ம நெறி. இது காலங் காலமாக இருந்து வருகிறது. இனியும் இருக்கும். இந்து சமய நெறியில் ஆராதனைகள் வழிபாடுகள் ஆற்றும் பொழுது தியானத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. கிரியைகளின் பொழுது வேத பாராயணம் இடம்பெறும்பொழுது தியானம் எனக் கூறி மந்திர பாராயணம் இடம்பெறும்.

வேதத்தின் தியானத்தில் மூழ்கியிருப்போர் சீவன் முக்தர் ஆவர். இவர்கள் சிவபோதத்தினுள் தம் உள்ளத்துணர்வினை அடக்க அந்த உணர்வினில் சிவபோகத்தினால் எவ்வித செயல்களின்றி ஆனந்த நித்திரை செய்வர். இவர்கள் இருவினைகளையும் விரும்பமாட்டார். இவர்களிடம் அறியும் திறம் இருந்தாலும் சிவஞான ஆனந்தத்தில் மூழ்கியிருப்பதால் புறவிடயங்கள் எதையும் அறியமாட்டார். தியானத்தின் மூலம் திருவருள் வசப்பட்டு நிற்பதனால் எந்த வினைகளுக்கும் செம்பொருளாகிய சிவபோகமே பயனாகும். பிரார்த்தமாக அமைந்த வினை எடுத்த உடம்போடு அநுபவத்துடன் ஒழிப்பர். ஆனால் தியான செயற்பாட்டினால் சீவன் முத்தர் புதியாய் செய்யப்பெறும் ஆகாமிய வினைகளை சிவனின் திருவருள் இல்லாதொழிக்கும் சீவன் முக்தராவர். வினைகளும் தொடரமாட்டாது இம்மையிலேயே முத்தியின்பம் பெறுவர். எனவே ஒருவர் தியானத்தின் மூலம் பெறும் பேரின்பத்தினை நாம் கேட்க முடியாது. அது அவரவர்களாலேயே துய்த்து பேரின்பமடைய முடியும். இங்ஙனமாக தியானத்தினின்றும் தாம் பெற்ற சிவபோதத்தினை ஒரு சிலர் சித்து தன்மைகளைக் காட்டுவர். அவர்களின் சித்துத் தன்மைகளை கண்டு அவர்கள் பின் செல்லாது உண்மையறிவான இறையின் சிவஞானப் பேரின்பத்தினை எய்தி பேரின்பமடைய முயலுதல் வேண்டும். தியானத்தில் மூழ்கியிருப்போர்க்கு பசி

என்ற பிணி நெருங்கமாட்டாது. சிவக்கலப்புடன் சும்மா இருக்கும் யோகி ஒரு சக்திப் பிழம்பாவன். அவனிடம் ஆத்மசுத்தி ஏற்பட்டு தெய்வ உணர்வைப் பொலிவிக்கும் யோகியின் சக்தி பரவிப் பரவி நாடு புண்ணிய பூமியாக விளங்குகிறது. தியானத்தின் சிவப்பேரொளியினை திருமூலர் சிறப்பாக கூறியுள்ளார்.

**'பள்ளி அறையிற் பகலே இருளில்லை**
**கொள்ளி அறையில் கொளுந்தாமற் காக்கலாம்**
**ஒள்ளிது அறியில் ஓர்ஓசனை நீளிது**
**வெள்ளி அறையில் விழவில்லைத் தானே.'**

புருவ மத்தியிலுள்ள ஆயிரம் இதழ் தாமரையில் அன்னை பராசக்தி உறைந்துள்ளாள். அதனால் அவ்விடத்தில் எப்பொழுதும் பேரொளி தீபம் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். தியானம் செய்யப்பெரும் யோகியரும், ஞானியரும் மட்டுந்தான் அவ்வொளியின் காட்சியின்பத்தினை கண்டு களிப்பர்.

எனவே அழியாப் பேரின்பத்தினை அளிக்கின்ற பேரொளி அநுபவம் தியானத்தில் மட்டும்தான் கிடைக்கப்பெறும்.

தியானம் மனிதனை மாமனிதனாக்குகிறது. இதன் மூலம் கிடைப்பது ஆத்மா ஞானம். நிம்மதியற்ற நிலையிலிருந்து நிலையான அமைதிக்கும் தீயவொழுக்க நெறியினின்று நல்லொழுக்க நெறிக்கும் தியானம் நிலைமாற்றம் செய்கிறது. அருச்சுனன் கிருஷ்ண பரமாத்மாவிடம், 'தியானம் செய்யச் சொல்கிறீர்கள். ஆனால், என்மனம் அலைபாயும் தன்மையுடையது. மனதினை யோகத்தில் உறுதியாக்க முடியுமா? காற்றினை அடக்குவது போன்று கடினமான காரியம் மனதினை அடக்குவது' எனக்கூறினான். அதற்கு பரமாத்மா 'ஒவ்வொருவரும் அலைபாயும் மனதை தம்வசப்படுத்துவது மிகவும் கடினம். ஆனால், யோக பயிற்சியாலும் மனவுறுதியாலும் வைராக்கியத்தாலும் மனதினை வசப்படுத்த முடியும்' என்றார்.

இன்று உலகளாவிய ரீதியில் எமது நெறி தியானத்தில் ஈடுபவர்குரிய பல யோகப் பயிற்சிகளை ஆற்றி வருகின்றது. விஞ்ஞான ரீதியாக எமது ஆசனம் தொடர்பாக ஆராய்ச்சி செய்து

இந்து நெறி சொல்லப் பெற்றவைகளை விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டு அது தொடர்பாக அறிவுபூர்வமான விடயங்களை கணினி மூலம் கூறுகின்றது. அதில் மேலைத்தேயத்தவரின் பங்களிப்பு அதிகமாகி வருவதனை காணமுடிகின்றது. அவர்கள் நாம பாராயணம் செய்வதுடன் பிராணாயாமம் பயிற்சியுடன் ஆசனங்களை செய்கின்றனர். அவர்களது உணவு வகையிலும் தாவரந்தொடர்பான உணவு வகைகளையும், நோன்பினையும் கடைப்பிடிக்கின்றனர். எனவே யாவருக்கும் இன்றைக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது மனச்சாந்தியே அதாவது ஆன்மீகந் தொடர்பான செயற்பாடுகளே.

**"மனிதனை மாமனிதராக்குகிறது தியானம். மகான்கள் யோகியர் இடைவிடாது ஆற்றொழுக்காய் தியானித்துக் கொண்டிருக்கிறார்கள். தியானத்தின் மூலம் இவர்கள் தம்முடைய ஆத்மாவை இறைவனுடன் இணைத்துக் கொண்டு அமைதி அடைகின்றனர்."**

**– இது கீதை அத்தியாயம். 6 சுலோகம். 15.**

தியானம் செய்வதன் மூலம் நூற்றாண்டுகள் வாழலாம்.

**'நூறும் அறுபதும் ஆறும் வலம்வர**
**நூறும் அறுபதும் ஆறும் இடம்வர**
**நூறும் அறுபதும் ஆறும் எதிரிட**
**நூறும் அறுபதும் ஆறும் புகுவரே.'**

- **திருமூலர்: 729**

நூற்று அறுபத்து ஆறு மாத்திரை பிராணன் வலப்பக்கமாகவும், இடப்பக்கமாகவும் சுற்றிவர இந்த பிராணன் உடல் எங்கும் பரவி நின்று மனிதன் உடம்பு நூறு ஆண்டுகள் கழித்தும் உலக வாழ்வில் நிலைத்திக்கும்.

ஜஜஜ

# 11

# விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம்

**ந**வீன விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் தேவைகளை அதிகரித்ததுடன் பேராசை, சுயநலம், போட்டி பொறாமையை வளர்ப்பதிலேதான் துணை செய்கிறது. தவிர, மனிதனின் உள்ளத்தில் அன்பு, பண்பு, பாசம் ஒற்றுமை மானிடப் பண்பு ஆகியவற்றினை வளர்ப்பதற்கு விஞ்ஞான வளர்ச்சி உதவி செய்ய சாத்தியமற்றது. இன்றைய நவீன சமுதாய வாழ்வுச் சிக்கல்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இடர் மிகுந்த காலம். மனிதனின் தேவைகள் ஆசைகட்கு வரையறையில்லை. விஞ்ஞான வளர்ச்சி புதிய தொழில்நுட்பக் கருவிகளை மாற்றிப் புதுப்பித்து வேலைகளை இலகுபடுத்துகின்றதேயொழிய, மனத்தினை சாந்தமாக்கி ஆன்மலயிப்பினை அளிப்பதற்கு இது சாத்தியமாகாது. விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் ஒழுக்க அறவிழுமியங்களை ஆராயமுடியாது. விஞ்ஞான வளர்ச்சியினால் ஆகாயம் கூட விஷவாயுக்களினால் நிரம்பி வழிகின்றது. வளிமண்டலத்தில் ஓசோன் படையில் கூட மாசு ஏற்பட்டுள்ளது. விஞ்ஞான நுட்பக்கருவிகளினால் போரில் கூட ஆயிரக்கணக்கானோர் மாய்கின்றனர். உள்ளங்கை நெல்லிக்கனி போன்று ஒன்றுபடுத்திய வியத்தகு விஞ்ஞானம் செய்மதி மூலம் ஒலி ஒளி நிகழ்ச்சிகளினால் வன்முறைச் செயற்பாடுகளே மலிந்து காணப்படுகின்றன.

இதிகாச புராண காலங்களில் கட்டடக்கலை ஓவியம், இசை,

நடனம், சோதிடம், போர், மருத்துவம், விஞ்ஞானம் யாவும் வெளிப்படுத்தியுள்ளன.

மகாபாரதத்தில் யாராவது பொய் பேசினால் கண்டுபிடிக்கும் யந்திரம், மனத்தில் நினைப்பதைக் காட்டும் கருவி, வானில் இருந்து செய்யும் போரில் அணு ஆயுதம், சக்கராயுதம் வியத்தகு மயன் மாளிகை (ARCHITECT) விஸ்வகர்மாவின் கட்டடக்கலை யாவும் வருகின்றன. அஸ்திரங்களினால் உண்டாகும் விளைவுகள் யாவும் இன்றைய நவீன ஆயுதங்களின் விளைவினை ஒத்தன.

புஷ்பக விமானங்கள் வருகின்றன. எனினும் போரில் கூட தர்ம நியதியைக் கடைப்பிடித்தனர்.

சிவபிரானிடம் அருச்சுனன் தவம் செய்து பாசுபத அஸ்திரம் பெறுகின்றான். 'தருமரிடம் அண்ணா வாருங்கள், நான் சேகரித்து வைத்துள்ள ஆயுதங்களை காட்டுகிறேன்' எனக் காடாக உள்ள பகுதிக்கு அழைத்துச் சென்றான். போர்க் கருவிகளை நான் பிரயோகம் பண்ணிக் காட்டுகிறேன். காட்டுச் சூழலில் வாழும் உயிர்கள் பலவும் 'ஐயோ வேண்டாம்: நாங்கள் அழிந்து விடுவோம்' என்று வேண்டிக் கொண்டன. உடனே தருமனும் 'தம்மை தடுக்கக் கூடிய தகுதி வாய்ந்த எதிரியின் மேலேயே கூட கருவிகளை அனாவசியமாகப் பிரயோகிக்க வேண்டாம்' எனக் கூறித் தடுத்தார் என மகாபாரதம் கூறுகிறது. சாதாரணமாகப் பிரயோகித்தாலே பல உயிர்கள் அழியும் சூழ்நிலை என்றால் அஸ்திரங்களின் ஆற்றலை ஊகிக்கலாம். அதனாலேதான் இன்று சமாதானம் வேண்டுவோர் அணுகுண்டு பரிசோதனை வேண்டாம் என்கின்றனர். இன்றைய விஞ்ஞானக் கருவிகளை மெய்ஞானம் எப்பவோ கண்டு தர்மநியதியுடன் கருவிகளைக் கையாண்டுள்ளன.

ஒரு புறம் விஞ்ஞானம் உயர்நிலைக்குச் சென்றாலும் மறுபக்கம் மானுடப் பண்பின்றி மக்கள் பதகளிப்புடன் அதாவது காட்டில் விடப்பட்டமை போன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழும் வயதினையுடைய இளம் சிறார்களே குற்றம் புரிபவராகி பால் வித்தியாசமின்றி நாளாந்தம் பெருகி வருகின்றமையும் காணலாம்.

விஞ்ஞானி அயின்ஸ்டன் **"விஞ்ஞானமற்ற சமயம் குருட்டுத்தனமானது சமய அம்சமற்ற விஞ்ஞானம் முடமானது, செயலற்றது"** எனக் கூறியுள்ளார். விஞ்ஞானம் எங்கள் சேவகனாக இருக்க வேண்டுமன்றி, ஒருவரினதும் எஜமானாகவிடக்கூடாது என்பது தாகூரின் கூற்றாகும்.

விவேகானந்தர், அரசியல் பேச வேண்டுமேயானாலும் சமயத்தின் மொழியிற்தான் (அதாவது மென்மை கலந்த சொற் பதங்கள் மூலமே பேச வேண்டுமென்கின்றார். முக்கியமாக எவற்றையும் சிறுபராயத்திலே மனத்தில் நல்ல பண்பான ஆளுமைப்பண்புகளை அறிவுடன் உணர்வு பொருந்திய விதைகளைத்தான் விதைக்க வேண்டுமென்பது நிறைமொழி மாந்தரின் வாக்காகும். எத்தகைய வசதிகள் வாய்ப்புகள் இருந்தாலும் எவரும் தமது இடர்களினின்றும் மீள்வதற்கு தத்தமது குலதெய்வங்கள், இஷ்ட தெய்வங்களை அழைப்பதுடன் நேர்த்திக்கடனும் வைக்கின்றனர். எனவே எந்தவொரு ஆராய்ச்சிகளும் கருத்தியலாகுமிடத்து அது தத்துவமாகிறது. எனவே விஞ்ஞான அறிவான மெய்ஞ்ஞானமே ஆன்மீக நெறியாகி எல்லோரது வாழ்வையும் சாத்வீகப்படுத்தி வளமாக்கிறது. விஞ்ஞானரீதியாக ஆய்வுசெய்து எமது சமய நெறியில் கூறப்பெற்ற தியான ஒழுக்க நெறியினை உலகளாவிய ரீதியில் வயது வேறுபாடின்றி இருபாலாரும் கடைப்பிடித்து வருவதனைக் காணலாம்.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி, அனுமானம், முடிவு என்ற முறையிலேதான் யாவற்றிக்கும் தீர்வினை முன்வைக்கின்றனர். சமய நெறியிலுள்ள மெய்ஞானிகளும் தமது ஞானத்தினால் கட்புலனறிவினால் பல உண்மைகளை கண்டறிந்துள்ளனர். அவர்கள் ஐம்புலன்களின் அறிவினை ஒருமித்து கட்புலனால் தெளிவினைப் பெற்றனர்.

எனினும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பதால் கிடைக்கப்பெற்ற கருவிகள் எமது சமய நெறியிற்கு பல உதவிகள் செய்கின்றன. எமது சமய செயற்பாடுகள் யாவும் வைதிக முறையிலான வேத மந்திரங்கள் யாவும் ஓதப்பெற்றே இடம்பெறுகின்றன. எனினும் ஓதப்

பெறும் மந்திரங்கள் யாவும் வைதீக மொழியிலான வடமொழியில் சமஸ்கிருதத்தில்தான் உள்ளன. வேதங்கள் யாவும் காதினால் கேட்கப் பெற்று வாயினால் ஓதப் பெற்றவையாகும். எனவே கணினி பொறியில் U.S.B இல் கணினியில் பதியப் பெற்றவையாவும் எடுக்கப்பட்டு தேவைகட்கு உபயோகப்படுகிறது. அம்முறையில் வேத மந்திரங்கள் யாவும் ஓதப்பெற்று இறுவெட்டு வடிவிலும் மேலும் கணனியிலும் உள்ளன. எனவே எமக்கு தேவையான மந்திரங்களை இக்கருவிகளின் மூலம் பதியவைத்து நாம் எங்கு செல்கின்றோமோ அங்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். எனவே எமது சமய நெறியில் வைதிகத்தினின்றும் வழுவாது இருக்க உதவிபுரிகின்றது. எனவே விஞ்ஞானக் கருவிகளை தகுந்த முறையில் எமது சமய நெறிக்கு கூட உதவுகின்றதெனலாம் - விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானம் இரண்டுமே வாழ்வியலுக்கு பெரிதும் உதவுவன.

இன்று யாமெல்லாம் கணினி கருவியில் உள்ளே சென்று ஏதாவது தேடல் செய்ய வேண்டுமாயின், www.எனப் பதிவு செய்து, அதன் பிற்பாடுதான் எமக்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் எமது நெறியில் மூன்று என்பது தத்துவம் சார்ந்தது. சிவனின் வலதுகண் சூரியச்சுடர், இடது கண் சந்திரச்சுடர். மற்றயது நெற்றிக்கண், இவை முச்சுடர்கள். திரயியான வேதங்களாவன இருக்கு, யசுர், சாமம், பூர், புவ, சுவஹ, மூவுலகம், நிலவுலகம் அக்கினி, இடையுலகம் இந்திரன் வான் கடவுள் வருணன், மும்மூர்த்திகள் சிவன், விஷ்ணு, பிரமா, மூவகை சக்தி வீரம், செல்வம், கல்வி மூன்று தேவியர் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி முக்குணங்களாவன தாமதம், இராசதம், சாத்வீகம் முப்பொருள் பதி, பசு, பாசம், மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை முப்பரிமாணம் நீளம், அகலம், உயரம் சிவபிரானின் கூத்து, கொடு கொட்டி, காபாலம், பாண்டரங்கம், முத்தமிழ் இயல், இசை, நாடகம், முப்பழம் மா, பலா, வாழை எனவே கணினியில் பதியப்படும் மூன்று எழுத்துக்களும் ஆன்மீகமானது.

மெய்ஞானமாகியுளது. பிரபஞ்சத்தின் ஓங்கார நாத வடிவமான அ (தோற்றம்) உ(இருப்பு)ம் (ஒடுக்கம்) ஓம் என்ற நாதமே உலக மொழியாகும். அதுவும் மூன்று எழுத்தைக் கொண்டது. இன்று விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும் நாசாவின் நிலையத்தினுள் 'ஓம்' என்ற நாதம் அதாவது ஓங்காரநாதம் கேட்கின்றது என்பது விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களது முடிபாகும்.

www. என்பது இந்து நெறியின் முழுமுதற் கடவுளரான சிவபிரானின் நெற்றியிலுள்ள திரிபுண்டரம் என்ற மூன்று விபூதி குறிகளையும் புள்ளியானது சிவபிரானின் நெற்றிக் கண்ணாகும். சமய நெறியில் கூறப்பெற்ற யோக நெறிப்படி நிலைகளை விஞ்ஞான பூர்வமாக விளக்கி அதன் மூலம் உடல் உளத்தினை எங்ஙனம் ஆரோக்கியமாகப் பேணலாமென்பதனை விளக்குகின்றனர். இவர்களின் விளக்கத்தின்படி எமது சமயநெறியில் கூறப்பெற்றுள்ள உடல் உள ரீதியிலான செயற்பாடுகள் யாவும் விஞ்ஞானத்தினை விட மெய்ஞ்ஞானம் விஞ்சிவிட்டதெனலாம். திருமூலர் உடலினை பிணியின்றி பேணுமிடத்துதான் உள்ளிருந்து இயக்கும் ஆன்மா வளமாகும் உடல் உளத்தினை ஆரோக்கியப்படுத்த பயிற்சி அவசியம் என்பதற்காகவே மனவளக்கலை சேவை ஆற்றுகின்றனர். மனவளக்கலை என்பது புலன்களின் ஆதிக்கத்திற்குள்ளான மனம் எனும் கருவியை நேர்த்தியாக மாற்றி அதன் வழியே வளமான வாழ்க்கையை அமைப்பதற்கான முறையான பயிற்சியே மனவளக்கலையாகும். இப்பயிற்சி நிலையங்களில் ஆரம்பத்தில் மனக்கட்டுப்பாட்டினை கொண்டு வருவதற்கும் உடம்பினை பேணுவதற்குமான உணவுக்கட்டுப்பாட்டுடன் கூடிய பயிற்சிகளை அளிக்கின்றனர். ஆசனப் பயிற்சிகள் ஆற்றுமிடத்து உடம்பின் தசை இழையங்களுக்கும், நரம்புகளுக்கும், உற்சாகம் ஏற்படுவதுடன், குருதி சுற்றோட்டமும் சீராக அமையப் பெற்று உடல் ஆரோக்கியமாகி, பிணி வருவதனையும் தடுக்கின்றது. சமயச் சார்பாக இருந்தாலும் விஞ்ஞான முறையில் இதனை நிறுவியுள்ளனர். கடவுள் நம்பிக்கையற்றவர்கள் கால் போன

போக்கில் என வாழ்பவர்கள் சுலபமாகவே இடர்கட்கு அகவயப்பட்டு உணர்ச்சி மேலிட தம்மையே இழந்து விடுகின்றமையை நாம் காணக்கூடியதாகவுளது. மானிட நேயத்துடன் இயல்பாக சமூக நலன் கருதிய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இறைவனுடன் இணைந்து செயற்படுபவர். இங்ஙனமாக வாழ்பவர்கள் எதையும் அறிவுபூர்வமான விஞ்ஞான ரீதியில் தமது நியமங்களை ஆற்றுவதுடன் உடஉள பிணியினின்றும் வாழ்வர் எனவே இன்று விஞ்ஞானம் கூறுகின்ற அறிவுப் புலமையாவும் எமது சமநெறி மெய்ஞ்ஞானியர் எப்போதோ கூறிவிட்டனரெனலாம்.

விஞ்ஞானம் கிரகங்களின் நிலைகளை மட்டும் ஆராய்ச்சி பண்ணுவதோடு நின்றுவிடுகிறது. ஆனால், வேதங்களின் அங்கமான **கண் போன்ற சோதிட சாஸ்திரம்** கிரகங்கள் அவை அந்தந்த நிலைகளில் இருப்பது உலகை எங்ஙனம் பாதிக்க வைக்கிறது. அவற்றினை எமக்கு சாதகமாக்கிக் கொள்ள என்ன செய்யவேண்டும் என்கிற விடயங்களை சோதிட சாஸ்திரம் விரிவாக கூறுகிறது. சோதிட சாஸ்திரத்தில் கிரக சஞ்சாரத்தினை கணக்கிட கணிதமும் முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, விஞ்ஞானத்தின் வருகைக்கு முன்பேயே சோதிட சாஸ்திரம் விரிவாக கிரக சஞ்சாரத்தினை கூறியுள்ளது.

இன்றைய நவீன விஞ்ஞானத்தினை விஞ்சிய நிலையிலான கருவிகளை இதிகாசப் புராண காலத்தில் பயன்படுத்தியுள்ளனர். ஆகாயவிமானம் பற்றிய செய்திகள் உள. குபேரனிடம் இருந்த ஆகாய விமானம் புஷ்பகம் எனவும், அதனை இராவணன் குபேரனிடம் இருந்து தனதாக்கினான். புஷ்பக விமானத்தில் தான் சீதையை இராவணன் கவர்ந்தான் என இராமாயணம் கூறுகிறது. இராமன் சீதையை ஆகாயவிமானம் மூலமாக அயோத்திக்கு வரும் பொழுது சீதைக்கு இலங்கையின் இயற்கைக் காட்சிகளை காடு, மலைகளை எல்லாம் வர்ணித்து கூறியதாக வால்மீக இராமாயணம் கூறுகிறது. துஷ்யந்தன் சாரதியிடம் வான்வெளி பயணத்தின் பொழுது எத்தகைய அனுபவத்தினைப் பெற்றான்

என்பதனை மேகதூதத்தில் காளிதாசர் விளக்கியுள்ளார். தவிர, இன்றைய சாரதி இல்லாத விமானங்கள் கூட பண்டைக்காலத்தில் இருந்துள்ளன.

**'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்**
**வலவன் ஏவா வானவூர்தி எய்தும் என்ப'**

**– புறநானூறு – 27**

எனவே, ஆன்மீகம் பொதிந்த எமது மெய்ஞ்ஞானமானது விஞ்ஞானத்திலும் எப்பவோ பழைமை கண்டுள்ளது.

வான்பயணம் மட்டுமன்றி, ஆயிரமாண்டுகளுக்கு முன்பே கடல் மார்க்கமாக பயணம் செய்து ஜாவா, சுமத்திரா, சீயம் வரை சென்று ஆட்சிசெய்துள்ளமையுடன் எமது சமய கலாசார பண்பாடுகளையும் பரப்பியுள்ளனர்.

விஞ்ஞானிகள், இருப்பது ஒன்றே அது பிரிக்கமுடியாதது. பகுக்க முடியாதது அது சக்தி (Energy) என்று கூறுகிறார்கள். சக்திக்கு இரண்டு நிலைகள். செயலற்ற நிலை (Static), செயல்படும்நிலை (Kinetie) செயல்படுநிலையில் ஒளி, ஒலி அலைகளாக சக்தி செயற்படுகிறது. ஒளி அலைகளின் அதிர்வுகளை (Wave length) என்றும் ஒலி அதிர்வுகள் (Vibration) என விஞ்ஞானம் கூறுகின்றது.. இவ் அதிர்வுகள் யாவும் தியான நிலையிலுள்ளோர் உணரமுடியாது போய்விடும். எனவே எல்லாவற்றையும் இயக்குகின்ற ஒரு மாபெரும் சக்தியுளது. அது தான் பெரிய சக்தி என விஞ்ஞானம் வியப்படைகின்றது. அச்சக்திதான் இறைசக்தி இதனை திருமூலர் கூறுகின்றார்.

**'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந்தான் உணர்ந்து எட்டே'**

எனவே அறிவியல், ஆன்மீகம் இரண்டும் இணையுமிடத்து வாழ்வு வளமாகின்றது.

ஐஐஐஐ

# மனப்பதிவு

இந்துமதம் என்ன சொல்கிறது பாகம் - *1* என்ற எனது முதல்நூலில் திருக்கோயிலமைப்பு, திருக்கோயில் வழிபாடு செய்யும் முறை, திருவுருவங்களுக்கு ஆற்றப்படும் பூசை வழிபாட்டு நுட்பங்கள், சிவசின்னங்கள் போன்ற விடயங்களை வழங்கியுள்ளேன். அத்துடன் மகோற்சவம், அபிடேகப் பொருட் களின் தத்துவார்த்தம் என்பவற்றுடன் பூசைக்குரிய சாதனங்கள் தொடர்பான கருத்துக்களை விளக்கியுள்ளேன்.

எனக்கு ஆசானாக விளங்கியவர் திரு.வை.கா.சிவப்பிரகாசம் அவர்கள், முதலாம் பாகத்துக்கு ஆசியுரை வழங்கியுள்ளார். அவரது ஆசீர்வாதத்தினால் தொடர்ந்தும்

பாகம் - *2* - மங்கலப் பொருட்களின் மகத்துவம்,

பாகம் - *3* - தத்துவசாரம்

ஆகிய நூல்களை யாவருக்கும் பயன்பெறும்வண்ணம் எழுதும் அமைப்பு கிடைக்கப்பெற்றது. வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் எனது பாகம் - *2* நூலுக்கு ஆசியுரை வழங்கி மேலும் எழுதும்படி ஊக்குவிப்பு அளித்தவர்.

மேலும், தற்பொழுது எனது கணவரின் ஊக்குவிப்பாலும், மகன் ஞானம் பாலச்சந்திரன் உந்துதலினாலும்தான் தொடர்ந்தும் இத்தலைப்பிலான நூலினை எழுதமுடிகிறது. இறை நோக்கிய பயணம்... பாகம் - *4* என்ற நூல் சகல மட்டத்தினருக்கும் சமயம் சார்ந்த விளக்கங்களையும் அது தொடர்பான அறிவினையும் எளிய நடையில் பெற வாய்ப்பாகிறது.

யாமெல்லாம் தற்போது பயணத்தில் தரித்து நிற்கின்றோம். எமது பயணம் நேர்த்தியாக அமைய வேண்டுமாயின், ஒரேயொரு சக்தியினாலேதான் முடியும். அது இறை சக்தி. எனவே இறை நோக்கிய பயணத்தில் இறைசக்தியை எவ்வெவ்வழிகளில், எத்தகைய முறையில் வழிபாடு இயற்றினால் எமது பயணம் நேர்த்தியாக அமையும் என்பதற்கு அமைய கருத்துக்களை முன்வைத்துள்ளேன். நாம் எவ்வெவ்வழிகளைப் பின்பற்றி உரிய பயணம் முழுமைத்துவம் பெறுவதற்கு ஏற்ற கருத்துக்களையும் பதிய வைத்துள்ளேன். எனவே, இந்நூல் வாயிலாக யாவரும் அதுதொடர்பான பயனைப் பெறுவீர்கள் என்ற முழுமையான நம்பிக்கையுடன் எனது ஐந்தாவது பாகத்தினை எழுதவுள்ளேன்.

**எல்லோரும் சுகமாக வாழ்க !**
**எல்லோரும் நோயின்றி வாழ்க !**
**எல்லோருக்கும் மங்களம் உண்டாக !**
**ஒருவரும் துன்புறாதிருக்க !**



சுபம்

## குறிப்புகள்